
FOR LIBRARY

# RAMANATHAN COLLEGE



University of Jaffna
373
IRA
250144(AR; Main)

## SPECIAL NUMBER 1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR [redacted] LIBRARY
373
IRA AR

With Best Compliments
from Principal.

UNIVERSITY OF SRI LANKA . A CAMPUS
RECEIVED
1980 -9- 8
PERIODICALS
DIVISION
★ LIBRARY ★

# RAMANATHAN COLLEGE

★

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

ARCHIVES

★

University of Jaffna
250144
Library

250144
250144

## SPECIAL NUMBER 1980

√N.A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Magazine Committee

Mrs. Y. Rajaratnam
Mrs. G. Somasundaram
Mrs. B. Shanmugalingam
Mrs. S. Appadurai
Miss Y. Kanagaratnam
Mr. A. Kalyanasundaresan
Mr. S. Amirthalingam
Mrs. R. Vinayagamoorthy
Miss L. Sinnathamby

## மலர்க்குழு

திருமதி Y. இராசரத்தினம்
திருமதி G. சோமசுந்தரம்
திருமதி B. சண்முகலிங்கம்
திருமதி S. அப்பாத்துரை
செல்வி Y. கனகரத்தினம்
திரு. A. கல்யாணசுந்தரேசன்
திரு. S. அமிர்தலிங்கம்
திருமதி R. வினாயகமூர்த்தி
செல்வி L. சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேர் பொன். இராமநாதன்
# 50ஆவது மறைவு ஆண்டு நினைவு மலர்,
# அதிபர் திருமதி இ. அருணசலம்
# சிறப்பு மலர்

373
IRA

AR

**1980**

ARCHIVES


THIS SPECIAL NUMBER IS PRIMARILY
A COMBINATION OF A MEMORIAL
TO OUR FOUNDER
THE LATE
**SIR PONNAMPALAM RAMANATHAN**
ON HIS 50TH DEATH ANNIVERSARY
AND A SPECIAL SUPPLEMENT TO OUR
RETIRING PRINCIPAL
**MRS. R. ARUNASALAM**

250144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும்
கருணாகரக் கடவுளே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரிப் பாட்டு

(திரு. சு. நடேசபிள்ளை அவர்களால் 1930ஆம் ஆண்டு ஆக்கப்பட்டது)

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பண்பிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதுங்கா ணம்மானை
பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவதுசீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்றிலக மாய்விளங்கும்
பொன்ருத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை
அரிபடர்ந்த மதர்க்கண்ணு ரரியயனுங் காணுத
விரிமலர்ச்சே வடிகாணும் வியப்புடைத்திக் கல்லூரி
பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்சீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி
திங்கள்சேர் வாண்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ்சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி
பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி
தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயன்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி
கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணைபயில் வியப்புடைத்திக் கல்லூரி
நித்திலத்தை யொத்தநகை நாண்மடவார் நிரைநிரையாய்ச்
சித்திரத்தைப் போலியங்குஞ் சீருடைத்திக் கல்லூரி
வன்னமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்
சொன்னகலை பலபயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி
பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்
நூல்நூற்று நலம்புரியும் நோன்புடைத்திக் கல்லூரி.

ஈழத்தைக் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்
சூழ்ராம நாதன்றன் கல்லூரி — வாழியவே
தாவி லூழித் தண்ணளி
மாவலி கங்கை மணலினும் மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONTENTS


| | pages |
|---|---|
| College Song | |
| Messages | |
| ஆசிரியர் குரல் | |
| Principal's Report ... . ... ... | 1 |
| இராமநாதனும் இந்துக்கல்வியும் ... ... ... | 7 |
| சேர் பொன். இராமநாதன் ... ... ... | 9 |
| இராமநாதன் அவர்களின் கல்விப்பணி ... ... ... | 11 |
| அமைவுடன் அரும்பணி ஆற்றிய அதிபர் ... ... ... | 13 |
| அரும்பணி புரிந்த அதிபர் ... ... ... | 14 |
| கல்லூரி மரபைப் பேணிக்காத்த அதிபர் ... ... ... | 16 |
| An Ideal Teacher and Principal ... ... ... | 18 |
| First among Equals ... ... .. | 20 |
| A Soft Spoken Principal ... ... ... | 22 |
| Mrs. R. Arunasalam — An Appreciation ... ... | 23 |
| மாவலி மணலிற் பல்லாண்டு வாழிய ... ... ... | 24 |
| உள்ளத்தனையது உயர்வு ... ... ... | 25 |
| நிறைகுடம் ... ... ... ... | 27 |
| இன்சொல்லின் இருப்பிடம் ... ... ... | 30 |
| Founder's Memorial Address 6th December 1978 ... ... | 32 |
| The First Prize Giving Report—1915 ... ... ... | 37 |
| Sir P. Ramanathan's Select Speeches in Council—Excerpts ... | 40 |
| திருமதி கமலாதேவி அருள் தியாகராசா ... ... | 43 |
| திருமதி N. P. பிள்ளை ... ... ... | 45 |
| திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன் ... ... ... | 45 |
| திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் ... ... ... | 45 |
| எழுத்தறிவித்தவர் அ. சண்முகராசா ... ... ... | 46 |
| திருமதி தில்லிமலர் பசுபதி ... ... ... | 47 |
| மறக்க முடியாத சம்பவம் ... ... ... | 48 |
| திருமதி புஷ்பராணி திடவீரசிங்கம் ... ... ... | 48 |
| காலை இனிது ... ... ... | 49 |
| பெண்ணின் பெருமை, எனது செல்லப்பிராணி ... ... | 50 |
| உங்களுக்குத் தெரியுமா ?, பிறந்த பொன்னாடு ... ... | 51 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | Pages |
|---|---|
| எனது கதை | 52 |
| வாழிய எங்கள் அதிபர் | 53 |
| Memories of Our Principal During my School Days | 54 |
| என் தந்தை, இன்பமாய் வாழலாம் | 55 |
| இராமநாதன் கல்லூரி | 56 |
| நாமும் சமய வாழ்வும் | 57 |
| My Dog | 58 |
| My self, My Grandfather, My Village | 59 |
| Our Principal | 60 |
| Our Principal, My Life at School | 61 |
| எமக்கு இனியவர் | 62 |
| குறளில் காதல் | 63 |
| உயர்தர மாணவர் மன்றம் | 65 |
| புவியியல் மன்றம் | 66 |
| Games & Athletic Report | 67 |
| அருந்ததி இல்லம் | 68 |
| லீலாவதி இல்லம், தமயந்தி இல்லம் | 69 |
| கண்ணகி இல்லம், Guide Report | 70 |
| இராமநாதன் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபை | 71 |
| பாடசாலைகளில் பெற்றோர்களுடைய பங்கு | 73 |
| Ramanathan College Staff | 74 |
| Vote of thanks | 76 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Dr. Lady Ramanathan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Message from the Hon. Minister of Education

I have great pleasure in sending this message for the special Souvenir which is being published on the occasion of the retirement of Mrs. Rajanayakam Arunasalam, the Principal of Ramanathan College, and the fiftieth death anniversary of Sir Ponnambalam Ramanathan.

Sir Ponnambalam Ramanathan's contribution to Education in Sri Lanka is unique, when compared to his achievements in other fields. In 1913 Sir P. Ramanathan started Ramanathan College for girls and followed this up with the establishment of Parameshwara College for boys — the present University of Jaffna.

I understand Mrs Arunasalam possesses many admirable human qualities such as humility, simplicity, honesty and affability. These qualities are very essential for a successful Principal. It is often summarily assumed that teachers mould pupils and Principals mould schools.

I wish the Principal a long and happy retired life. May Ramanathan College grow from strength to strength and the memory of the great Founder Sir P. Ramanathan continue to be an inspiration for future citizens.

*Ranil Wickremasinghe*
*Minister of Education*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சி முதல்வரின்

# ஆசிச் செய்தி

இலங்கை அரசியலிலும் தமிழ் மக்களின் வரலாற்றிலும் ஒப்பற்ற ஒரு இடத்தைப் பெற்றவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். அவர் தமிழ் ஆண்களும் பெண்களும் தமது பண்பாட்டுக்கு ஏற்ற சூழலில் கல்வி பெறவேண்டும் என்ற அவாவினால் பரமேஸ்வரா கல்லூரியையும், இராம நாதன் கல்லூரியையும் நிறுவினார். பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமாக இன்று மாறிவிட்டது. ஸ்தாபகரது நோக்கங்களைப் பூரண மாகச் செயல்படுத்தும் நிறுவனமாக இராமநாதன் கல்லூரி இன்று மிளிர்வது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

தமிழ்ப் பெண்களை, தமிழ் அறிவும் சைவப் பண்பும் உள்ளவர்களாக மாத்திரமன்றி சகல கலைகளிலும் வல்ல பூரணத்துவம் பெற்ற கலாராணிகளாக ஆக்குவதற்கு பல தலைமுறைகளாகப் பணிபுரிந்து வருவது இராமநாதன் கல்லூரியாகும். சிறப்புப்பெற்ற வாழ்க்கைத்துணை தமக்கு அமையவேண்டும் என்று விரும்புவோர் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் மத்தியில் அப்படி ஒருவரைத் தேடுவது இன்று வழக்கமாகி விட்டது. கல்வியின் நோக்கம் சிறந்த மக்களை ஆக்குவதே என்ற இலட்சியத்தில் பூரண வெற்றி பெற்ற ஒரு கல்வி நிலையம் இராமநாதன் மகளிர் கல்லூரி என்றால் அது மிகையாகாது.

அதிபர் திருமதி ஆர். அருணாசலம் அவர்கள் கல்லூரி வளர்ச்சிக்காகக் கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக ஆற்றிய சேவை மகத்தானது. கல்லூரியின் வரலாற்றில் அவரது சேவை மிக முக்கிய இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இராமநாதன் கல்லூரியின் விசேட மலருக்கு என் ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சி யுற்றுப் பிரகாசிக்க எல்லாம வல்ல இறைவன் அருளை வேண்டுகின்றேன்.

வணக்கம்

**அ. அமிர்தலிங்கம்**
எதிர்க்கட்சி முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Hon. Minister of Justice

I am aware of the valuable services rendered by the J/Ramanathan College in the field of education. All good work done by this College will no doubt bring in to focus some of the ideals Sir Ponnampalam Ramanathan was trying to achieve during his life time. Even one institution of the type of Ramanathan College can reflect the range and fecundity of talent available in the Jaffna peninsula. The achievements of Ramanathan College, therefore, deserve the attention of every one of us in this country.

The Ramanathan College is what it is today due to the efforts of its tutorial staff and the parents. Mrs. R. Arunasalam the present Principal is one of those teachers who have been serving the College for a long period. She has a service of over three and a half decades in this College. Her efforts in promoting religious education and science education are well known. It is noteworthy that her retirement this year coincides with the fiftieth death anniversary of Sir Ponnampalam Ramanathan, the founder of the College. Let me along with others wish Mrs. R. Arunasalam long life and every success.

*Nissanka P. Wijeyeratne*
**Minister of Justice**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. வி. தர்மலிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி இ. அருணாசலம் அவர்கள் 1980ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இளைப்பாறுவதை ஒட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். திருமதி அருணாசலம் அவர்கள் தமது சேவைக்காலத்தின் பெரும்பகுதியை, 1944ஆம ஆண்டு தொடக்கம் 1980 வரை கல்லூரியின் சேவைக்கே அர்ப்பணித்துள்ளார்கள். இவரது முப்பத்தாறு வருட சேவையில், உதவியாசிரியராக, விசேட பதவியாசிரியராக, துணை அதிபராக, அதிபராகக் கடமை யாற்றியுள்ளார். அவர் எந்த விதமான பதவியை வகித்தாலும் "சேவை"யே தமது கோட்பாடாகக் கொண்டிருந்தார்.

இவர் கடமைமீது கொண்ட அயராத பற்றுக் காரணமாகவும் சுயநல மற்ற சேவையினாலும் கல்லூரி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை, கல்வித் துறையில் மட்டுமலலாமல், கலை கலாசார, விவசாய, உடற்பயிற்சிப் போட்டிகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. 1972ஆம் ஆண்டிலும், 1977ஆம் ஆண்டிலும் உடற்பயிற்சிப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதன்மை பெற்றதையும் குறிப்பிடலாம்.

அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்ட கல்லூரிக் கட்டடங்கள் உருவாவதற்கு இவரே மூலகாரணமாகவும இருந்தார். 1970ஆம் ஆண்டில் ஒன்றரை இலட்சத்துக்குமேல் செலவு செய்து கட்டப்பட்ட மிகக் கவர்ச்சியான, அழகான மண்டபம் எப்பொழுதும் அவரது அப்பழுக்கற்ற சேவைக்கு ஒரு நினைவாலயமாக விளங்கும்.

இவர், வருங்காலத்தில் ஆனந்தமான ஓய்வைப் பெற்று நலமுடன் வாழ வேண்டுமென்று இதயசுத்தியோடு வாழ்த்துகின்றேன்.

**வி. தர்மலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Secretary and Director-General

It is with great pleasure that I send this message to the special Souvenir which is to be published to honour Mrs. R. Arunasalam, Principal of Ramanathan College, who is to retire on 1st September 1980 after thirty six years of loyal and dedicated service to the school.

Mrs. Rajanayakam Arunasalam, I understand, had devoted her entire working life to Ramanathan College. She had started her career as an Assistant Teacher in the school and had risen to become its Vice-principal and thereafter Principal. She had devoted all her energies to the cause of Ramanathan College which she so resolutely and successfully built up to be one of the leading Colleges of the Island.

The achievements of Ramanathan College in the field of Fine Arts, Education and Sports during the Principalship of Mrs. R. Arunasalam speak volumes for her ability, earnestness and dedication.

I am happy to mention that she has lived up to the noble ideals set by the great leader Sir Ponnampalam Ramanathan, the founder of the College, whose fiftieth death anniversary falls this year.

Let us all wish her long life and also prosperity and happiness in her retirement.

*Eric de Silva*
*Secretary,*
*Ministry of Education*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Deputy Director General

I have been requested by the organisers to send a Message for a Special souvenir to be issued in connection with the retirement of Mrs. R. Arunasalam, Principal of Ramanathan Madya Maha Vidyalaya.

All of us in Sri Lanka have recognised with the greatest of respect Sir Ponnambalam Ramanathan as one of our national patriots. One of his highly honoured works was the establishment of Ramanathan College of Jaffna. This school from time immemorial has been recognised as an education institution promoting religious education and also cultural arts. We have known Mrs. R. Arunasalam as an Assistant Teacher, a Deputy Principal and as Principal of this school.—For more than 36 years she had carried on the work of her predecessors. Having known the vast majority of teachers in service during the last decade in particular, I could without doubt rate Mrs. Arunasalam at a very high level. She is a school teacher loyal to her school and to her charges and true to her spirit both in the class room and outside. We have had occasion very often to obtain her services in organising cultural shows, promoting activities in the field of religion. Mrs. Arunasalam left nothing short in all the work she had undertaken. It was due to her majestic efforts and her hard work that Ramanathan College had been declared a Madya Maha Vidyalaya in the cultural arts.

Mrs. Arunasalam was considered a good teacher both among the Tamils in the North as well as the Sinhalese in the South and among all nationalities, whatever part of the country, they lived in.

It was just recently that Mrs. Arunasalam and Ramanathan College helped us in a great way in forging national unity among the Sinhalese and the Tamils. The Sinhala / Tamil Student Exchange Programme between the Kegalle and Jaffna students took place in March, 1980 in Jaffna.

May I offer my good wishes to Mrs. Arunasalam in her retired life. I only hope that although she is retired from her former institution she will continue her good work as a teacher.

May she live long!

23 April, 1980

George Mendis
*Deputy Director General of Education*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Regional Director of Education, Jaffna

I am happy to send this Message of good wishes to Mrs. R. Arunasalam, who retires as Principal from Ramanathan College, Chunnakam, having worked in the Institution during a tenure of nearly Thirty Six Years.

It is a matter of pride that she is able to hand over the school to her successor in the height of fame with splendid achievements to her credit in the field of Sports, Music and Education.

The secret of her success is due to many factors, the most important of those being her sincerity of purpose, her devotion to duty and loyalty to an ideal.

Mrs. Arunasalam's disciplined life and her strong religious convictions have evoked in those who came in contact with her, a desire to emulate such ideals. Her spirit of service and her humility have had a wholesome influence in the school. Her missionary zeal for work, her intergrity of character and her pleasing manners have won the love, regard and esteem of all-students, teachers, parents and public alike.

Furthermore, the long years she worked in this school as an Assistant Teacher, and Deputy Principal, had given her the chance of becoming sufficiently acquainted with the difficulties and problems of administering the school. This knowledge has helped her not only in keeping alive the traditions of the school and the aspirations of her predecessors but in meeting the new challenges with courage and determination.

She launched on building projects, which many others would have hesitated to consider. She has to her eternal credit the School Hall, the Agricultural Unit, the Home Science Laboratory and the School Boundary wall.

My Departmental Officers and I have always received her ready co-operation at all times. Her's is a well earned retirement. I wish her many more years of good health, happiness and peace.

T. Manickavasagar
*Regional Director of Education,*
*Northern Region*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Additional Director of Education, N. R.

I feel privileged to have been asked for a message to the Special Souvenir being published on the occasion of the retirement of Mrs. R Arunasalam, the present principal of Ramanathan College and of the 50th death anniversary of Sir Pon. Ramanathan.

I have known Mrs. R. Arunasalam as the principal for many years and I was impressed by her enthusiasm for all forms of activities in her school. Her cheerful manners, her genial ways and her sense of responsible devotion made her acceptable in any company.

Mrs. R. Arunasalam is an outstanding, popular lady principal who brought Ramanathan College to its pre-eminent position in the field of Fine Arts, Sports and Education. With her total personality she was able to solve many an intricate problems. Her character of high probity and singular devotion to duty have left a profound impression on the students, officials and public alike.

It is noteworthy that this coincides with the 50th death anniversary of the founder Sir Pon. Ramanathan, one of the greatest national leaders of Sri Lanka. Sir Pon. Ramanathan had very healthy and contemporary views on Education. One of his aims was to give Education to Tamil girls in a Hindu environment emphasising the moral and spiritual upliftment of the students. I am glad to know that Mrs. R. Arunasalam was highly inspired by the noble ideals and aspirations of the Founder and dedicated her entire teaching life for the progress of Education at Ramanathan College.

May Ramanathan College attain greater heights and May the memory of its great Founder continue to be an inspiration for generation yet unborn.

Let me also wish Mrs. R. Arunasalam many more years of health, happiness and fruitful service to the nation

K. Sivanathan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்
### திரு. வ. ந. நவரத்தினம் அவர்களின்
# ஆசிச் செய்தி

## பண்புகளின் மைல்கல் இவர்

*நாவலர் பெருமானின் சைவம், தமிழ்ப்பணி வளர்ச்சியின் இலட்சியத்தின் அடிப்படையிலே, சேர் பொன். இராமநாதனால் அமைக்கப்பட்ட இக் கல்லூரி, பல்லாண்டுகாலம் அரும்பணியீட்டி வெற்றியீட்டியுள்ளது.*

*நாவலரினதும், சேர் பொன். இராமநாதனினதும் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சைவத்தையும், தமிழையும் போற்றிப் பேணியதுடன் பெண் குலத்தின் தமிழ்ப்பண்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற வரையறை எல்லைக்குள் வைத்துப் பேணிப், பெண்ணின் பெருமையைப் பெருக்கியவர். அதன் பெருமைக்குரியவர் திருமதி ஆர். அருணாசலம் என்பதில் இந்த நாடே மகிழ்ச்சியடைகிறது.*

*தனிமனிதன் சமுதாயத்தோடு கொள்ளும் தொடர்பினை, வலுவுள்ளதாக்கி மனிதனைப் பயனுள்ளவனாய் மாற்றுவதே கல்வியின் முழுமையான இலக்காகும். நான்—என் குடும்பம்—என் இனம் என்ற பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டு சர்வ உலகையும் நேசிக்க வல்ல, பரந்த மனப்பான்மையோடு கூடிய உன்னத இலட்சியத்தைக், கல்வி மூலம் படிப்படியாக வளர்த்திடல் வேண்டும்.*

*இந்த அரும் தொண்டிலும் திருமதி அருணாசலம் தனது பேராற்றலை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார்.*

*மனித சமுதாயத்தின் நெகிழ்ச்சியும், மென்மையும் கொண்ட உள்ளங்களை உருவாக்குவன அழகியற் கலைகளேயாகும். இக் கலைகளைப் பயிற்றுதலும் சிறந்த ஒரு சமூகப்பணியாகும். இல்லங்களிலே அன்பும், இனிமையும், எழிலும் தவழ, மாதரினத்தின் மாண்பை உயர்த்தும் பணியிலும், கலைஞர் குழாத்தை உருவாக்கும் பணியிலும், மேற்கொண்டு அயராது உழைத்துவரும் இராமநாதன் கல்லூரியை, அதன் புனிதம் கெடாது பேணி வளர்த்த பெருமையிலும் தவறாது திருமதி அருணாசலம் பங்கு பெறுகிறார் என்றால் அது அவரின் புனித கடமையால் வந்தது.*

*திருமதி அருணாசலம் சகல துறைகளிலுல் உயர்ந்தவர். அவர் எம்முடன் தொடர்புடையவர், இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் என் தொகுதியைச் சேர்ந்தவர் என்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.*

**வ. ந. நவரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
## பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின்

# ஆசிச் செய்தி

### மகத்தான தொண்டு

"அன்ன சத்திர மாயிரம் வைத்தல் ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும் பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்"

என்பது புதுமைக்கவிஞர் பாரதியார் பாடல். எல்லாத் தானங்களிலும் மேலானது கல்வித்தானமாகும். அதுவும் பெண்கள் கல்வித்தானம் ஆயிரமாயிரம் புண்ணியம் கொண்டது.

இதற்காகவே சேர் பொன்னம்பலம் இராமநாதன் பெண்களுக்கென ஒரு கல்லூரியை மருதனுமடத்தில் அமைத்தார். பெண் சமுகத்தின் அச்சாணி பெண்ணின் ஒழுக்கம், கட்டுப்பாடு, அன்பு, இல்வாழ்க்கை ஆகியவற்றைக் கொண்டே ஓர் இனத்தின் பெருமையை மக்கள் கணிப்பர். தமிழ் மாணவிகள் தங்கள் சமயம், பண்பாடு என்பவற்றின் அடிப்படையிலே வாழ்க்கை நடத்துவதற்குரிய வழியை வகுப்பதற்கே இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்டது.

இந்த இலக்கிலிருந்து எள்ளளவேனும் விலகாது இராமநாதன் கல்லூரியிலே கடமையாற்றி வந்தவர் திருமதி அருணசலம் அவர்கள். ஒரே கல்லூரியிலே தொடர்ச்சியாக 35 ஆண்டுகளாகக் கடமையாற்றும் பேறு சிலருக்கே கிட்டும். இத்தகைய அரிய பேற்றினைப் பெற்ற திருமதி அருணசலம் அவர்கள், இராமநாதன் கல்லூரியில் 1945ஆம் ஆண்டிலிருந்து உதவி ஆசிரியராகவும், 1958ஆம் ஆண்டு தொடக்கம் முதலாம்தர விசேட ஆசிரியராகவும், 1966ஆம் ஆண்டிலிருந்து துணைத்தலைவராகவும், 1968இல் பதில் அதிபராகவும் பதவி ஏற்று, 1971ஆம் ஆண்டிலிருந்து கல்லூரித் தலைவராகவும் ஆற்றிய பணி மகத்தானதாகும்.

தலைமை ஆசிரியர்களுக்கு வேண்டிய தகைமைகளையெல்லாம் நிரம்பப் பெற்றிருக்கும் இப் பெருந்தகை, தனது தலைமையில் இக் கல்லூரியைச் சிறந்த பெண்பாடசாலைகளில் ஒன்றாக மிளிரச் செய்துவிட்டார். திருமணம் பேசி வரும்போது ஆண்பகுதியினர், பெண் இராமநாதன் கல்லூரியிலா படித்தவர் என்று கேட்குமளவிற்கு இக் கல்லூரியின் பெயரை நிலைநாட்டின பெருமை அவருக்குண்டு.

தன்னைக்காண வருவோரை இன்முகத்துடன் வரவேற்று வழியனுப்பும் பண்பு நான் அவரிடம் கண்ட சிறந்த பண்பாகும். நான்தான் கல்லூரி அதிபர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இறுமாப்புடன் இயங்காது, பணிவுடன் செயலாற்றுபவர் அவர்; ஆயினும் கட்டுப்பாட்டையும ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் சிறிதேனும் வழுவாதவர்.*

*இத்தகைய உயர்ந்த பண்புகள் வாய்ந்த திருமதி இ. அருணசலம் தலைமைப் பதவியிலிருந்து இளைப்பாறுதல் கல்லூரிக்குப் பேரிழப்பாகும. ஆயினும் வருங்கால அதிபர்களுக்கு அன்னாரின் சேவை முன்மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் அமையுமென்பதில் ஓர் ஐயமுமில்லை.*

" தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே
உண்டா லம்மவிவ் வுலகம் "

*என்ற சான்றோர் வாக்கிற்கமையத் தன்நலம் கருதாது சமூகத்தின் நலனுக்காக மகத்தான தொண்டாற்றிய திருமதி இ. அருணசலம் அவர்கள், சகல நலன்களும் பெற்றுப் பல்லாண்டு வாழக் கூத்தருட் கூத்தன் ஆடவல்லானை வழுத்துகின்றோம்.*

**கலாநிதி சு. வித்தியானந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Circuit Education Officer

I deem it a great pleasure and privilege to send a message to the Special Souvenir that is being got up on the occasion of the retirement of the Principal Mrs. Rajanayakam Arunasalam, and to mark the fiftieth death anniversary of Sir Ponnampalam Ramanathan who has rendered immense service to the nation and in the field of education. The crying need for a girls school at a time when the tradition and culture of the Nationals were at peril, the great leader established Ramanathan College in the year 1913. Thanks to sir Ponnampalam Ramanathan for we see today the rapid progress made by the school in the field of education in keeping with the tradition and culture of the Tamils.

The Contribution made by the ex-principals in building up this institution had been the main factor for the rapid development of this institution. The present Principal Mrs. Rajanayakam Arunasalam who is at the verge of retirement had sacrificed her full period of service to build up this school as a teacher and also as principal. Under her steady administration the school has come up to the level of any leading school in the country. She is pious, simple and modest and her qualities are exemplary in keeping with the tradition of the school. It is with fullest confidence I say that none other than Mrs. Arunasalam could have done better in promoting the ideals of the illustrious founder Sir Pon. Ramanathan. I take this opportunity to join the sponsors of the function to wish Mrs. Arunasalam a very happy and peaceful retired life.

*S. Thananchayan*
*(C. E. O.—Manipay)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட் 5 | இராமநாதன் கல்லூரி | 1980

## ஆசிரியர் குரல்:

தமிழ்ப்பெண்களின் வளர்ச்சிக்கென சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் நிறுவிய இராமநாதன் கல்லூரிக்கு இன்று வயது அறுபத்தேழு. அவரது இலட்சியத்தை இறுதிவரை கடைப்பிடித்து உன்னதமான உயர்வுக்கு வழி வகுத்தவர்கள் இக் கல்லூரியின் தலைமைப்பீடத்தை அலங்கரித்த அதிபர்களும் ஆசிரியர்களுந்தான் என்றால் மிகையாகாது. அந்நிய மதத்தாலும், பண்பாட்டினாலும் சிக்குண்டு சீரழிந்த தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்துவதற்கு ஒரே வழி தமிழ்ப்பெண்களுக்கான சைவக் கல்விமுறையை ஏற்படுத்துவதுதான் என உறுதிகொண்ட உத்தமர் இராமநாதன் இவ்வறிவாலயத்தை ஸ்தாபித்தார். அன்னார் மறைந்தும் மறையாத மாமேதையாக இன்றும் எம் மனத்தில் நினைவுற்றிருக்கும் வண்ணம் அவரது அழியாத கோலங்களாக விளங்கும் கலைக்கூடமே சான்று பகரும். அவர் தமது சொத்துச் சுகங்களையெல்லாம் வாரி இறைத்து, தமிழ்க்குலப் பெண்களுக்கு நிரந்தரமான கல்விச் செல்வத்தைக் கையளித்துச் சென்றுள்ளார். கல்விச் சொத்தைக் கையளித்துச் சென்ற கனவான் இராமநாதன் மறைந்து இன்று 50 வருடங்களாகின்றன. அவரது கல்விப்பூங்காவில் மலர்ந்த அறிவுமலர்கள் ஆயிரமாயிரமுண்டு. ஆனால் 1973ஆம் ஆண்டுக்குப்பின் மலரும் இக் "கல்லூரி மலர்" புதுப் பொலிவோடும் நறுமணத்தோடும் அன்னாரது பாதங்களில் பாசத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்ற தென்பதில் நாம் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

அழகாகப் பூத்துக் குலுங்கும் இம் மலரை அன்பின் காணிக்கையாக அணிவிப்பவர் நம் கல்லூரித் தலைவி, அன்புக்கரசி திருமதி அருணாசலம் அவர்களேயாவர்.

இராமநாத வள்ளலின் தொண்டுக்கு, அன்புக் காணிக்கையாக அதிபர் அருணாசலம் "மலர்" சொரிந்தால், நாம் அதிபர் அருணாசலத்துக்கு என்னதான் கைமாறு செய்யலாம்? ஆம்! ஆயிரக்கணக்கான மாணவர்களின் அன்புத் தாயாக, அரவணைக்கும் அன்னையாக, இன்சொல்லின் இருப்பிடமாக விளங்கும் எம்மவர், நல்லவர், வல்லவராம் திருமதி அருணாசலத்துக்கு கல்லூரி மாணவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், பெற்ரேர், ஊழியர், நலன் விரும்பிகள் ஆகியோர் தங்கள் இதயத் தடாகத்திலிருந்து கொய்தெடுத்த மலராக இச் "சிறப்பு மலரை" அன்பின் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றனர். இம்மலரை அணைவரும் மணந்து இன்புற வேண்டுமென விழைகின்ரேம். இளம் வயதில் பதவிபெற்ற, இளகிய மனம் படைத்த அனிச்சமலராம் அதிபர் திருமதி அருணசலம் அவர்கள் அன்னவர் கணவர், புதல்வியுடன் ஆண்டுபல நலம்பெற்று வாழ எல்லாம்வல்ல கூத்தப் பிரானை இறைஞ்சுகின்ரேம்.

*The name of Mrs. Rajanayakam Arunasalam will be writ large on the pages of history of Ramanathan College and the progress made under her regime will serve as a monument for her more lasting than marble or bronze.*

நன்றி, வணக்கம்.

## Courtesy

*Courtesy gives you more efficiency*
*Cheerful manners give you more popularity*
*Courtesy begets courtesy*
*Courtesy enriches those who receive,*
*it does not impoverish those who give.*
*Make courtesy your code, service your sanctity.*
*Avoid argument—it gets you no where.*
*Make courtesy your code, service your faith*
*Guard against your language—it pays.*
*Make courtesy your code, service the spirit*
*Politeness is not servility*
*Politeness is dignity.*

*You are polite if you are cheerful and courteous, attentive and helpful, pleasant and smiling.*

*Courtesy prevents the friction that wastes energy*
*Why win an argument and lose a friend?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR PRINCIPAL



**Mrs. R. Arunasalam**
B. A., Post. Graduate Trained
PRINCIPAL GRADE I

15–5–44 — 31–8–80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mrs. Y. Rajaratnam**
B. A. (Madras), Dip. in Ed. (Ceylon)
DEPUTY PRINCIPAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

இராமநாதன் கல்லூரியில் 35 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதைப் பெறற்கரிய பெரும் பேறெனக் கருதுகிறேன். உதவி ஆசிரியையாய், உப அதிபராய், அதிபராய்ப் பணியாற்றி ஓய்வுபெறும் இச் சமயத்தில் யான் அதிபராய்க் கடமையாற்றிய பதின்னோராண்டு காலத்தில் கல்லூரியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றிய ஓர் அறிக்கையைத் தொகுத்து அளிக்க விரும்புகிறேன்.

1913ஆம் ஆண்டு 101 மாணவிகளுடனும் 12 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இங்கு கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையினால் வளர்ச்சியுற்று, யான் அதிபராகப் பதவியேற்ற 1969ஆம் ஆண்டு 803 மாணவிகளையும் 39 ஆசிரியர்களையும் கொண்டு விளங்கியது. பதின்னோராண்டு காலத்தில் இத் தொகை மேலும் வளர்ச்சியுற்றது. இன்று 1500க்கு மேற்பட்ட மாணவிகள் இங்கு கல்வி பயில்கின்றனர். ஆசிரியர் தொகையும் 61ஆக அதிகரித்துள்ளது.

க. பொ. த. உயர்தர வகுப்பில் ஏற்பட்ட வளர்ச்சி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய பாட நெறிகளுடன், கலைப்பிரிவில் வர்த்தகப் பாடநெறியும், மனைப் பொருளியல் நெறியும், நுண்கலைப் பாட நெறியும் இன்று கல்லூரியில் இடம்பெற்றுள்ளன. எம் கலைப்பிரிவு மாணவிகளுக்குத் தமிழ், வடமொழி, இந்து கலாசாரம், புவியியல், வரலாறு, அரசியல், பொருளியல், வர்த்தகம் கணக்கியல், மனைப்பொருளியல், சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் வாய்ப்பினை அளித்துள்ளோம். க. பொ. த. உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட காலந் தொடக்கமே, கலைப்பிரிவில் சிறந்த தரத்தை நிலைநாட்டி வந்திருக்கின்றோம். இப்பொழுது விஞ்ஞானப் பிரிவிலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய கீழ்க்காணும் புள்ளி விபரம் மூலம் இதனைத் தெளிவாக அறியலாம்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு | மொத்தமாகப் பரீட்சை எடுத்தோர் | 4பாடத்தில் சித்தி பெற்றோர் | 3பாடத்தில் சித்தி பெற்றோர் | பல்கலைக் கழக அனுமதி | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கலை | விஞ்ஞானம் | வைத்தியம் |
| 1970 | 13 | 8 | 2 | 8 | — | — |
| 1971 | 12 | 4 | 5 | 5 | — | — |
| 1972 | 25 | 6 | 2 | 4 | — | 1 |
| 1973 | 38 | 7 | 12 | 5 | 1 | 1 |
| 1974 | 58 | 13 | 20 | 2 | 1 | — |
| 1975 | 72 | 24 | 19 | 6 | 1 | — |
| 1976 | 128 | 32 | 40 | 7 | 2 | — |
| 1977 | 123 | 44 | 24 | 11 | 1 | — |
| 1978 | 93 | 21 | 26 | 7 | — | — |
| 1979 ஏப்றில் | 111 | 21 | 25 | | | |
| 1979 ஆகஸ்ட் | 51 | 6 | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979ஆம் ஆண்டு ஏப்றில் மாதப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 37 மாணவிகளுக்கும் ஆகஸ்ட் மாதப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 10 மாணவிகளுக்கும் பல்கலைக் கழகம் முதற் படிவங்களை அனுப்பியுள்ளது. இவ்வாண்டு நூறுக்கு மேற்பட்ட மாணவிகள் வேறு பாடசாலைகளிலிருந்து க. பொ. த. உயர்தர வகுப்புகளில் சேர்ந்துள்ளனர்.

ஏனைய பரீட்சைகளிலும் எம்மாணவிகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். 1978ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரண பரீட்சையில் எம் கல்லூரி மாணவி மானிப்பாய் வட்டாரத்தில் மிகச் சிறந்த மாணவிகளெனத் தெரிவு செய்யப்பட்ட ஐவரில் ஒருவராக இடம்பெற்றார். 1972ஆம் ஆண்டு வடமாகாண ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட 8ஆம் வகுப்புத் தேர்வில் ஒரு மாணவி திறமைச் சான்றிதழ் பெற்றார். 1973ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் எம் கல்லூரி மாணவியே மிகக்கூடிய சராசரிப் புள்ளிகளைப் பெற்று மாகாணத்திலேயே முதல்வராகத் தேர்ச்சி பெற்றதுடன் தமிழ், குடியியல் ஆகிய பாடங்களுக்கான பரிசில்களையும் பெற்றார். 5ஆந் தரத்தில் 7 மாணவிகளும் 7ஆந் தரத்தில் 3 மாணவிகளும் ஜாதிக நவோதய புலமைப் பரிசில்களுக்குரியராகினர். 1972ஆம் ஆண்டில் சங்கீதத்திற்கான விசேட புலமைப்பரிசிலையும் ஒரு மாணவி பெற்றார்.

உடற்பயிற்சித் துறையிலும் எம் கல்லூரி இக்காலப் பகுதியில் சிறந்த சாதனையை நிலைநாட்டியுள்ளது. அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் 1971ஆம் ஆண்டு குருநாகலில் நடைபெற்ற போட்டியில் எமது சிரேஷ்ட குழு 3ஆம் இடத்தைப் பெற்றது. 1972ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டியில் எம் கனிஷ்ட பிரிவினரும் சிரேஷ்ட பிரிவினரும் முதலிடத்தைப் பெற்றனர். 1977ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற போட்டியில் எம் கனிஷ்ட பிரிவினர் முதலிடத்தைப் பெற்றனர். 1979ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற போட்டியில் சிரேஷ்ட பிரிவினர் இரண்டாம் இடத்தைப் பெற்றனர். மாவட்ட ரீதியில் நடைபெற்ற போட்டிகளிலும் அணிநடைப் போட்டியிலும் எம் கல்லூரி பல தடவைகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஏனைய போட்டிகளிலும் எம் கல்லூரி மாணவிகள் குறிப்பிடத்தக்க இடங்களைப் பெற்றுள்ளனர். 1969ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டுவரை நடைபெற்றுவந்த அகில இலங்கைத் தமிழ்த்தின விழாப் போட்டிகளில் ஆறு முதலிடங்களும் ஒரு இரண்டாமிடமும் கிடைத்தன. கல்வித் திணைக்களம் நடாத்தும் இசை நடனப் போட்டிகளிலும் அகில இலங்கைப் பரிசில்கள் பெற்றுள்ளோம். எம் மாணவிகளின் நாட்டிய நாடக, நடன நிகழ்ச்சிகள் கொழும்பு, கண்டி, பண்டாரவளை, யாழ். வீரசிங்கம் மண்டபம் ஆகிய இடங்களில் இடம்பெற்றுப் பலரது பாராட்டுக்கும் உரியவாயின. வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திவந்த பேச்சு, கட்டுரை, இசை, நடனப் போட்டிகளிலும், எம் மாணவிகள் கலந்துகொண்ட வேறு போட்டிகளிலும், எம் கல்லூரிக்குப் பல முதலிடங்கள் கிடைத்துள்ளன.

சமயத்துறையில் எம் கல்லூரி மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. கொழும்பு விவேகாநந்த சபை, யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, கலாஜோதி மன்றம், தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றம் ஆகியன நடாத்தும் சமயபாடப் பரீட்சைகளுக்குத் தோற்றி எம் மாணவிகள் பலர் சிறப்பாகச் சித்தி எய்தியதுடன் அகில இலங்கைப் பரிசில்களுக்கும் உரியராயினர். விவேகாநந்த சபைப் பரீட்சையில் 2 மாணவிகளும் கலாஜோதி மன்றம் நடாத்திய பரீட்சையில் 2 மாணவிகளும், தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றம் நடாத்திய பரீட்சையில் 1 மாணவியும் தங்கப்பதக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பரிசிலாகப் பெற்றுள்ளனர். 2 மாணவிகள் வெள்ளிப் பதக்கங்களைப் பரிசிலாகப் பெற்றுள்ளனர். ஒரு மாணவி விவேகாநந்த சபையினர் அளிக்கும் புலமைப் பரிசிலுக்கும் உரியராயினர்.

வளர்ந்து செல்லும் மாணவர் தொகைக்கு ஏற்பப் பல புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர் ஆசிரியர் அனைவரும் ஒன்றுகூடுதற்கேற்ற ஒரு பெரிய மண்டபமும், நவீன மனையியல் ஆய்வுகூடமும், முதலாம் வகுப்புச் சிறுருக்கான வகுப்பறையும், விவசாயத்திற்கான ஒரு கட்டடமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. கல்லூரியைச் சுற்றி மதிலும் எழுப்பப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் அமைப்பதற்கு வேண்டிய உதவியும் ஆதரவும் அளித்தது எமது பெற்றோர் ஆசிரியர் சங்கமே.

போதிய தளபாடங்கள் இன்மை கல்லூரியின் வளர்ச்சியையும் செயற்றிறனையும் பெரிதும் பாதிப்பதாயுள்ளது இக்குறை நீக்கப்படின் கல்லூரி மேலும் உயர்நிலை அடையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாண்டு எம்கல்லூரி அகில இலங்கை நுண்கலைக் கல்லூரிகளுள் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டு பெப்ரவரி மாதம் திறப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி நிறுவுநர் சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய விருப்பத்திற்கமைய நுண்கலைத்துறையில் மேலும் எம் கல்லூரி சிறப்பிடம் வகிக்கும் காலத்தை எதிர்நோக்குகிறோம்.

கல்லூரி ஆசிரியர்கள் ஊழியர்களின் ஒத்துழைப்புடனும் உப அதிபர் திருமதி யோ. இராசரத்தினம் அவர்களின் உறுதுணையுடனும் கல்லூரி வளர்ச்சிக்கு என்னால் இயன்றதைச் செய்துவிட்டேன் என்ற மனநிறைவுடன், இக் கல்லூரி வருங்காலத்தில் மேலும் பல்துறை வளர்ச்சி பெற்றுச் சிறப்புடன் திகழ இறைவன் அருளை வேண்டி நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE PRINCIPAL RECOLLECTS

I have had the greatest pleasure of serving at Ramanathan College for 35 years as an assistant teacher, as the Vice-Principal of the College, and as the Principal of the College for 12 years. I deem it a great honour, and duty to write a report on the progress of Ramanathan College during the 12 full years of my service as Principal.

Ramanathan College for Girls was opened in 1913 with 101 students and 12 teachers. The untiring efforts of the Principals and teachers - from then on made the College gain in strength, and when I assumed duties as Principal in 1969-there were 803 students and 39 teachers. The number of students—attending the school increased gradually and now there are 1500 students and 61 teachers.

**G. C. E. Advanced Level Classes**: Mention must be made of the progress of work in the G. C E.—A/L Classes. There has been a marked improvement in the successes of both the Biological Sciences and Physical Sciences. The arts section of the college bears a name that Ramanathan College is a stronghold for Arts education. Performances of students at the G. C. E. A/L examinations have stood testimony to this saying New courses such as Commerce, Home Economics and aesthetics have been introduced in the G. C. E. A/L classes. The students who sat the G. C. E. A/L examinations offering the new subjects have faced satisfactorily well. The following is an analysis of the results of the G. C. E. A/L classes from 1970—1979.

| Year | Total No. | 4 subjects | 3 subjects | University Admission | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Arts | Science | Medicine |
| 1970 | 13 | 8 | 2 | 8 | — | — |
| 1971 | 12 | 4 | 5 | 5 | — | — |
| 1972 | 25 | 6 | 2 | 4 | — | 1 |
| 1973 | 38 | 7 | 12 | 5 | 1 | 1 |
| 1974 | 58 | 13 | 20 | 2 | 1 | — |
| 1975 | 72 | 24 | 19 | 6 | 1 | — |
| 1976 | 128 | 32 | 40 | 7 | 2 | — |
| 1977 | 123 | 44 | 24 | 11 | 1 | — |
| 1978 | 93 | 21 | 26 | 7 | - | — |
| 1979-Apl | 111 | 21 | 25 | — | — | — |
| 1979-Aug | 51 | 6 | — | — | — | — |

Of these who sat the G. C. E. A/L Examination in April 1979, 37 students have received the first application forms from the University, and 10 have received the forms—on the results of the August 1979 Examination more than 100 students have joined the G. C. E. A/L classes this year.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Best Performance at other Examinations**: At the "Best Student Selection"—on the results of the G. C. E. O/L Examination of 1978, one of our students was selected as one among the first five in the circuit. In 1973 our student scored the highest total at the Grade 8-N. P. T. A. Examination. She was placed first in the Nothern Region and she received the Best Performance Prizes in Civies and Tamil. Jathika Navodhaya Scholarships were received by 7 students in Grade 5 and 3 students in Grade 7. In 1972 one of our students received the Music scholarship.

**Physical Education**: At the All Island competitions our squads won the following places during the following years:

1971 — Senior squad — 3rd place.
1972 — Senior and Junior Squads 1st place
1977 — Senior squad — 2nd place.
1979 — Senior squad — 2nd place.

Our students have distinguished themselves at the inter school P. T. competitions held at the circuit and Regional levels.

**Other Competitions**: At the All Island Tamil Day Competitions, our students have won 6 first places and one second place. At the All Island — Music and Dance competitions too, our students have scored first places. Our students have won many first places in the competitions organised by the N. P. T. A. in such activities as — Elocution (English and Tamil) Essay (English and Tamil) Music and Dance.

**Religious Activities**: According to the wishes of our Revered Founder Sir P. Ramanathan, our school students have performed excellently well at examinations conducted by the Vivekananda Society, The Saiva Paripalana Sabhai, The Kalajothy Manram and The Hindu Tamil Men's Society Tellippallai. Our students have received gold medals for best performance. One of our students won the Vivekananda Society Scholarship for best performance.

**Buildings and Facilities**: Many new buildings have been put up to accommodate the increasing number of students joining the year after year. A big assembly Hall, A Home Science laboratory with modern facilities, a set of class rooms for Grade I students, an agriculture unit, and a wall round the entire premises was built during the last eleven years of my service. All these could be built, because of the unstinting and lavish help of the Parent—Teacher's Association, the old-girls of the college and the member of the State Assembly for the Manipay electorate.

There is yet a great need for adequate furniture and facilities to cater to the needs of all the one thousand and five hundred students. A better and brighter future can be assured once these needs are fulfilled.

**Cultural Activities**: Good progress in cultural activities has been observed by many distinguished visitors to the college. In February 1980—Ramanathan College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was selected as one of the Colleges of Fine arts in the Island—to foster the growth and education of Fine Arts in the Advanced Level Classes. This is a 'Dream Come True' of our late Founder Sir P. Ramanathan and his son-in-law Late Senator P. Natesan.

I am proud of my long association with Ramanathan College and I lay down my position of Principalship with the greatest satisfaction that I have done my Best. I thank my full team of Staff Members and Duputy Principal Mrs. Y. Rajaratnam for their quiet and unstinted support and co-operation without which my task would have been difficult. I thank the Parent Teachers' Association and the Officials of the Education Department for helping me to serve the College successfully.

May the Almighty Lord Shiva shower His Blessings on Ramanathan College, to shine as a Great Institution of Learning and to stand as monument and symbol of Hindu Womanhood.

**Om! Shanthi!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதனும் இந்துக் கல்வியும்

வ. ஆறுமுகம்
சிரேட்ட விரிவுரையாளர்
கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

"எக் காலத்திலும் தலைசிறந்த இலங்கையர்" என்று, இலங்கையின் பிரதம மந்திரியான காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயகாவினுல் போற்றப்படும் அளவில் ஈழத்தின் இணையற்ற தலைவனுக, இந்துக்களின் தவப்பயனுக, தமிழர்களின் தலைமகனுக வாழ்ந்து மறைந்த பெரியார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் மண்ணுலகை நீத்து 50 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. மறைந்தும் மறையாத மாமேதையாகத் திகழும் அன்னுர் ஆற்றிய தொண்டு பல்துறைகளிலும் பரவியிருந்தது. அரசியல், கல்வி, சமயநெறி, சமூகச் சீர்திருத்தம், கலை அனைத்தும் அவரது பணியினுல் பயனடைந்தன. சில துறைகளில் அவருடைய சேவை காலம் என்ற கவியிருளினுல் ஒளிமங்கிவிட்டது. வேறு சிலவற்றில் அவரது பணி மறக்கப்பட்டு விட்டது. ஆனுல் கல்வித்துறையில், குறிப்பாக இந்துக் கல்வி வளர்ச்சியில், அவருடைய பெயர் அன்றுபோல் இன்றும் அணியுடன் திகழ்கின்றது.

இராமநாதன் வாழ்ந்த காலம் இலங்கைக் கல்வியில் அந்நிய மதக்குழுக்களின் ஆதிக்கம் மேலோங்கிய காலம். மேலைநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த கிறீத்தவப் பாதிரிமாரின் பிடியில் எமது சொந்தக் கலாசாரம், பாரம்பரியம் யாவும் கட்டுண்டிருந்த காலம், கிறீத்தவம் என்ற காற்று பௌத்தம், சைவம் எல்லாவற்றையும் தள்ளி ஒதுக்கிக்கொண்டிருந்த காலம். அதன் தாக்கத்திற்குள்ளாகிச் சுதேசிய மதமரபிலான கல்வி முயற்சிகள் செயலறச் செய்யப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில், கோல்புறாக் விதப்புரைகளின் விளைவாக நாட்டின் கல்வியில் கிறீத்தவக் குழுக்களின் பிடி மேலும் வலுப்படுத்தப் பட்டிருந்தது. 'கிறித்தவக் குழுக்கள் பாடசாலைகளை அமைத்துச் செயற்பட்டு வந்த இடங்களில் அரசுப் பாடசாலைகள் அமைக்கப்படத் தேவையில்லை' என்ற உரையின் பயனுக நாட்டின் சில பகுதிகளில் கிறீத்தவக் குழுக்கள் கல்வித்துறையில் ஏகோபித்த செல்வாக்கினைப் பெற்றன. அத்தகைய பகுதிகளுள் யாழ்ப்பாணமும் ஒன்று. அரசுப் பாடசாலைகள் இல்லாத நிலையில், வேறு வழியேதுமின்றி, சைவப் பிள்ளைகளும் கிறீத்தவப் பள்ளிக்கூடங்களையே நாடினர். அங்கே பயின்ற இளந் தலைமுறையினர் தமது சொந்த மரபையும் பண்பாட்டையும் மறந்து அந்நிய பாதையில் செல்லத்தலைப்பட்டனர். சைவத்தைக் காட்டிலும் கிறீத்தவத்தைப் பற்றி நன்கறிந்த நிலையில் இருந்த தமது பிள்ளைகளின் நிலையைக் கண்ட பெற்ருேரின் நெஞ்சங்கள் குமுறின. மக்களுடைய உள்ளத்தில் கிளர்ந்தெழுந்து, வெடித்து வெளியே வரத் தயாராகவிருந்த, 'சைவப் புரட்சி'க்குத் தளபதியாகத் தோன்றியவர் நல்லைநகர் தந்த நாவலர்பெருமான், அவருடைய முயற்சியின் வழிநடந்து, அவருக்குப் பின் 'தலைமைப் பொறுப்பை' ஏற்று இந்துக்களின் மரபினை வளர்த்த பெருமைக்குரியவர் இராமநாதன் அவர்கள்.

யாழ்ப்பாணத்துச் சைவர்களின் சீர் குன்றிய நிலையினையும், செயலற்ற தன்மையினையும், கண்டு சீறியெழுந்த நாவலர் சைவசமய மரபில் கல்வியை வளர்ப்பதிலும், மக்களிடையே விழிப்புணர்ச்சியைப் பரப்புவதிலும் செய்த சேவையும், பெற்ற வெற்றியும் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டன. நாவலருடைய அந்தப் பணியைத் தொடர்ந்து, வளர்த்து, வலுவூட்டிய இராமநாதன் அக்காலச் சூழ்நிலையில் நம்மவர்க்குக் கிடைத்த வரப்பிரசாதமாவார். நாவலர் நாட்டில் எழுப்பிய குரலைச் சட்ட நிரூபண சபையில் எதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொலித்தவர் இராமநாதன். நாவலரின் மறைவுக்குப் பின் கிறீத்தவக் குருமார் கையாண்ட நெறியற்ற முறைகளை வன்மையாகக் கண்டித்த இராமநாதனுடைய கருத்துக்கள் 1884ஆம் ஆண்டுச் சட்ட நிருபண சபைப் பதிவேட்டில் காணக் கிடக்கின்றன.

'எப்பாடு பட்டாவது இங்கிலீசு படித்தாற் போதும்' என்ற எண்ணமும், அந்த மோகத்தில் தமது சொந்த மொழி, பண்பாடு ஆகியவற்றைப் புறக்கணிக்கும் மனோபாவமும் சமுதாயத்தில் மலிந்து கிடந்த நாளில், அந்த 'நோய்க்கு' மருந்துதேட முற்பட்டார் இராமநாதன். ஆங்கில அறிவும் அதனுடன் இணைந்த மேற்கத்திய விஞ்ஞான அறிவும் வேண்டற்பாலன என்பதை ஏற்றுக்கொண்ட இராமநாதனை நோக்கிய 'சவால்' அந்தக் கவர்ச்சி சொந்தக் கலாசாரத்தை மறக்கச் செய்வதைத் தடுப்பதாகும். அதை ஏற்று, எதிர்த்து, வெற்றி காண்பதில் இராமநாதன் நாட்டிய சாதனைதான் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும்.

இராமநாதன் அரசாங்க சேவையில் இருந்து 1905இல் இளைப்பாறித் தமது இலட்சியமாகக் கொண்ட கல்விப்பணியில் ஈடுபட்டபோது அவரை எதிர்நோக்கிய பெரும் பிரச்சினை சைவச் சிறுமியருக்குத் தகுந்த கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். அக்கால நிலையில் சைவச் சிறுமியர் எதுவித கல்வியும் பெறுமலோ அன்றேல் கிறீத்தவப் பாதிரிமாருடைய பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியோ நேரிட்டது. அதனைத் தவிர்த்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் உயர்ந்த தரத்திலான கல்வியைச் சைவ சமயச் சூழ்நிலையில் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு 1913ஆம் ஆண்டு சனவரி மாதம் 20ஆம் நாள் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதைப்போல ஆண்களுக்கு மேற்கத்திய கல்வியின் சிறப்பம்சங்களையும், தமிழ், சங்கீதம் ஆகியவற்றின் சிறந்த இலக்கியச் சிருட்டிகளையும் சைவசமய சூழ்நிலையில் இணைத்து அளிக்கும் நோக்கோடு ஆகஸ்ட் 22, 1921ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. தாம் நிறுவிய கல்வி நிலையங்கள் காலந்தோறும் நிலைபெற்று நிற்கஅவர் ஏற்படுத்திய நிதி அவருடைய வள்ளன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பாரம்பரியத்தை மறந்து பிற நாகரிக மயக்கத்தில் மூழ்கியிருந்த மக்களைத் தட்டியெழுப்பிய இராமநாதன் பழமையை மட்டும் பேணவில்லை. புதிய கருத்துக்கள், இலட்சியங்கள் ஆகியவற்றை இளஞ் சந்ததியினர் 'உட்கொள்ள' வேண்டிய தேவையை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால், அப்படி உட்கொள்ளும்போது "அத்தகைய கருத்துக்கள் எமது சிறப்புப் பொலிந்த பாரம்பரிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் மாசுபடுத்தாமற் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்பதே இராமநாதனின் எச்சரிக்கை.

பாடசாலைகளைத் தாபித்துப் பாரம்பரியத்தைப் பாதுகாத்த இராமநாதன் இந்துக்கல்வியின் விருத்திக்கு ஆற்றிய இன்னொரு தொண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றத்துக்கு உறுதுணையாய் இருந்தமையாகும். இருபதாம் நூற்றுண்டில் சைவ மரபிலான கல்வியானது ஒழுங்கான, கட்டுக்கோப்பான நிறுவன ரீதியில் வளருவதற்கு வழிவகுத்த சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தனது 'பிள்ளைப் பருவத்தில்' பலம்பெற்றுப் பொலிந்து விளங்கப் பெரிதுப் பாடுபட்டோருள் இராமநாதனும் ஒருவர்.

அத்தகைய பெரியாருக்கு அஞ்சலி செய்யும் நாம், அவருடைய நாமம் நிலைத்து நிற்கச்செய்வது மட்டுமல்லாமல், அன்னாரது இலட்சியங்களையும் போற்றிப் பேணுதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr. Nissanka Wijeyaratne as the Minister of Education,
(Hon. Minister of Justice) & Mrs. Wijeyaratne
at Sir Ramanathan day & Prize Day — 1979.



Mr. & Mrs. T. Manickavasagar DE/NR. at the A. L. Dinner – 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. C. De. S. Kulatilake, Chief Education Officer (Aesthetic Unit) at the opening Ceremony of the Aesthetic centre at Ramanathan College



Mr. & Mrs. V. N. Navaratnam, M. P. for Chavakachcheri and Mr. V. Tharmalingam, M. P. for Manipay at our A. L. Dinner — 1979.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் பொன். இராமநாதன்

கலாநிதி அ. சண்முகதாஸ், யாழ் பல்கலைக்கழகம்

சேர் பொன். இராமநாதன் எங்கள் நாட்டு வரலாற்றிலே அழியாத புகழைப் பெற்றுவிட்டார். அவர் ஓர் அறிஞர்; அரசியல்வாதி; ஆராய்ச்சியாளர்; சமூக சேவையாளர்; கல்வியாளர். இவ்வாறு பல்வேறு துறைகளிலே துறைபோய ஒரு பெருமகனாக அவர் திகழ்ந்த காரணத்தினாலேயே வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் காலம் அவருடைய பெயரை மறக்கவோ மறைக்கவோ முடியாதுள்ளது. இத்தகைய பல்வேறு முகங்களுடைய அப்பெரியார் பற்றி எண்ணும்போது பல்கலைக் கழக ஆசிரியன் என்ற வகையிலே யான் தரிசிக்கும் முகத்தினை இங்கு விளக்குதல் பொருத்தமெனவே எண்ணுகிறேன்.

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்பது வள்ளுவன் வாக்கு. சேர் பொன். இராமநாதன் இலங்கை மக்களின் உயர் கல்வி பற்றிச் சிந்தித்தமை அவ்விலக்கணத்துக்கு ஓர் இலக்கியமாக அமைந்ததெனலாம். இலங்கையிலே பல்கலைக்கழகம் நிறுவுவதுபற்றிய சிந்தனை எழுந்தபோது அவர் அதுபற்றி விமரிசித்தவை வெறுமனே பல்கலைக்கழகம் பற்றியவை மட்டுமல்லாமல் ஒரு பெரிய வாழ்வுத் தத்துவத்தையே குறிப்பனவாக அமைந்தன. பிரித்தானிய அரசாங்கம் அன்று இலங்கையிலே ஒரேயொரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதே சாலச் சிறந்தது என எண்ணியது. இந்த வேளையிலேதான் சேர் பொன். இராமநாதன் கூறினார்:

> ''இலங்கை முழுவதற்கும் ஒரு பல்கலைக்கழகமும் ஒரு கல்லூரியும் அமைப்பது என்னும் எண்ணம் முடியாததொன்றாகும். எங்கள் நாட்டின் இளைஞர்களை இவ்வெண்ணம் வெகுவாகப் பாதிக்கும். குடிசனங்கள் கூடிய பாரிய பகுதிகளிலே அமைந்தனவாகப் பல பல்கலைக்கழகங்கள் இலங்கையிலே எமக்கு வேண்டியனவாயுள்ளன.''

அவர் திரும்பத் திரும்ப இக்கருத்தினை வலியுறுத்தியபோதும், அவருக்கும் பிரித்தானிய அரசுக்கும் நன்கு தெரியும் இலங்கையிலே பல பல்கலைக்கழகங்கள் உடனடியாக அன்று அமைக்கமுடியாதென்று. எனினும், நல்லவிடயமொன்றை யாம் எண்ணும்போது அதன் மகோன்னதமான நிலையினையே எண்ணிச் செயற்பட வேண்டுமென்பது சேர் பொன். இராமநாதனின் சிந்தனையினின்று வெளிப்படுகின்றது. மகோன்னதமான நிலையினை எண்ணுதலை எம்மிடையே பலர் செய்யக் கூடும். ஆனால், அதனைச் செயற்படுத்துதலிலே சிலர்தான் ஈடுபடுகின்றனர் என்பதை எம் நடைமுறை வாழ்க்கையிலே யாம் காணக்கூடியதாயுள்ளது. சேர் பொன். இராமநாதன் அத்தகைய சிலருள் ஒருவராவர்.

பிரித்தானிய அரசியல் யந்திரம் இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகமே என்று எண்ணியபோது இராமநாதன் அவர்கள் பல பல்கலைக்கழகங்கள் பற்றி எண்ணியது இந்துத் தமிழர்களுடைய பண்பாடு, பாரம்பரியம் ஆகியனவற்றைப் பேணவும் விருத்திசெய்யவுங் கூடிய ஒரு பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில் அல்லது தமிழர் பெரும்பான்மையாக வாழும் இடமொன்றிலே அமைக்க வேண்டுமென்பதற்கேயாகும். அது சுயநலச் சிந்தனை என்று அன்று குற்றங் கூறியிருக்கலாம். அவர் ஓர் அரசியல்வாதியுமாக இராஜதந்திரியுமாக அமைந்தது மட்டுமன்றி, எல்லா இனங்களையும் நேசிப்பவராகவும் அமைந்தார். அதனால் நேரடியாக யாழ்ப்பாணத்திலே ஒரு இந்துப் பல்கலைக்கழகம் அமையுங்கள் (இதனை அவர் நேரடியாகக் கேட்டிருந்தால் சிலவேளை பிரித்தானிய அரசு இணங்கியிருக்கவும் கூடும்) என்று கேட்காமல், இலங்கையின் முக்கியமான கேந்திர நிலையங்களிலே அவற்றை அமைக்கும்படி வேண்டினார். பிரித்தானிய அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு இணங்கவில்லை. இராமநாதன் அவர்கள், அதனால் மனஞ் சலிக்கவுமில்லை.

எண்ணுவதை உயர்வாக எண்ண வேண்டுமென்பதை அவர் செயற்படுத்த முனைந்தார். பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகப் பிரச்சனைக்கு முன்னரே தாபிக்கப்பட்டபோதும், அக் கல்லூரி யாழ்ப்பாணத்திலே ஒரு பல்கலைக்கழகமாகத் திகழவேண்டுமென அவர் எண்ணினார். அதுபோல இராமநாதன் பெண்கள் கல்லூரியும் பல்கலைக்கழகமாக மாறவேண்டுமென அவர் எண்ணினார். பெரியவர் எண்ணினாற் பேசவும் வேண்டுமோ? தீர்க்கதரிசனம் எல்லோருக்கும் கைவரக்கூடிய காரியமல்லவே? இன்று யாழ்ப்பாணத்திலே அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அத் தீர்க்கதரிசனத்தின் சான்றாக அமைகின்றது. சேர் பொன். இராமநாதன் தாபித்த பரமேஸ்வராக்கல்லூரியும், இராமநாதன் பெண்கள் கல்லூரியின் ஒரு பகுதியும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முக்கிய கேந்திர நிலையங்களாக இன்று அமைந்திருத்தலை ஒருகணம் எண்ணும்பொழுதுதான் ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'' என்னுங் கூற்றின் சரியான முறையான தாற்பரியத்தை யாம் விளங்கிக்கொள்ளக் கூடியதாயுள்ளது

சேர் பொன். இராமநாதனின் பலத்தினையும் பலவீனத்தையும் விமரிசிக்கும் ஒரு காலகட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதன் எப்பொழுதுமே பூரணமான பலத்தினை உடையவனாகத் திகழ்ந்ததில்லை. பலவீனமும் அவனுடைய வாழ்விலே ஒரு பகுதியாக அமைவதுண்டு, இராமநாதன் அவர்கள் இலங்கையிலே வாழ்ந்த மனிதர்களுள் ஒருவர்தான். ஆகவே அவரிடம் மனிதக் குணங்கள்தான் இருந்தன. ஆனால், இந்த உலகிலே வாழ்ந்து மடிந்துபோன பல்லாயிரக் கணக்கான மனிதர்களை வரலாறு நினைப்பிலே தேக்கி வைப்பதில்லை. சிலரையே அது நினைவிலே வைத்துள்ளது. அத்தகைய சிலருள். சேர் பொன். இராமநாதனும் ஒருவராவர்.

> ''நான் ஒரு இலங்கையன் என்றால், சேர் பொன்னம்பலம் இராமநாதன் பற்றி விசேடமாகப் பெருமைப் படுவேன்.''

என்றும்,

> ''சேர் பொன்னம்பலம் இராமநாதன் அகில உலகப் புகழ்பெற்ற ஒரு தேசியவாதி.''

என்றும் பிறநாட்டார் புகழுகின்ற வாழ்வு கொண்டவர் அவர். புகழுரைகள் என்றுமே மலிவாகக் கிடைப்பனவல்ல. எம்முடைய உழைப்பு, அறிவு, புத்தி சாதுரியம், பரந்த நோக்கு ஆகியனவற்றை ஒட்டியே அவை நமக்குக் கிடைக்கின்றன. அந்த வகையிலே இராமநாதன் அவர்கள் அத்தகைய புகழுரைகளுக்குத் தகைமையுடையவராகவே திகழ்ந்தார்.

அவருடைய பல்கலைக்கழகம் பற்றிய மகோன்னத எண்ணத்துக்குச் சான்றாக விளங்குவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளே இன்றும் நிலவுகின்ற பரமேஸ்வர ஆலயமாகும். எம்முடைய பல்கலைக்கழகத்தின் இலட்சியம் ''வித்தை வினயம் தரும்'' என்பதாகும். நாம் சாதாரண மனிதர்முன்னே பணியாவிடினும் ஓர் அதிமானிட சக்திக்கு முன்னே பணிந்தேயாக வேண்டுமெனப் பரமேஸ்வர ஆலயம் பறைசாற்றிக்கொண்டு பல்கலைக் கழக வளவினுள்ளே அமைந்துள்ளது, ''திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்'' என எம்மைவிட மேலான எவரையுமே நாம் வேண்டிக்கொள்ளலாமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் அவர்களின் கல்விப்பணி

க. சி. குலரத்தினம்

(கௌரவ ஆசிரியர்: மில்க்வைற் செய்தி)

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் செய்த சமயத்தொண்டு, அரசியல் தொண்டு, தேசத்தொண்டு போலக் கல்வித்தொண்டும் பெரியது. அவரின் கல்விக் கொள்கையை ஆரம்பத்தில் எல்லோரும் விளங்கிக்கொள்ளவில்லை. இன்று எல்லோரும் நன்ருய் விளங்கிக்கொண்டுள்ளார்கள்.

நாட்டில் கட்டாயக்கல்வி, இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, சமயக்கல்வி, தர்மீகக்கல்வி என்றெல்லாம் அமைய அறுபதாண்டுகளுக்கு முன் வித்திட்ட பெரியவர் இராமநாதன் அவர்கள். இரண்டு தலைமுறை காலத்துக்கு மேலாகி மூன்ருந் தலைமுறையினரும் அவர் வகுத்த வழியில் கல்வி கற்கின்ருர்கள்.

இராமநாதன் தாமே வேதம், ஆகமம் உபநிடதம், கீதை, இதிகாசங்கள், புராணங்கள், திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் என்னும் பாரம்பரிய நூல்களில் நன்ருக ஊறிப் பழுத்தவர். அவர் எங்கள் நாட்டுக்கும் இனத்துக்கும் மதத்துக்கும் அமையக்கூடிய சனுதன தர்மத்தையே பெரிதும் விரும்பினுர்.

கல்வி சமயஞ் சார்ந்ததாய் அமைதல் வேண்டும். அது உழைப்புக்கும் உள வளச்ச்சிக்கும் வழிகாட்டவேண்டும். திரிகரண சுத்திக்கும் காரியசித்திக்கும் அடிகோலவேண்டும் என்று கருதினுர். பாடசாலைக் கல்வி காலையில் வழிபாட்டுடன் ஆரம்பித்து, மாலை வழிபாட்டுடன் நாட்பாடம் நிறைவேற வேண்டும் என்ருர். வழிபாடில்லாத கல்வி கல்வியாகாது. செய்யுந் தொழிலே தெய்வம் எனக் கருதுவதற்கு வழிபாட்டோடுகூடிய கல்வியே அத்திவாரமாயமைவது. பள்ளித்தலம் அனைத்தும் கோயில்கள் செய்வோம் என்றும், மெய்ஞ்ஞானம்இல்லாத விஞ்ஞானம் குருடு என்றும், கல்வியின் அனர்ந்த வர்க்கம் சமயம் என்றும் பிற்காலத்தவர் பெருமையோடு இன்று பேசுகின்ருர்கள்.

இராமநாதன் அவர்களின் கல்விக் கொள்கையைப் பலர் ஐம்பதாண்டுகளுக்கு முன் விளங்கிக்கொள்ளாதவராயும் இருந்தார்கள். எல்லோரும் கல்வி கற்றல் வேண்டும், கல்வி கட்டாயமானதாயமைதல் வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவே அவர் வாக்குரிமைக்கு முன் கல்வி கிடைக்கவேண்டும் என்ருர் (Education must preceed franchise). குதிரைவண்டியில் குதிரையை முன்புறத்திலேயே பூட்டுவது போலக் கல்வி முதலில் அமையவேண்டும் என்ருர். கல்வியில்லாதவர் காகம், கோழி முதலிய சின்னங்களுக்குக் கன்னப் புள்ளடி போடும் வகையிலமைந்த வாக்களிப்பு முறை ஐம்பதாண்டுகளாகியும் இன்னும் மாறவில்லை. நாடு முழுக்க ஒரு லட்சம் ஆசிரியர்கள் கல்வி கற்பித்தும் எம்மவர் எழுத்தைப் பார்த்து வாக்களிக்கப் பழகவில்லை. இது பழைய பல்லவியின் பிழை.

இராமநாதன் அவர்கள் இருபெருங்கலைக் கல்லூரிகளை மிக விசாலமான நிலப்பரப்பில் அமைதியான குளிர்மையான சூழலிலே யாழ்ப்பாணத்திலே அமைப்பதற்குத் திசை திருப்பிவிட்டவர் அரியாலை சட்டத்தரணி காசிப்பிள்ளை அவர்கள். கொழும்பில் சுகஸ்தானத்தில் வாழ்ந்தவரை, ''ஐயா யாழ்ப்பாணத்தை முன்னேற்றுங்கள்'' என்று இங்கே திசை திருப்பிவிட்டார். திசை திரும்பிய ஆறு எமக்கு வளஞ் செய்தது.

நாட்டுக்குக் கல்விப்பணி புரியவந்த இராமநாதன் அவர்கள் தம்பேர்த்தியாரையும் தாயாரையும் நினைத்தார். தாய்மை உள்ளத்தை அறிந்தார். தசரதனும் தாயொக்கும் அன்பில் தரணியை ஆண்டதை அறிந்தார். தாயொருத்தி பதினறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதகுருமாருக்குச் சமம் என்னும் அயர்லாந்துப் பழமொழியை உணர்ந்தார். புராணேதிகாசங்களில் வரும் பாரத மணிகளை நினைந்தார். செம்பியன் மாதேவியார், கோப்பெரும் பெண்டு, குந்தவை, வானவன் மாதேவி முதலாய வரலாற்றுப் பெண்களை நினைந்தார். மங்கையர்க்கரசியார், புனிதவதியார், திலகவதியார் முதலான திருமுறைப் பெண்களை நினைந்தார். திருவள்ளுவர்வகுத்த இல்லாளை, பதிவிரதைகளை, சகதர்மிணிகளை நினைத்தார். மங்கையர் மாண்பினை உணர்ந்தார். நம்நாட்டில் மங்கையரை உருவாக்க விரும்பினர். தாய் படித்தவளாயிருந்தால் அவள் பிள்ளைகளேயன்றிச் சுற்றமும் சூழலும் சமூகமும் திருந்தும் எனத் துணிந்தார்.

பெண்களுக்கான கல்லூரியை மருதனர் மடத்தில் விசாலமான வளவில் உறுதியான கட்டடமமைத்து நாளது 20-1-1913இல் நல்ல வேளையில் நாட்பாடத்தை ஆரம்பித்தார். மகளிர் குருகுலவாசஞ் செய்து உடனுறைந்து பணிவன்புடன் பாடம் படிக்க வழிவகுத்தார். நாளாந்த பாடங்களோடு ஞானசாத்திரம், தர்மசாத்திரம் என்பன கற்றற்காக இதிகாசங்கள், புராணங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் படிக்கவும் வசதி செய்தார். தாய்மொழியிற் பாண்டித்தியம் பெறுவதற்குப் பெண்களை மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பாலபண்டித பரீட்சைகள் எடுக்கப் பழக்கினர். ஆங்கில மொழியின் இன்றியமையாமை கருதிப் பெயர்பெற்ற ஆங்கிலப் பட்டதாரிப் பெண்களை வரவழைத்து ஆசிரியைகளாய் இருத்தினர். வடமொழியறிவு தேவையெனக் கண்டு மகோபாத்தியாயர்களை நியமித்தார். காலைப் பிரார்த்தனை முடியும் வேளைகளில் தாமே உபன்னியாசங்கள் செய்து வந்தார் இங்ஙனமே ஆண்களை உருவாக்குவதற்குத் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை 1921ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். ஈஸ்வரன், பரமேஸ்வரன் என்றாற்போல பரமேஸ்வராக் கல்லூரியைப் பெருங் கலைக்கல்லூரி என்றும் பல்கலைக்கழகம் எனவும் கருத அவர் அமைத்தார். அவர் நோக்கம் நாள் பல கழிந்து நிறைவேறியுள்ளது.

இராமநாதன் அவர்களின் கல்விப் பணி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளை உருவாக்கத் தூண்டியது. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தந்தையென மதிக்கப்பெற்ற இராமநாதனின் சேவையால் நாட்டில் இந்துசமயம் என வழங்கும் சைவமும், எங்கள் மொழியென நாம் போற்றும் தமிழும் தரமுயர்ந்தன.

இராமநாதன் அவர்களை ஆறுண்டுக் காலமும், அவர் எழுப்பிய பரமேஸ்வராக் கல்லூரியைப் பன்னிரண்டாண்டுகளும் கண்ட பழைய அனுபவத்தின் ஒரு துளியே இது. இராமநாதன் ஒரு மனிதன். The elements were so composed in him, that nature would stand up and say he is a man".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைவுடன் அரும்பணி ஆற்றிய அதிபர்

நம. சிவப்பிரகாசம்
பிரதம ஆசிரியர், 'இந்துசாதனம்'

கண்ணியக் கடமையாளர்கள் என்று கருத்துடன் அழைக்கப்படுவோரில் ஆசிரியாகளும் அமைகின்றனர். ஆசானென்றும் கணக்காளன் என்றும் கற்கப்படுவோன் என்றும் இன்னும் மேலாகக் குருவென்றும் நற்றகை நாமங்களுக்குரிய ஆசிரியர், அரும்பணியாற்றிக் கடமை என்னும் ஏணிப்படிகளில் ஏறிச் சிகரத்தை யடைந்து அதிபராக வருவரேல் அந்நிலை உந்நதமா மன்றோ.

ஆன்றோன் ஒருவர் தொல்காப்பியம் என்னும் அருங்கலை நூலின்கண் முதற்கண் எடுத்தாண்ட பொருள் ஆசான் இலக்கணமும் அவனிடம் அறிவு தேடும் அவர்களின் அமைவும் செறிந்த கல்வியே.

"ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபே"

என்று எடுத்த ஆசிரியர், ஆசிரியனை விளக்கும் அற்புதத்தை மேலும் விளக்கும் அணியை ஈண்டு துய்த்து அநுபவித்தல் சாலும்.

"மலை, நிலம், பூவே. துலாக்கோலென்நின்னர்
உலகில் உணர்வுடை யோர்"

ஆசான் இயல்பிதுவென்று ஆசிரியர்கள் அறிவரேற் கல்வித்திணைக்களத்தில் இன்னோரின் எண்தொகை இப்பொழுதுள்ளதில் ஆயிரத்தில் ஒன்றாகும் அல்லவா?

அரிய பொருள்களைத் (கருத்துக்களை) தன்னிடத்துடைமை, வளமுடைமை, முகமகிழ்ச்சி, அகநெகழ்ச்சி யுடைமை, நடுநிலையுடைமை என்றின்னன ஒருங்கமைந்த ஒருவரை நல்லாசிரியர் என்பர் வல்லோர்.

அத்தகைய தத்துவங்களை உடைய ஒரு ஆசிரியரைப் பற்றியே இக்கட்டுரை விரியுமென்க.

பூவெல்லாம் பொறிவாழ் பூவாமோ என்றாங்கு, கலைநிலையங்கள் எல்லாம் கலைநிலையமாமோ என்று கூறினால் இராமநாதன் கல்லூரியை எண்ணிக்கொண்டே இயம்பிய கூற்றாகும் என்க. என்னை நிறுவியவரின் நினைவுச் செறிவும் நெறிநீர்மையும் அறிவுப்பெருக்கமும் அவர் இட்ட வித்தில் வியத்தகு வித்தியாலயமாய்க் கழகம் விளைய உறுதுணை ஆயின என்போம்.

ஈதல் என்று சொன்னாரே தொல்காப்பியத் தூயோன்; அந்த அருங்குணம் இராமநாதன் கல்லூரியின் பெருங்குணமாயிற்று. ஈதல் அறம்; கல்வி கொடுத்தல் தர்மம், எழுத்தறிவித்தல் இறைநெறி என்ற இவற்றையெல்லாம் நன்குணர்ந்த பெருங்குணப் பரோபகாரி இராமநாத வள்ளல் எடுத்துக்காட்டாக இலங்க இரு கல்விக் கழகங்களை நிறுவினார். மகளிருக்கென மிகு பரிவுடன் கல்வி அகமொன்றுதவிய இராமநாத வள்ளல் ''மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'' என்ற திருக்குறட் கருத்தைக் கருதி நின்றார்.

பெண்பிள்ளைகளுக்குரிய பள்ளிக்கூடம் விண்ணவரும் விரும்புந் தகையதாய் விளங்க நின்றது. இங்குதான் இளமை வளச் சிறுமி இராஜநாயகி அங்கு ஈந்துவக்கப்படும் அருங்கலை பயிலும் வாய்ப்பைப் பெற்றனர். அவர் மட்டுமல்ல ஆயிரம் ஆயிரமாகச் சேயிழையார் மேயினர். இத்திறனை கன்னி இராஜநாயகி இங்கு கற்றார். கற்றவிடத்திலே உற்றார் கற்கப்படுவோர் கடமையைத் திட்டமிட்டுத் திகழ்ந்தவர் வரலாறு என்றால் எட்டுணையும் பொய்யாது.

கலைமாணியாக, அதிலும் ஆங்கில மொழி ஆற்றல் அணியாகவுள்ள நற்றகைமை யாவும் நன்கமைந்த விந்நங்கைக்கு நாயகனும் ஓர் ஆசிரியன் என்றால் எற்றாலும் எழில் என்று சொல்லவும் வேண்டுங்கொல். பத்தாவுக்கேற்ற பதிவிரதை பதிவிரதைக்கேற்ற பத்தா—உத்தம ஒப்பந்தம் இது.

திருமதி இராஜநாயகி அருணாசலம் ஆகத் திகழ்காலம் பொருந்தியதும் எழுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இவர் உளமும் வளமும் ஓங்கின. இராமநாதன் கல்லூரி ஆசிரியை என்ற இயல்பான பெருமை மட்டுமல்ல, கல்வி புகட்டி நல்விளைவு கண்ட பெருமையும் பெருகியது. செல்விகளாம் மாணுக்கர்கள் அறிவுப் பேற்றிற் சித்தி மல்கினர்.

வியன்கலை விரிகதிர் பரப்பிநின்ற திருமதிக்குப் பரிசு காத்திருந்தது. பரிசுக ளுக்கெல்லாம் அருமையானது இராம நாதன் கல்லூரி அதிபராம் பேறு. ஆங்கிலேயநாட்டு அரிவையர்கள் வீற் றிருந்த கல்வி அரியாசனத்தில் திருமதி இரத்தினம்மா நவரத்தினம், திருமதி செல்லம்மாபிள்ளை, திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரு. செல்வி யோகாம்பிகை கனகசபை, திருமதி காயத்திரி கணேசன், செல்வி ஆறுமுகம் என்ற நெடும் பரம் பரை ஒன்று இடம் பெற்றது. இந்த வர லாறு நெடிதாக வளம்பெறவந்த அதிபர் எங்கள் திருமதி இராஜநாயகி அருணுச லம் அவர்கள்.

பாரம்பரியத்தின் சீருக்கமைந்த வீரத் துடன் அதிபர் கடமையை ஆற்றத் தொடங்கிய அம்மையார் பேரும் புகழும் பின்ஊரப் பெரும் பணிகளைப் புரியும் அரிய வாய்ப்புக்களைப் பெற்றனர். உற்ற இந்த வசதிகளைப் பற்றிக்கொண்டு கடமை ஏணி யிற் படிப்படியாக எழுந்து சிகரத்தை அடைந்து செயற்கரிய செய்த மனக்களிப் புடன் ஓய்வெடுக்கின்ருர் திருமதி இ. அருணுசலம் அவர்கள்.

இராமநாதன் கல்லூரிக்கு ஒரு புதுப் பொலிவு தோன்றக் கட்டடங்கள் எழும் பின. கோட்டைக்கு அரண், மதில் என்றே நிறுவியவர் அந்நாட்களில், நீண்ட மதில்களை நெடுஞ்சாலைப்பக்கங்களில் அமைத்தார். அப் பணியைத் தொடர்ந்து ஏனைய எல்லைகளிலும் சுவர்களை எழுப்பிய உரிமை திருமதி அருணுசலத்துக்குரியதா யிற்று.

பெற்ருர் ஆசிரியர் சங்கம் எற்ருலும் எழுச்சிபெறப் புனர் அமைத்து அது பாட சாலை அபிவிருத்திச் சங்கமாகப் புதுப் பெயருடன் விளங்கும் இக்காலத்தில் நன்கு நடத்தி அங்கத்தினரின் அன்பையும் ஒத் துழைப்பையும் பெற்றுச் செயலாற்றிய எங்கள் அதிபருக்கு நினைவு நிலையமாக இயங்குகின்றது புதிய மண்டபம்.

மாணுக்கர்கள் கலையிலும் விஞ்ஞானத் திலும் நுண்கலையிலும் மாணுற்றுப் பல் கலைக்கழகம் புகுந்திட அமைந்த ஆற்ற லுக் கேற்ப, மெய்வல்லுநர்களாக பயிற் சிப் போட்டிகளில் அனைத்திலங்கைப் பரிசு பெற வைத்த திறமையும், நடனம், சங் கீதமாம் கவர்ச்சிக்கலையில் இராமநாதன் கல்லூரிக்கு ஒரு தனிப்பெருமை இலங்க உழைத்த பெருமையும் ஒருங்குபெற்ற அதிபர் திருமதி இராஜநாயகி அருணுசலம் அவர்களின் பெயர் கல்வி வட்டாரத்திலும் இக்கல்லூரி வரலாற்றிலும் நிரந்தர இடத்தை அடைந்துவிட்டதென்று தொ குத்துக் கூறி இவர்கள் விசேட பழைய மாணுக்கிஆக இக்கல்லூரி வளர்ச்சிக்குத் தொடர்ந்துழைக்க இறைவன் இவருக்கு இன்னும் எத்தனையோ ஆண்டுகள் நல் வாழ்வு நல்க இறைவனை இறைஞ்சுகின் ரேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பணி புரிந்த அதிபர்

பேராசிரியர் க. கைலாசபதி, கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்

இராமநாதன் கல்லூரியில் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகப் பணி புரிந்துவிட்டு இவ்வாண்டு இளைப்பாறும் திருமதி இ. அருணாசலம் அவர்களின் சேவை நலத்தைப் பாராட்டுமுகமாகக் கல்லூரி ஆசிரியர்கள் மலர் ஒன்றை வெளியிடுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். முப்பத்தைந்து ஆண்டுகள் ஒரு கல்லூரியிலே சேவை செய்வது மாத்திரமன்றி அதன் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து வந்திருப்பதும் பாராட்டத்தக்க தொன்றாகும். உதவி ஆசிரியையாகப் பதவியேற்று, படிப்படியாக உயர்வு பெற்று ஈற்றில் மதிப்புக்குரிய அதிபராக இளைப்பாறுகிறார். கல்லூரியின் வளர்ச்சியுடன் தம்மை ஒன்றிணைத்துக் கொண்ட இலட்சியப்பற்றை அவரிடத்திற் காணலாம்.

திருமதி அருணாசலத்தைப் பல வருடங்களாக அறிவேனாயினும், கடந்த சில வருடங்களாக அவரை நன்கு தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது: 1974ஆம் வருடம் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராக நான் பொறுப்பேற்ற பின், இராமநாதன் நுண்கலைக்கல்லூரியின் நிர்வாகத்துடன் நெருங்கிய தொடர்புண்டாயிற்று. நுண்கலைக் கல்லூரிக்கு ஒத்தாசை புரிந்தும், ஆலோசனைகள் வழங்கியும், சில வகைகளில் அதன் மேற்பார்வையாளராய்ப் பணிபுரிந்தும் தொண்டாற்றினார் திருமதி அருணாசலம். நுண்கலைக் கல்லூரிக்கு அடிக்கடி விஜயம் செய்த உள்நாட்டு — வெளிநாட்டுப் பிரமுகர்களை வரவேற்று உபசரிப்பதிலிருந்து காலத்துக்குக் காலம் கலை நிகழ்ச்சிகளை உருவாக்குவிப்பது வரையில் பல கடமைகளைத் தனக்கே உரிய அடக்கத்துடனும், அவதானத்துடனும் அவர் செய்தார்.

இராமநாதன் கல்லூரி அதிபராக அவர் பணிபுரிந்தவிதமும் பலரின் பாராட்டைப் பெற்றது. அக்கல்லூரிக்குத் தனித்தவொரு மரபு உண்டு. அதனைப் பயபக்தியுடன் பேணி வந்தார் திருமதி அருணாசலம். சில வருடங்களுக்குமுன் சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்த்துவதற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்து முன்னாள் துணைவேந்தர் மால்கம் ஆதிசேஷையா வளாகத்திற்கு வந்திருந்தார். இராமநாதன் கல்லூரிக்கு அவரை அழைத்துச் சென்றிருந்தேன். இராமநாதன் சமாதியில் பூசை, பின்னர் தேநீர் விருந்து, கலை நிகழ்ச்சிகள் முதலியனவெல்லாம் முறைப்படி நடந்து முடிந்தன. "சிலசம்பிரதாயங்களைத் தமிழ்நாட்டினரைவிட இவர்கள் சிறப்பாகப் பேணி வருகின்றனர் என்று தோன்றுகிறது" என்று ஆதிசேஷையா என்னிடம் கூறினார். திருமதி அருணாசலம் அப்பாராட்டினைத் தன்னடக்கத்துடனும் பெருமையுடனும் ஏற்றுக் கொண்டதைக் கவனித்தேன்.

அரசாங்கங்களிடமிருந்து இயன்ற வரையில் நிதியுதவிகளைப் பெற்றுக் காலத்துக்கியைந்த வகையில் கல்லூரியின் கட்டடங்களையும் பாடநெறிகளையும் அபிவிருத்தி செய்வதில் திருமதி அருணாசலம் அரும்பாடுபட்டுழைத்ததை யாவரும் அறிவர். அவர் முயற்சியால் கல்லூரி மண்டபம், விஞ்ஞான ஆய்வுகூடம் முதலியனவும் சுற்றுமதிலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. மனையியற்கல்வி புதுப் பொலிவுடன் விளங்கலாயிற்று. அதே வேளையில் இராமநாதன் கல்லூரிக்கே தனிச்சிறப்பியல்பான கலை நிகழ்ச்சிகளிலும் உரிய கவனஞ் செலுத்தி வந்தார். இதனால் கல்லூரி, அதன் தாபகர் கண்ட கனவு வழியில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக் கல்விமரபின் சக்தியினாலும், மக்களின் ஆதரவினாலும், பல்வேறு பிரச்சினைகளின் மத்தியிலும் கல்லூரிகளில் கல்வியாளர் அரும்பணி ஆற்றி வந்திருக்கின்றனர். கல்லூரி அதிபர்களுக்கு இப்பணியிற் பெரும் பங்குண்டு. அத்தகைய இலட்சிய வேட்கையுடைய கல்லூரி அதிபர்களில் ஒருவராக விளங்கினார் திருமதி அருணாசலம். அவரது ஓய்வு வாழ்க்கையும் இனிதே அமைய வேண்டும் என விழைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி மரபைப் பேணிக்காத்த அதிபர்

ச. அம்பிகைபாகன்

முன்னாள் அதிபர், யாழ் - வைத்தீஸ்வராக் கல்லூரி

சேர் இராமநாதன் இலங்கை மக்களுக்கு, சிறப்பாகத் தமிழ் மக்களுக்கு, பல அரிய தொண்டுகள் செய்துள்ளார். அவற்றுள் தலைசிறந்தது இராமநாதன் கல்லூரியை தாபித்ததாகும். இக் கல்லூரி தாபிக்கப்படுமுன் ஆங்கிலக் கல்வியைப் பெற விரும்பிய சைவப் பெண் பிள்ளைகள் கிறிஸ்தவ மிஷனரிமாரால் தாபிக்கப்பட்ட கல்லூரிகளுக்கே போக வேண்டியிருந்தது. இதனால் மதமாற்றங்களை தடுப்பதற்காகவும், அந்நிய மோகத்திலிருந்து நமது பெண்களை மீட்பதற்குமாகவே சேர் பொன் இராமநாதன் இக் கல்லூரியை 1913ஆம் ஆண்டு தாபித்தார். தாபித்த காலம் தொடங்கி 1933ஆம் ஆண்டில் சிவபதமடையும் வரைக்கும் இராமநாதன் கல்லூரியோடு சேர்த்துக் கட்டப்பட்ட வீட்டிலேயே வசித்துவந்தார். இதனால் அவரும், அவருடைய தர்மபத்தினியான லேடி இராமநாதனும் கல்லூரியை மேற்பார்வை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இவர்களுக்குப் பின் திரு. நடேசபிள்ளையும், சுந்தரியும் இக் கடமையை தொடர்ந்து செய்துவந்தார்கள்.

சேர் இராமநாதன் தாம் தாபித்த கல்லூரியில் சமயக் கல்விக்கு முக்கிய இடம் கொடுத்ததோடு, சமய வழிபாட்டிற்கும் வழிவகுத்தார். கல்லூரி முன் மண்டபத்து மாடியில் சிவகாமசுந்தரி சமேத நடேசப் பெருமானை பிரதிட்டை செய்து காலையிலும், மாலையிலும் மாணவிகள் சிவலோகநாதனை சேவித்திடுவோம் வாரீர்'' என்னும் நந்தனர் கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டு வலம் வரும்படி செய்தார்.

பெண் பிள்ளைகளின் உடை முதலியவற்றிலும் இராமநாதன் மிக கவனம் செலுத்தினர். அந்நிய பாடசாலைகளில் படித்து வந்த மாணவர்களின் அலங்கோலமான உடைகளுக்குப் பதிலாகத் தமிழ் பிள்ளைகளுக்கு மிக உகந்ததுமான பாவாடை, தாவணி அணியச் செய்தார்.

மேற்கூறியவற்றை எடுத்துக்கூறியதற்குக் காரணம், எவ்வளவு நுணுக்கமாக கல்லூரி சம்பந்தமான விஷயங்களையெல்லாம் ஒழுங்காக சேர் இராமநாதன் வகுத்து வைத்தார் என்பதைக் காட்டுவதற்கே.

இந்தப் பாரம்பரியத்தைக் காப்பாற்றும் பொறுப்பு திரு. நடேசபிள்ளை மறைந்தபின் திருமதி அருணசலத்தைச் சார்ந்தது.

திருமதி அருணசலம், இராமநாதன் கல்லூரியில் கல்வி பயிலாவிட்டாலும் 1945ஆம் ஆண்டு தொடக்கம் அங்கு ஆசிரியராக இருந்து வந்தபடியால் இக் கல்லூரியின் பாரம்பரியத்தில் நன்கு ஊறிவிட்டார். இவர் உதவி ஆசிரியராக இருந்த காலத்தில் திறமையாகப் பாடங்களைப் போதித்து வந்தார். அப்பொழுது சர்வகலாசாலைப் புகுமுக வகுப்பில் கலைப் பிரிவு மாத்திரமே இராமநாதன் கல்லூரியிலிருந்து வந்தது. அப் பிரிவு மாணவிகளுக்கு சரித்திரம், அரசியல் முதலிய பாடங்களைத் திறம்படப் போதித்து, பல மாணவிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு வழிவகுத்தார். அங்குச் சென்ற மாணவிகள் தமது கல்வித் திறமையினலும், நடையுடை பாவனைகளாலும், தமது கல்லூரிக்கும், தமிழ் குலத்திற்கும் அழியாப் புகழைத் தேடிக் கொடுத்தனர்,

அரசாங்கம் இராமநாதன் கல்லூரியைப் பொறுப்பேற்றப்பின் கல்லூரியின் பாரம்பரியத்திற்கு என்ன நடக்குமோ என பலர் அச்சம்கொண்டனர். 1961ஆம் ஆண்டில் அரசாங்கம் பொறுப்பேற்ற காலத்தில் ஏற்பட்ட சில மாற்றங்கள் இவ்வச்சத்திற்கு இடம் கொடுத்தது. நல்லவேளையாக திருமதி அருணசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றபின் சேர் இராமநாதன் காலத்திலும், லேடி இராமநாதன் காலத்திலும், எப்படி கல்லூரி இயங்கிவந்ததோ அதேபோல் இயங்குவதற்குவழிவகுத்தார். நான் சமீபத்தில் வட இலங்கை அதிபர் சங்க ஆதரவில் நடந்த ஒரு விருந்துப சாரத்தில் பேசியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். முன்னர் தனியார் கல்லூரியாக இருந்தவற்றை அரசாங்கக் கல்லூரியாக மாற்றியபின்பும் அதிபரும் ஆசிரியரும் ஆர்வமுள்ளவராக இருந்தால் பாரம்பரியத்தைக் காப்பாற்றலாம் எனக் கூறினேன். அதற்கு இராமநாதன் கல்லூரியை உதாரணமாகக் குறிப்பிட்டேன்.

தாபகர் தினத்தையும், லேடி இராமநாதன், நடேசபிள்ளை, சுந்தரி முதலியோர் மறைந்த தினங்களையும், கொண்டாடி வருவது போற்றுவதற்குரிய செயலாகும். இவற்றால் இக் குடும்பத்திற்கு நன்றிக் கடன் செலுத்தப்படுகிறது.

காலத்திற்கு ஏற்றபடி இராமநாதன் கல்லூரியிலும் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியடைந்து வருகிறது. இதற்கும் திருமதி அருணாசலம் அருஞ்சேவை செய்துவந்துள்ளார். விஞ்ஞானக் கல்வியின் பெயரால், கல்லூரியின் பாரம்பரியச் சொத்தான சமயம், இலக்கியம், சங்கீதம் முதலிய துறைகளில் கவனம் குறையாது பார்த்துக்கொள்ள வேண்டும். பின்னர் குறிப்பிட்ட துறைகளே சிறந்த பெண்களை உருவாக்குவதற்கு உதவும்.

திருமதி அருணாசலத்தின் ஓய்வு காலமும் சீரும் சிறப்புமுடையதாக இருக்கவேண்டுமென இறைவனை வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN IDEAL TEACHER AND PRINCIPAL

**by C. Subramaniam Esq, B. A. (LOND.)**
*Retired Principal, Skandavarodaya College*

A period of thirtyfive years unbroken service in one school as assistant graduate teacher, post graduate trained teacher, grade I Special Post holder, deputy principal, acting principal and principal, rising step by step, without spurning the steps below, is the unique and enviable record of Srimathi R. Arunachalam who is due to retire shortly. The request of the Editor of this souvenir to contribute an article, makes one recall nostalgically memories of Rama nathan College and her achievements over the last 67 years. As a school boy I beheld the festivities at the opening of the college in 1913. I attended the lectures on Darwin's Theory of Evolution delivered by Sir P. Ramanathan in the main hall of the college in the year 1917, which I did not understand, but I remember was entranced by the handsome personality and the melodious voice of the speaker. I have attended many functions in the college which were always held in a setting of Hindu Culture and Oriental Splendour. Then in 1930, I joined thousands of others in paying homage at the Maha Samathi of Sri Lanka's greatest son.

Since the passing away of the Founder, the college had passed through glorious periods as well as dark ones. Principal Srimathy Pillay and her assistants maintained the rich traditions and consolidated the achievements of the earlier era. After she retired, there were many principals, some of whom could not measure up to the Standard required of them. For the greater part of this period, Srimathy Arunachalam was a loyal and efficient assistant, giving of her best for the welfare of the school and the pupils. To her, it was a journey of endurance that was to test the limits of her soul, but it was bearable, as most things are, in moments sustained by Duty. She had embraced the teaching profession with a singleness of purpose and she would not be swayed from her path of duty by selfseeking ambitions of any kind. When, in the fullness of time, she was made principal, she regarded it as an opportunity for service, vouchsafed to her by the Almighty.

I do not wish to recount the achievements of the college under her principalship; how she was able to evoke the hearty co-operation of the teachers, pupils, parents, old pupils and friends of the college and how thereby the college reached great heights of glory in various fields. I am sure others would do this. Her services in one special field should be recorded. When I was principal of Skantha Varodaya College, I had the mortification in the early years of seeing some of our brilliant pupils leaving us and going to other schools to do the University Entrance in science subjects because we did not have fully equipped laboratories and qualified teachers. Therefore, to stop this migration, we supplied those wants. The tide soon turned, and instead of our pupils going to other schools, pupils from other schools came to us in large numbers. Some of these were from Ramanathan College and when Principal Srimathy Pillai remonstrated, my reply was that the only solution to the problem of migration was for her to equip her laboratories and employ good science teachers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This was not done and the college lost some brilliant girls. It was left to Srimathy Arunachalam to organise the University Entrance Scienc classes after she became principal in 1969 and thereafter many pupils have entered the University for science courses.

We know that principals are now, not free to choose the teachers they want. They have to accept those sent to them by the Department of Education—good, bad, or indifferent. Sometimes vacancies are not filled for months. As a result, tutories have mushroomed in all parts of Jaffna and we see children going to these in the early hours of the morning and in the late hours of the evening To save her pupils from the dangers of such an exercise Srimathy Arunachalam organised extra classes for science students with the help of her science teachers, This was a great service and is indicative of the personal interest she has always taken in her Pupils—a quality so rare these days.

Our Seers have spoken of 'work-Chastity' which indicates single minded dedication to a single cause and absolute avoidance of the glamour of any other cause—chastity concerning field of work. No other cause or desire to gain glory or wealth could entice a person away from the chosen field of work. The Gita proclaims it; the Ramayana illustrates it; and great leaders like Ramanathan have lived it. 'Work-Chastity' has been over the years the motive force of the actions of Srimathy Arunachalam. Satvic qualities like fortitude, forgiveness and humility she has in abundant measure. She is incapable of inducing enmity or jealousy in others. She was never known to have lost her temper and raved at assistants. She would always remain unruffled in the face of a crisis and I know how as Deputy Principal, she had saved Principals from embarrassing situations with the soft word that turneth away wrath. These are the qualities that have endeared her to her pupils and friends,

The happiness that comes to a person who has done his or her duty is inexpressively precious. May God grant Srimathy Arunachalam many many years of this happiness to enjoy it with her family and friends.

❀

*" The Solicitor-General of Ceylon is one Ramanathan, a Tamil Hindu and a cultured man of great ability and influence. What struck me most was that he was altogether free from the social trammels which encumber us here."*

— **Bal Gangadhar Tliak**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FIRST AMONG EQUALS

by N. Sabaratnam Esq., B. A. (LOND.), POST GRADUATE TRAINED;
*Principal Emeritus Jaffna Hindu College, Former President A. C. U. T.*

Some one said "Educate a man and you educate an individual; educate a woman and you educate a family" This may not be so true today when the idea of the career woman has come to stay. However there are plenty of people still who say that a boy must be educated for a job, but a girl's job is matrimony.

Sir Ponnambalam Ramanathan founded Ramanathan College not so much to emancipate women from the drudgery of the kitchen but to equip them with the essentials of oriental womanhood. A good department of Domestic Science, Art and Music and other allied subjects are as important for girls as academic ones that have captured the imagination of a growing number of girls today.

The ideals that fired the Founder of Ramanathan College are as true in the changed world of today as they were when the school pioneered in the cause of women's education. Much of the credit goes to the galaxy of principals that guided her destinies. Mrs R. Arunasalam who retires after a long spell of dedicated service belongs to that distinguished band who brought the torch of culture into thousands of happy homes in our community.

It was at the Govt. Training College Colombo, that I had the privilege of meeting her for the first time. Most of us who went to do our post graduate training thirty three years ago were full blown men and women who had families to look after. Mrs. Arunasalam then Miss Cumaraswamy looked, in fact she was, so young and tender that many of us thought she had come into the wrong room. But we were proved wrong. She graduated so young and entered the Training College almost immediately after, that she was perhaps the only one in our batch to have continued in service till now.

It is not every successful teacher that lives up to our expectations when he or she becomes the head. But in the case of the retiring chief of this premier girl's college, our hopes have been more than fullfilled. And that takes us to the eternal question that still baffles parents, the students and the state. What is most crucial to the success of a school head? I have heard it said, "Give me a good head master or head mistress, and I will give you a good school." There is wisdom in these words. But doesnt' the statement beg the question—Who is a good head master, a head mistress? The answer is not easy. Different individuals stress different qualities of character. "Quot homines tot sentential" is as true here as in other similar controversies.

Speaking from experience I would'nt hesitate to say that a Principal should consider himself or herself *just a teacher who has been lucky*, although his or her position is pivotal to the progress of the community served by the school. It is the Principal who should see and continue to see the problems of that school from the teacher's angle. This is possible only when the head continues *to teach like any other teacher*. The tone of a well-run school is generally set by the correct relationship between the Principal and the teaching Staff. This affinity between the staff room and the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Principal's office does not in the least mean that the assistants should be obsequious. An exemplary Head is *First among Equals* —" Primus inter Pares;'.

I have had numerous opportunities during normal working days and festive occasions to see this fact in full focus at Ramanathan College. No wonder then that Mrs. Arunasalam lays down her reins of office after a period of distinguished stewardship. Her achievements in having elaborated and embellished the work of her predecessor have earned the esteem and affection of the entire school community. Be it in class-room studies, or sports, or agriculture or extramural activities, the stamp of her gentle, firm and understanding leadership is indelible. *The continuity of the school's tradition has been remarkable during her regime.*

More than all these, is the sweetness of temper and sanity of outlook that singles out Mrs. Arunasalam from the general run of educators and educational administrators. Coming as she does from a family rich in educational heritage it is no wonder that she has done so well.

Here is wishing Mrs. R. Arunasalam "Ad multo annos"

*

**REMARKABLE CAREER**

"*I think if I were a Ceylonese, I should feel specially proud of Sir Ponnambalam Ramanathan. He has had a most remarkable career. I suppose there are few instances on record in which a man has touched life at so many points and at every point at which he has touched it, he has touched it with distinction.*

**— Governor Sir Herbert Stanley**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A SOFT-SPOKEN PRINCIPAL

by A. S. Kanagaratnam Esq., B. A. (LOND.)
*Former President A. C. U. T.*

I don't know if I could claim that it has been my good fortune to grow old along with a number of my old pupils in the service of our schools. I retired twelve years ago and during the latter half of my teaching years and even after I retired, I have been called upon to write the praises of a number of my colleagues.

Mrs Arunasalam happens to be my first pupil-colleague whom I have been asked to write about. I taught her years ago at Drieberg College, Chavakachcheri, I remember, in the senior forms. She was one of the four or five girls in an otherwise male class of less than twenty five. You might envy the lot of the students of those days, and of the teachers too, when the present nightmare of numbers 40 or 50 in a class-hadn't yet invaded our schools, to plague the teachers and to drive all the pupils to endless tuition. She was then Rajanayagam Cumaraswamy and even then as a girl gave all the promise of her later success as one of our best girls' college principals of our day. I met her several years later as a fellow student at the Thurston-Rd. Training College where a class of about thirty graduate teachers were 'holidaying' on full pay leave under the pretext of a post-grad training.

Napoleon is reported to have said that every soldier in his army carried a marshalls' baton in his knapsack. I wish I could say that every teacher could in the course of his career, succeed to the post of principal. George Bernard Shaw parodying Napoleon's dictum has written somewhere that a soldier more-often carried a dozen looted silver spoons. But we teachers cannot even hope after two decades of gruelling service in several schools, to rise to a principal's post by our merits alone, much less loot anything. May be some can, if they are canny enough. Rather they are getting shifted and looted in many insidious ways by being called upon to subscribe perennially to every local function organized by those in power or are used as handy tools for party bosses.

Rajanayagam Arunasalam has risen to the top of her profession without any extra push from politicoes. As a trained graduate she had attained the highest academic and teaching qualifications open to her and it was difficult for ambitious rivals to oust her even with political influence The rise of her school under her administration did not surprise me. Her innate gifts of leadership and tact had marked her out for eminence even during her years at school.

I still remember her student days at Drieberg College. There was always a smile lighting up her face when she spoke. She was a model student in that she never skipped her home preparation. She rarely missed the correct answer. She was soft-spoken and modest. Her father, also retired as a successful head master and the daughter has carefully followed in her father's footsteps.

Mrs. Arunasalam has been able during her career at Ramanathan College, to brighten up an old college steeped in years of Hindu orthodox tradition.

To have run a school and a home successfully is something of a miracle. Most of our successful lady principals have been and some are, unmarried. They are so absorbed in the responsibilities of their office that they have hardly ever had any time for a husband and home. But Mrs. Arunasalam appears to be different. She did run a school and run a home, both efficiently. I am sure all her old pupils and their parents will join me in wishing her a very happy retired life.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MRS. R. ARUNASALAM — AN APPRECIATION

**by V. Chuppiramaniam Esq**, B. A., B. SC. (LOND.) POST GRADUATE TRAINED
*Retired Principal, Skandavarodaya College*

It gives me great pleasure to write this appreciation of the services rendered by Mrs. R. Arunasalam, the retiring principal of Ramanathan College. I had the privilege of coming in contact with her in 1947, when Mrs. Arunasalam and I followed a post graduate course for teachers at the Government Training College, Colombo.

As I pen these few lines of appreciation, my memory wings back to that college of 33 years ago. Our class consisted of 34 trainees, men and women from djfferent parts of the country. We were a well knit family and firm believers in the art of good living and good comradeship. Our common interest was the theory and practice of education.

Mrs. Arunasalam is one of the luminaries in the educational horizon of Jaffna today. Starting her teaching career as an assistant teacher at Ramanathan College in 1944, she, step by step, ascended the summit of the ladder which she was destined to climb. Ramanathan College has been her chief and abiding concern and this involvement has enabled her to build up, foster and maintain the great traditions of the college. For 36 years she has given of her best to the pupils of Ramanathan College and during her regime Ramanathan College has risen to great heights. She thought of her work, not as an occupation or a profession, but as a true vocation. She had an active and permanent interest in the manifold activities of the College.

Ramanathan College won distinction in sport, drama competitions and public examinations. The new school hall, home science laboratory, classroom extensions, additional buildings, and the boundary wall, will be monuments proclaiming to the world that she has dedicated herself to the cause of education. Above all, the numerous doctors, lawyers, educationists, nurses, housewives, who have been taught by her at Ramanathan College will also be lasting monuments broad casting her splendour. She had a great share in moulding the character and outlook of her students.

The parents and old-girls of Ramanathan College and the general public have had great confidence in her and have been grateful to her for her devoted service. The people of Jaffna whom she has served so well and so long, would always remember her with affection and gratitude. She has lived a life of sacrifice and service and this should be a source of inspiration to our girls. Her vision, courage and determination have enabled Ramanathan College to make a remarkable contribution to the life of Jaffna society. Her high sense of duty and responsibility coupled with modesty and integrity have been manifest throughout her life and have modelled the lives of all those who had the good fortune to come under her influence.

A self made captain retires from the field leaving behind a creditable record, a proud legacy—the legacy of a leading Institution true to the ideals of the Founder, in these changed times. I wish her many years of service to the country in her retirement. May Lord Siva give her long life, good health and happiness in her retirement.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மாவலி மணலிற் பல்லாண்டு வாழிய’

சொக்கன்

தெய்வச் சைவத் துறைவிட்டுச் சீர்சால் தமிழர் பண்புகள்தாம்
உய்வைத் தருமென் றோராதே உதிர்த்து வறிதாம் செடியாகி
வைவுற் றிழிந்தெம் நங்கையினம் நவநா கரிகத் துறைசார்ந்து
பொய்யை மெய்யாய்ப் போற்றியதைப் பொறுத சிந்தைப் பேராளர்.

வல்ல விராம நாததுரை வனிதை மாரின் வாழ்வினிலே
தெள்ளத் தெளிந்த அறிவூட்டச் சிறந்த மகளிர் கல்லூரி
வெள்ளைக் கலையாள் ஆலயமாய் மிளிரக் கட்டி வைத்ததனிற்
கொள்ளை யறிவுக் குலமாதர் கூடிக் கற்க வகைசெய்தார்.

அன்பு, பண்பு, கற்புநெறி, அறிவு, கலையார் வத்துடனே
என்றும் குடிகொள் வதற்கென்றே எழுந்த இந்தக் கல்லூரி
அன்று தொட்டே அரியபல அதிபர் நடத்த வளர்பிறையாய்
நின்று வளர்ந்து முழுமதியாம் நிலவே என்ன ஒளிர்ந்திடுமே.

பொங்கும் அறிவுப் புனலூற்றைப் பொழிந்த மடவார், வானத்தே
தங்கும் விண்மீன் எனத்தக்க தகையர், அருணா சலத்துடைய
தங்க உள்ளம் தனில்வாழும் தக்கோர், தாய்மை மிக்குடையார்
எங்கும் என்றும் மதிப்புடனே இருந்த அதிபர் இவரன்றோ?

சிறிய உருவம் பெரியஉளம் சிவந்த மேனி, முறுவலினை
நறிய மலரின் மணம்போல நாளும் நல்கும் பேரழகு
மூறியா தினிய சொல்கொண்டு முகத்தைக் கோணா துரையிதழ்கள்
முறையாய் அமைந்த பெருமாட்டி முதன்மை எண்ணி வாழ்த்துவமே.

முப்ப தோடைந் தாண்டுகளாய் முதிரா இளமை நலத்தோடே
செப்பற் கரிய சேவைபல செய்தே செல்வ மாணவியர்
தப்பற் றுயர்ந்த தகைமையுறத் தகுந்த கல்வி யறிவூட்டி
ஒப்பற் றுயர்ந்த அதிபர்க்கெம் உள்ளத் தன்பினை ஈந்திடுவோம்.

வாழி அருணா சலஅம்மை வாழி அவரின் நற்றொண்டு
வாழி அன்னார் வளர்த்தநலம் வயங்கும் அறிவுச் செல்வங்கள்
வாழி நாளும் அன்னையது மனத்துக் கினிய பண்புநலம்
வாழி அவரின் குடும்பத்தார் மாவலி மணலிற் பல்லாண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தனையது உயர்வு

**சகிதேவி கந்தையா**

காற்றில் மெல்லெனத் தலையசைத்து விகசிக்கும் ஒரு அழகிய மலரைப் பார்க்கும் பொழுது இங்ஙனம் அம்மலர் செழிப்பதற்கு ஒரு தோட்டக்காரன் எடுத்துக்கொண்ட பிரயாசையை எவரும் சிந்திப்பதில்லை. என் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய திருமதி அருணாசலம் அவர்கள், சேர் பொன். இராமநாதவள்ளலின் தீர்க்க தரிசனத்தின் சின்னமாக விளங்கும் எங்கள் கலாசாலையின் தலைவர் அறையில் பெண்மைக்கே அணியாம். அடக்கத்துடன் வீற்றிருப்பதைப் பார்க்கும்பொழுதெல்லாம், இந்த அழகிய நிலையின் பின்னணியாய் இவர் எங்கள் கல்லூரிக்கு ஆற்றிய பணிகளும் பட்ட சிரமமும் என் கண்முன் விரிவதுண்டு. ஏனெனில், இவரது மாணவி, சக ஆசிரியை, கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுடைய ஒரு பழைய மாணவி என்ற மூன்று வேறுபட்ட கோணங்களில் நான் இவருடன் மிக நெருங்கிப் பழகியதுண்டு. இவரது பணிகளைப் பார்த்து வியந்ததுண்டு.

எங்கள் பலரது பள்ளி வாழ்வில் மினுங்கும் ஒரு பிரேமைக்குரிய ஆசிரியை. தன் பட்டப்படிப்பை இந்தியாவில் முடித்துக் கொண்டு, லேடி இராமநாத அம்மையாரின் நேர்முகத் தேர்வில் சிறப்புச் சித்தி பெற்று கல்லூரியின் உயர்வகுப்பு ஆசிரியையாக இவர் பதவியேற்றபொழுது இவருக்கும், S. S. C. வகுப்புக்களில் இருந்த இவரது பழைய மாணவிகட்கும் வயதில் அதிக வித்தியாசமில்லாததினாலும், பாடசாலை விடுதியில் இவர் தங்கியிருந்தமையாலும் மாணவிகளைத் தன்பால் ஈர்த்துத் தன் ஆளுமையின் சக்தியை முழுமையாக அவர்களிடம் பதியச் செய்யும் ஒரு நிலையும் இவருக்கு இருந்தது. மாணவிகளது உள வளர்ச்சியில் இவர் காட்டிய அக்கறையினாலும், தான் எடுத்துக்கொண்ட பாடத்தைச் சிரமமெடுத்துத் தெளிவாகத் தன் மாணவிகளின் மனதில் பதியவைக்கும் திறனாலும், அவர்களது பிரச்சனைகளைச் செவிமடுத்துத் தீர்வுகாணும் இயல்பான ஒரு உளநெகிழ்வாலும், இவருக்கும் மாணவருக்குமிடையேயிருந்த ஆசிரிய—மாணவ உறவு (Teacher—Pupil Relationship) மிகவும் சிறந்ததாக இருந்தது. சரித்திர பாடத்தில் விசேட சித்திபெற்று மிஸ். கும்மை மகிழ்விக்க வேண்டுமென்ற போட்டா போட்டி எங்களை இரவு பகலாகச் சரித்திர முக்கியத்துவம் பெறாத திகதிகளைக்கூட உருப்போட வைத்ததென்றால், ஒரு ஆசிரியை மாணவரை எவ்வளவு தூரம் ஆட்கொள்ள முடியும் என்பதை உணரலாம். தன் மாணவரது மதிப்பில் உயர்ந்து நிற்கும் ஆசிரியன் ஒரு சமூகத்தையே திறம்பட உருவாக்குகிறான் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒரு ஆசிரியை என்ற நிலையில் அல்லும் பகலும் இவர் எடுத்துக்கொண்ட சிரமம் சிந்திக்கப்படவேண்டியது, போற்றப்படவேண்டியது. ஓய்வுபெற்ற நிலையில்கூட என் உள்ளத்தில் பசுமையாகப் படிந்த நாட்கள், திருமதி பிள்ளை அவர்களின் தலைமையில் இவர் ஆசிரியையாகக் கடமையாற்றிய எங்கள் கல்லூரியின் பொற்காலமாகும்.

சக ஆசிரியையாக இவருடன் நான் கடமை புரிந்த வருடங்கள் பல. என் மாணவிதானே என்ற ஒரு மனநிலையில், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் என்னுடனும் என் நண்பர்களுடனும் இவர் நடந்துகொண்டதில்லை. மாறாக ஒரு தோழமை உணர்வுடன் எங்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டார். 20 வருடங்களுக்கு முன் ஒருநாள் இவருடைய ஒரேயொரு மகள் சுகயீனமான நிலையில், தற்செயலாக இவருக்கும் எனக்கும் நடந்த ஒரு உரையாடல் இன்னும் தெளிவாக என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ''சிவானிக்குச் சரியான இருமல், காய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல், முதுகுநோ. அவளை வீட்டில் விட்டு விட்டு வர விருப்பமில்லை. எனினும் இன்று பாடசாலைக்கு வரும் என் பாட மாணவிகள் அத்தனைபேரும் சும்மா இருக்க நான் வீட்டில் நிற்கவும் மனம் இடந்தருகிற தில்லை. நான் உழைப்பதெல்லாம் அவளுக்காகத்தான் என என்னைத் தேற்றிக்கொள்கிறேன்'' என்று கண்ணீருக்கிடையில் கூறினர். உத்தியோகம் பார்க்கும் ஒரு தாயின் மனப்போராட்டத்தைச் சித்தரிக்கும் இவர் சிந்தனை ஒரு சிறந்த ஆசிரியையின் கடமை உணர்வையும் ஒரு இக்கட்டான கட்டத்தில் சரியான முடிபெடுக்கும் சிறப்பையும் காட்டுகிறது. இன்று என் பிள்ளைகள் எங்கள் வாத்தியார் ஒரு கிழமையாகப் பாடசாலைக்கு வரவில்லை என்று கூறும்பொழுதெல்லாம், ஒரே யொருநாளைக்கூட ஒருஆசிரியை எவ்வளவு முக்கியமானது எனக் கருதினர் என நான் எண்ணுவதுண்டு.

மூத்தோர்க்கும், பழைய மாணவிகட்கும் இவர் கொடுக்கும் உயர் மதிப்பு, இவருடைய பண்பாட்டின் ஒரு முக்கிய நிலையெனலாம். இன்முகத்துடன் வரவேற்று, வேண்டியதைச் செய்து அடிக்கடி வரவேண்டுமென எதிர்பார்த்து வழியனுப்புவார்.

இவருடைய தலைமையில் கல்லூரி பல துறைகளிலும் விரிவடைந்துள்ளது. நிறுவுநர் நினைவுநாள் விழா வருடந்தோறும் சிறப்பாக எடுக்கப்பட்டுப் பலரது பாராட்டிற்கும் உரியதாய் அமைவது பலரும் அறிந்தது. இவற்றில் இடம்பெறும் கலைநிகழ்ச்சிகள் பலரது கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருப்பதால் புகழ் படைத்தன. அமரர், திரு. நடேசபிள்ளையவர்களுடைய இல்லத்தையே சங்கீத மகாலயமாக்கி எந்நேரமும் எவ்வொரு அறையிலும் இன்னிசை ஒலிக்கச்செய்தமை இவர் ஆற்றிய ஒரு பெரிய தொண்டாகும். ஈழத்தில் சர்வகலாசாலை அந்தஸ்துடன், அவர்களால் நடாத்தப்படும் இசைக்கல்லூரி இது ஒன்றுதான் என்பது பெருமைக்குரியது. அத்துடன் ஸ்ரீலங்காவில், நுண்கலைப் பிரிவில் தமிழருக்கு அமைக்கப்பட்ட இசை நிலையமும் இராமநாதன் கல்லூரியையே மையமாகக் கொண்டமை பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்ட நிகழ்ச்சியாகும். ஒரு பாரம்பரியம் போற்றப்படுவது, தலைவரது திறமைக்கு எடுத்துக்காட்டு.

அத்துடன் நீண்ட நாட்களாக இக்கல்லூரிக்கிருந்த பெருங்குறை தன் பழைய மாணவிகளையும், நல்விருந்தினரையும், தன்னுள் ஒருங்கடக்கக்கூடிய ஒரு மண்டபம் இல்லாதது. இவரது விடாமுயற்சியினுலும், பழைய மாணவிகளிடமும், நண்பர்களிடமும் இவருக்கிருந்த செல்வாக்காலும் நீங்கிற்று. கவினுறத் தலைநிமிர்ந்து நிற்கும் புதுமண்டபம் வருவோர் போவோரையெல்லாம் கவரும்படி அமைந்திருக்கிறது.

கல்லூரி உவப்பக்கூடிய திருமதி அருணசலம் அவர்கள், மாணவ ஆசிரியருடன் கனிவுடன் பழகித் தூற்றுவோரையும் புன்சிரிப்பால், தணியவைத்துத் திறம்படத் தன்கடமையை ஆற்றிப் பலர் உள்ளம் பிய்க்கிருர். உழைப்பிற்குன் ஓய்வின் உயர்வு இருக்கிறது. இதுவரை பலர் புகழ உழைத்த இவர், ஓய்வையும் சுவைத்து மகிழலாம். மாருத சமயப்பற்று உடையவராதலால், ஓய்வு இவருக்கு ஒரு பிரச்சினை அல்ல. இதுவரை அசைவை உணர்த்தும் நடேசப் பெருமானின் தூக்கிய திருவடியைப் பற்றி நின்ற இவர், நிலைபேற்றை உணர்த்தும் அவரது ஊன்றிய திருவடியை இனித் துணையாகப் பற்றுவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
IRA AR

# நிறைகுடம்

திருமதி ஞா. சோமசுந்தரம் அவர்கள்

இன்று இராமநாதன் கல்லூரி அறுபத்தேழு ஆண்டுகால வளர்ச்சியைப் பெற்றுள்ள ஒரு கல்வி நிறுவனமாகத் திகழ்கின்றது. இதில் செம்பாதிக்கு மேற்பட்ட ஆண்டுகள்—35 ஆண்டுகள்—திருமதி இ. அருணாசலம் அவர்களின் சேவையைப் பெற்றதனாற் பெரும்பயன் அடைந்து சிறப்புற்றது. அதேபோல் இராமநாதன் கல்லூரியிற் பணியாற்றும் பேறு பெற்றதன் விளைவாகத் திருமதி அருணாசலம் அவர்களும் பெரும் பயன் அடைந்து சிறப்புற்றார்.

பெரும்பாலும் கல்லூரிப் பழையமாணவிகளே ஆசிரியைகளாக நியமிக்கப்பட்டு வந்த தனியார் நிர்வாக காலத்திலே தமது கல்வித் தகைமையின் காரணமாகவே செல்வி இ. குமாரசாமி, பீ. ஏ. அவர்கள் இராமநாதன் கல்லூரியில் உதவி ஆசிரியையாகக் கடமையாற்ற அன்றைய முகாமையாளராகிய லேடி இராமநாதன் அம்மையாராற் றெரிவு செய்யப்பட்டார். அக்காலத்திலே பட்டம்பெற்ற ஈழத்துத் தமிழ்ப்பெண்கள் மிகக் குறைந்த தொகையினராகவே இருந்தனர். அவர் கடமை ஏற்ற 1945ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்ற எம் நாட்டைச் சேர்ந்த பெண் ஆசிரியர், அவர் ஒருவர்தான். கல்லூரி அதிபராகப் பணியாற்றிய திருமதி N. P. பிள்ளையவர்களும் மற்றுமோர் உதவிஆசிரியையாகிய திருமதி வாசுதேவன் அவர்களும் பாரதநாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இதன் காரணமாக மாணவிகள் மத்தியில் அவருக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது. அவரைப் போல் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும் என்ற பேரார்வமும் தோன்றியது.

உதவி ஆசிரியையாகக் கடமையாற்றிய காலத்திலே ஐரோப்பிய வரலாறு, இந்திய வரலாறு, அரசியல் ஆகிய பாடங்களைப் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்க்குத் திறம்படக் கற்பித்ததன் பயனாகப் பெருந்தொகையான மாணவிகளைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதில் திருமதி அருணாசலம் அவர்கள் பெரும் பங்கு வகித்தார். அதிபராகக் கடமையாற்றத் தொடங்கிய பின்னரும் அவர் பல ஆண்டுகள் அரசியலை உயர்தர வகுப்பில் சிறப்புறக் கற்பித்து வந்தமை பாராட்டற்குரியது.

ஆசிரியை என்ற வகையில் நோக்கின் ஒரு நல்லாசிரியருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் எல்லாம் அவரிடம் பொருந்தியிருந்தன என்று கூறலாம். கடமை உணர்ச்சி அவரிடம் குடிகொண்டிருந்தது. நேரந் தவறாது மணி அடித்தவுடன் வகுப்பிற்குச் சென்றுவிடுவார். தேவையாயின் மேலதிக வகுப்புகளையும் நடத்துவார். அதிபராகக் கடமையாற்றும் இந்நாளிலும் நேரந் தவறாது தமது வகுப்புக்குப் போகும் இயல்பு அவரிடம் தொடர்ந்து இருந்து வருவதைக் காணலாம். மாணவிகளிடம் அன்பாகவும் அதேசமயம் கண்டிப்பாகவும் நடந்துகொள்வார். தம்முடைய பாடத்தை மாணவிகள் ஊக்கமாகப் பயில்வதற்கான முறைகளை எல்லாம் மேற்கொள்வார். அவர்களது முன்னேற்றங் கண்டு மகிழ்வடைவார். இதனால் அவரிடம் கற்ற மாணவிகளுக்கெல்லாம் அவர்பால் அன்பும் மதிப்பும் பெருகியதில் வியப்பேதுமில்லை. பெருந்தொகையான மாணவிகளின் நன்றியுணர்ச்சிக்கு அவர் பாத்திரமானார்.

திருமதி அருணாசலம் அவர்கள் தம் கல்வித் தகைமையை மேலும் வளர்க்க முற்பட்டு 1947ஆம் ஆண்டில் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் பயின்று பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையாயினார். படிப்படியாக உத்தியோகத்தில் உயர்வு அடைந்தார். 1958ஆம் ஆண்டு முதலாந்தர விசேட பதவியைப் பெற்றார். 1966ஆம் ஆண்டு உதவி அதிபரானார். 1969ஆம் ஆண்டு அதிபரானார். பதினே

250144
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

ராண்டு காலம் அதிபராகக் கடமை யாற்றியதன் பின் இப்போது ஓய்வுபெறும் கட்டத்தை அணுகியிருக்கிறார்.

திருமதி அருணாசலம் அவர்களின் மாணவியாகவும் சக ஆசிரியையாகவும் விளங்கிய யான், இன்று அவருடைய தலைமையில் உதவி ஆசிரியையாகச் சேவை யாற்றி வருகிறேன். பல்கலைக்கழகத்தில் யான் கழித்த நான்கு ஆண்டுகள் நீங்கலாக 31 வருடங்கள் அவருடன் ஓரளவு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு உண்டு. அவர் முதன்முதலாக ஐரோப்பிய வரலாற்றைக் கற்பித்த உயர்தர வகுப்பில் நானும் ஒரு மாணவியாக இருந்தேன். ஒன்றரை ஆண்டுகளே அவரிடம் மாணவியாக இருந்தபோதிலும் அவருடைய கற்பித்தற்றிறனை நன்கு உணர்ந்தேன்.

சக ஆசிரியையாகத் திருமதி அருணாசம் அவர்களுடன் கடமையாற்றிய காலத்தில் அவர் எமக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியமையை மறக்கமுடியாது. மாணவர் நலனில் மிகுந்த கவனமும் ஆர்வமும் செலுத்தி வந்ததோடமையாது கல்லூரி வளர்ச்சிக் காகவும் உழைத்தார். அருந்ததி இல்லத் தலைவியாக அரும்பணி ஆற்றினார். சரித்திர மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து அதனைத் திறம்பட இயக்கிவந்தார். சரித்திர நாடகங்கள் சிலவற்றையும் மேடையேற்றினார். தம் காலத்தில் அதிபர்களாகக் கடமையாற்றிய எல்லாருடனும் ஒத்துழைத்தார். அவர்களுடைய நம்பிக்கையையும் பாராட்டுதலையும் பெற்றார்.

இருபத்திநான்கு ஆண்டுகளாகப் பெற்ற பயிற்சியும் அனுபவமும் அதிபராகப் பதவியேற்ற காலத்தில் அவருக்கு உறுதுணையாயின. அவர் அதிபராக இருந்த காலத்தில் கல்லூரி அடைந்த வளர்ச்சியை அனைவரும் அறிவர். ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் பரிசளிப்பு விழாவிலே சமர்ப்பிக்கப்படும் அதிபரின் அறிக்கைகள் அவற்றைத் தெளிவாக எடுத்துக் கூறுவனவாகும். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற உடற் பயிற்சிப் போட்டி, சமயபாடப் பரீட்சைகள், பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, பேச்சுப் போட்டிகள் ஆகியவற்றிற் கலந்து பல முதலிடங்களைப்பெற்று எம் கல்லூரி முன்னணியில் நிற்கின்றது.

பதவி உயர உயரத் திருமதி அருணாசலம் அவர்களிடம் பணிவும் அடக்கமும் கூடிக்கொண்டே வந்தன. ''பணியுமாம் என்றும் பெருமை'' என்பதற்கு இணங்க அவர் தம் கடமைகளைப் பணிவுடன் ஆற்றி வந்தார். இன்சொல்லும் இன்முகமும் பொருந்தியவராய் ஆசிரியர்கள், கல்லூரி ஊழியர்கள், மாணவிகள் அனைவரையும் தத்தம் கடமையிலே ஊக்குவித்து வந்தார். அதிகாரத்தினாலன்றி அன்பினாலேயே எல்லாவற்றையும் சாதித்துள்ளார்.

அதிபரும் உப அதிபரும் மனவேற்றுமையின்றி ஒன்றுபட்டு உழைத்தமையாலும், ஆசிரியர்களுடைய பரிபூரண ஒத்துழைப்பைப் பெற்றிருந்தமையாலும் எவ்வித இடர்ப்பாடுமின்றித் தம் நிர்வாகக் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலை அபிவிருத்திச் சபையுடன் (பெற்றோர் ஆசிரிய சங்கம்) நெருங்கிய தொடர்பு பூண்டு, அதன் துணையுடன் கல்லூரிக்கு அவசியமான பல புதிய கட்டிடங்களை நிறுவினார். கல்லூரிப் புதிய மண்டபம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இதனை நிறுவுவதற்கு அவர் பட்ட கஷ்டங்களும் மேற்கொண்ட முயற்சிகளும் பல. பெற்றோர் பழைய மாணவிகள் ஆகியோரிடம் நிதி திரட்டினார். நாட்டிய நாடகம் நடாத்தினார். அரசாங்க உதவியும் பெற்றார். இன்று ஆயிரத்துக்கு மேற்பட்ட எம் மாணவிகளும், அறுபதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் ஒன்றுகூடுவதற்கேற்றதாக இம் மண்டபம் தலைநிமிர்ந்து நிற்கிறது. வருங்காலச் சமுதாயம் இதன் பொருட்டு அதிபருக்கு என்றும் நன்றி பாராட்டும் என்பதில் ஐயமில்லை.

திருமதி அருணாசலம் அவர்கள் அதிபராயிருந்த காலத்தில் இராமநாதன் கல்லூரியில் இருந்த நாம் எல்லாம் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தார் போலவே நெருங்கிப் பழகினோம். அதிபரும் அனைவருடைய சுகதுக்கங்களிலும் பங்குபற்றினர். ஓர் அன்னையின் தயையுடன் அவர் நடந்துகொண்டமை போற்றற்குரியது. அவர் ஆசிரியர்கள் எவரைப்பற்றியேனும் குறை கூறியதையோ, எவர்மீதாவது குற்றஞ் சுமத்தியதையோ யான் அறியேன். இராமநாதன் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் குற்றங்குறை அற்றவர்கள் என்பதன்று இதன் கருத்து. உலகில் குறையில்லாதார் யாவர் உளர்? அதிபருடைய உயர்ந்த உள்ளம் எவர்மாட்டும் குற்றத்தைக் காணாது குணத்தையே கண்டது என்றே நாம் கொள்ளவேண்டும். எவருடைய மனமும் நோகாது எல்லாரும் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதை அவர்தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இதுவே அவருடைய வெற்றிக்கு அடிப்படையாக இருந்தது. அவரிடம் கல்விகற்ற பழைய மாணவிகளும், ஏனைய பழைய மாணவிகளும் தங்கள் சொந்த அன்னையின் இல்லத்திற்கு வருவதுபோல இராமநாதன் கல்லூரிக்கு வந்து செல்வர். அவர்களை எல்லாம் அன்புடன் வரவேற்று உரையாடி அனுப்புவார் அதிபர்.

சேர் இராமநாதன் அவர்கள் கொண்டிருந்த இலட்சியங்களை யெல்லாம் லேடி இராமநாதன் அம்மையார் மூலமும், ஆறு ஆண்டுகளுக்குமேல் கல்லூரி விடுதிச்சாலையில் தங்கியிருந்ததன் காரணமாகவும், லேடி இராமநாதன் அவர்கள் தாபித்த சைவ மங்கையர் சபையின் தொடர்பினுலும் நன்கு புரிந்துகொண்ட எம் அதிபர் தமது பதவிக்காலத்தில் அவற்றிற்கமையவே செயற்பட்டு வந்தார். இராமநாதன் கல்லூரிக்கு எல்லாவகையிலும் ஏற்ற அதிபர் என்று அனைவரும் போற்றும் வகையில் நடந்துகொண்டார். கல்லூரிக்கு வருகை தந்த யாவரும் அவரைப்பற்றிய நல்லெண்ணத்துடனேயே திரும்பிச் செல்வர். மீண்டும் இராமநாதன் கல்லூரிக்கு வரும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்குவர். அமைதியும், அடக்கமும், தெய்வபக்தியும், பொறுமையும் வாய்ந்த இவரே இராமநாதன் கல்லூரிக்கு ஏற்ற அதிபராவார் என்று பலர் கூற நான் கேட்டிருக்கிறேன்.

கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களின் நன்மதிப்பையும் அவர் பெற்றிருந்தார். எல்லோராலும் 'நல்லவர்' என்று ஒருங்கே போற்றத்தக்க சிறப்பைப் பெறுவது மிகவும் அரிது. அத்தகைய சிறப்புக்குத் திருமதி அருணுசலம் அவர்கள் உரியராயினர் என்பது பெரும் பாராட்டுக்குரியதாகும்.

திருமதி அருணுசலம் அவர்களின் வெற்றிக்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்கின் அவருடைய ஆழ்ந்த திடமான தெய்வ நம்பிக்கையே அதற்குக் காரணம் என்று நிச்சயமாகக் கூறலாம். அவருடைய செயல்களெல்லாம் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையிலேயேஅமைந்திருக்கக் காண்கிறோம். எத்தனையோ இடையூறுகளும் சோதனைகளும் ஏற்பட்ட காலத்தில் எல்லாம் அவர் மனம் சோராது கடமையாற்ற உறுதுணையாக விளங்கியது நடராஜப் பெருமான்மீது அவர்கொண்ட பக்தியேயாகும் அப்பெருமானின் துணையால் அவருடைய ஓய்வுகால வாழ்க்கை சந்தோஷமும் அமைதியும் நிறைந்ததாக இருக்கும் என்பது திண்ணம். அதே திருவருள் இராமநாதன் கல்லூரியையும் தொடர்ந்து நல்வழியில் நடாத்திச் செல்லும் எனவும் நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்சொல்லின் இருப்பிடம்

**திருமதி ம. திருச்சிற்றம்பலம்**

இராமநாதன் கல்லூரியின் வடபால் ஒரு அமைதியான அறை உண்டு. அங்கு கல்வித் தெய்வம் கலைமகளின் படமும், லேடி லீலாவதி அம்மையார் படமும் காட்சியளிக்கின்றன. அங்கு தமிழ்ப் பண்பாட்டின் எடுத்துக்காட்டாக, சைவ சமயத்தின் காவலனாக, பொறுமைக்கு இருப்பிடமாக, அன்பின் உறைவிடமாக சாந்தமே உருவாக ஓர் அம்மையார் எந்த நேரமும் அமைதியாகவும், உறுதியாகவும் தனது கடமைகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார். அவ்விடம் வருபவர்களை எல்லாம் இன்முகம் காட்டி வரவேற்று, அவர்களின் தேவைகளை நேரமறிந்து காலமறிந்து நிறைவேற்றும் சுபாவமுடையவர். கடமையே கருத்தாக, கல்லூரியின் வளர்ச்சியே குறிக்கோளாகக் கொண்டுள்ளார். அவர்தான் செல்வி இ. குமாரசாமியாக இராமநாதன் கல்லூரியிலே காலடி எடுத்து வைத்து ஆசிரியையாகப் பல வருடங்கள் கடமையாற்றித் தற்போது அதிபராக விளங்கும் திருமதி இ. அருணாசலம் அவர்கள் ஆவர்.

பல்கலைக் கழகத்திலிருந்து புத்துணர்ச்சியோடும், பரந்த அறிவுடனும் வெளியேறிய அவர் இராமநாதன் கல்லூரியிலே வரலாறு, அரசியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். சரித்திர பாடத்தைப் பொதுவாக மாணவர்கள் வெறுப்பது வழக்கம். ஆனால் திருமதி அருணாசலம் அவர்கள் தனது கற்பித்தற் திறமையால் பல மாணவிகள் கலைத்துறையிலே ஈடுபட்டு உயர்கல்வி பெற வழிவகுத்தார். நீண்ட காலமாகப் பெருந்தொகையான மாணவர்களை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு அனுப்பிய பெருமை இவரைச் சாரும். தற்பொழுது நாட்டின் பல பாகங்களிலும் உயர் பதவிகளை வகிப்பவர்களில் பலர் எங்கள் அதிபரால் உருவாக்கப்பட்டவர்களே என்பதில் சந்தேகமில்லை. அதிபராகப் பதவி உயர்வுபெற்ற பின் இராமநாதன் கல்லூரியை நிறுவுநரின் உயர் கொள்கைகளுக்கு ஏற்ப நிர்வகித்த பெருமை திருமதி இ. அருணாசலத்தைச் சாரும். தமிழ்ப் பண்பாட்டையும், சமய உணர்வையும் ஊட்டி ஆயிரக்கணக்கான மாணவிகளை நல்வழிப்படுத்தி பெண்குலத்தின் பெருமையை நாடறியச் செய்தார். நிறுவுநரின் கொள்கைகளைப் போதனையில் மட்டுமன்றிச் சாதனைமூலமும் எடுத்துக்காட்டியுள்ளார் என்றால் மிகையில்லை. கல்லூரியிலே அமைந்துள்ள ஆலயம் சமய வாழ்விற்குப் பெரிதும் உதவியது. அம்பலத்திலே ஆடும் பெருமானின் அருளை நிரம்பப் பெற்று மகிழ்ந்தவர் திருமதி இ. அருணாசலம் அவர்கள். கல்லூரியின் குறிக்கோளுக்கு ஏற்ப வாழ்ந்து, கல்லூரியின் பாரம்பரியத்தைப் பேணி மரபுவழி நின்று இராமநாதன் கல்லூரியை முன்னேறச் செய்த பெருமை அவருக்குரியது.

அவருடைய பணி கல்லூரியுடன் நின்றுவிடவில்லை. பல வருடங்களாகச் சைவ மங்கையர் சபையின் உபதலைவராகவும், தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரியைச் சில காலம் பொறுப்பேற்று நடத்தி வந்துள்ளார். சமய சமூக சேவை அவருக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகும்.

பல நற்பண்புகளின் இருப்பிடமாக அதிபர் அவர்கள் விளங்கினார்கள். இன்சொல்லின் இனிமையை அவரிடத்தே காணலாம். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அன்பர்கள், தொழிலாளர் போன்ற பலருடன் பழகும் சந்தர்ப்பத்திலே அவர் இனிமையான பேச்சு மூலம் எதையும் சுலபமாகச் சாதித்துவிடுவார். அவருடைய காரியாலயத்திலே எந்த நேரமும் அதிகாரத்திற்கும், அந்தஸ்திற்கும் பதிலாக அன்பு ஆட்சி செலுத்தியது. பொறுமையாக இருப்பதால் அதிகவெற்றியடையலாம் என்ற உண்மைக்கு அவர் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு. அதிபர் அவர்கள் அறியாத விடயங்களும் பல உள. வன்சொல் அவர் பேசாதது. தீமை அவர் செய்யாத ஒரு விடயமாகும். கோபம் என்பது அவரிடம் காணமுடியாத ஒன்ருகும்.

தனது குடும்ப நலனிலும் பார்க்க கல்லூரி நலனைப் பெரிதாக எண்ணி, இரவு பகலாக அதன் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்தார். திருமதி இ. அருணுசலம் அவர்களின் அயரா உழைப்பின் சின்னமாகப் புதிய மண்டபம் காட்சியளிக்கிறது. அது என்றும் அவரின் பயன் கருதாத சேவையின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

கணவனுக்கு ஏற்ற சிறந்த வாழ்க்கைத் துணையாகவும் அவர் விளங்கினுர். பல வருடங்கள் பணிபுரிந்து இப்பொழுது அவர் ஓய்வு பெற்றுள்ளார். அவருடைய சேவைகளைத் தொகுத்துக் கூறுவது இயலாத விடயம். எல்லாம்வல்ல இறைவன் திருமதி இ. அருணுசலத்திற்கும் அவர் குடும்பத்திற்கும் இன்னருள் புரிவாஞக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOUNDER'S MEMORIAL ADDRESS AT RAMANATHAN COLLEGE

## 6th December, 1978

**by Mr. Justice A. Vythiyalingam**

*Mrs. Arunasalam, Distinguished Guests, Members of the Staff and Students of Ramanathan College, Ladies and Gentelemen,*

On behalf of my wife and myself I wish to express our deep gratitude to you for the great honour you have done us in inviting me to deliver the Founder's Memorial Address. When I received your invitation I thought it was a mistake and that you had confused me for that patient, painstaking and erudite scholar Mr. Vythilingam who had written the monumental biography in two volumes, of your great and illustrious founder the late revered Sir Ponnampalam Ramanathan,

It was only when I received a letter from Mr. R. N. Sivapiragasam that I discovered that the real reason for your invitation was, not on account of any achievements of my own, but because my wife happens to be an old girl of your institution. I am aware that having established this College for the education of young Hindu girls, your founder went on to establish Parameshwara College for the education of Hindu boys so that your old girls might find suitable husbands similarly nurtured in Hindu religion, culture and traditions. I do not know if my wife is disappointed that she did not marry an old boy of Parmeshwara College, but I can assure you that for my part, I am proud and happy that I married an old girl of Ramanathan College.

Long before the time of U. N. Sponsored Children's Day and the present day homage to youth, Sir Ponampalam Ramanathan used to say that the boys and girls of a country are its greatest national asset and that national regeneration could be achieved only through the regeneration and rehabilitation of youth. It is fitting therefore that on an occasion like this we should remember the life and work of this pre-eminent and transcendental personality so that it may serve as a model for emulation and a source of inspiration to the youth of today.

His was a varied and many splendoured genius and he was as sound an authority on philosophy, religion, literature, education and the arts as he was pre-eminent in the law. There are few instances in history in which a man has touched life at so many points with so much distinction and has left them all adorned and enriched by his contact. When we look back on his career and achievements we are truly amazed at his versatility. Little wonder that the first Prime Minister of free Ceylon, the late Rt. Hon. D. S. Senanayake called him the Greatest Ceylonese not merely of his time and age but of all time. Nor was his name and fame confined to this country only. India acclaimed him as the finest exponent of Saiva Sithantham and one well versed in the Vedic Lore. England received him as an astute parliamentarian, patriot and statesman. America welcomed him as a religious teacher, sage and philosopher.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs. Srikantha at Sir. Pon. Ramanathan Stamp Releasing Ceremony



Mr. C. Arulambalam Ex. M. P. for Nallur, Speaking at the Opening Ceremony of our New Hall — 1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. T. Manickavasagar DE/NR
Delivering the Prize day Address — 1978



Dr. Premadasa Udagama
at our Diamond Jubilee Exhibition — 1974



Mr. V. Dharmalingam, M. P. for Manipay
at our Agriculture Unit Opening Ceremony

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In Malaya he was received, where ever he went, with admiration and respect.

Thus did fate conspire to make him take to the law—a career in which he was to attain such spectacular successes and was to prepare him for the role he was to play in later life. On his return from Madras his uncle persuaded Sir Richard Morgan one of the ablest of our Attorney-Generals to take on Sir Ponnampalam Ramanathan as apprentice student at law.

To this advantage of an excellent training Sir Ponnampalam Ramanathan added his own qualities of a commanding personality, a striking voice, a lucidity of exposition, a prodigious memory and an impressive command of the English language As an advocate he was eloquent and persuasive and he was always calm, cool and collected and nothing ever seemed to ruffle him. In cross-examination he affected an air of gentleness, which was extremely deceptive with his witnesses and wormed things out of them which harsher methods might have failed to do, by putting the witness on his guard. He had a remarkable way in re-examination of undoing all that a cross-examiner had gained for his case and put his evidence in a very different light.

They say that a genius is 90 percent perspiration and ten percent inspiration and so it was with Sir Ponnampalam Ramanathan. He brought to the practice of the profession, as in all the other spheres of his activities, an immense capacity for hard work and for long hours of sustained effort. He would pour over his briefs from cover to cover, search for precedents and look up the law with a thoroughness and the closest attention to the minutest detail until he obtained complete mastery over the facts and the law. Add to this a dauntless courage and a tenacity of purpose and you have an unbeatable combination for success and success in the profession did come to him very early in his career.

Ramanathan's bed was not one of roses all the way. He had many disappointments in life but he took all of them with his usual stoicism. One such disappointment came to him in 1902 when on the retirement of Sir John Bonsor, the Attorney-General, Mr. Charles Layard was appointed as the Chief Justice. Having filled the post of Solicitor-General for ten years with such distinction and success Ramanathan should have been appointed to succeed Mr. Layard. But it was not to be and Mr. J. H. Templer Senior Crown Counsel, who was very much junior to Ramanathan was appointed Attorney-General. It was little consolation to him that in 1903 he was appointed as one of His Majesty's Counsel, Learned in the law, the first Tamil to be so honoured. It would appear that the avenue of elevation to the Supreme Court Bench would also not be open to him and in 1905 he retired prematurely from the post of Solicitor-General.

Whithin three years of his entering the legal profesion Ramanathan had laboured among the worm-eaten, decayed and discoloured, with the ink all but bleached, records in the dusty record rooms of the Supreme Court and had, unaided, selected and copied the more important judgments. On one occasion when he appeared as the junior to the Queen's Advocate Sir Richard Cayley, in appeal, Ramanathan was able to give him some valuable reference to cases which had been decided earlier, to support his arguments. Sir Richard was much im-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pressed by the manuscripts in which these judgments had been kept and recommended to the Government that they should be published under Government patronage. Thus was published the reports of cases known as the Ramanathan Reports (1820-33, 1843-55, 1860-62 1863-68, 1872-1875 and 1876) They are held in great esteem even today by Judges and lawyers and as recently as a month ago I had occasion to refer to one of the judgments reported in his reports.

At the instance of the Chief Justice Sir John Phear Ramanathan thereafter edited a semi Government Report known as the Supreme Court Circular until 1879. when the Government started publishing its own reports of cases Ramanathan became the obvious choice as Editor and he edited the first eight volumes of The New Law Reports.

In the practice of his profession he always maintained the highest traditions of the Bar and set himself lofty standards of rectitude and integrity which was a source of inspiration to the junior members of the Bar whom he always befriended and helped As a recognition of his pre-eminence at the Bar and the high esteem in which he was held by the Judiciary and the Bar the Inner Temple conferred on him one of its rarest honours, which only two or three others could boast of, by admitting him as a Barrister Honoris Causa.

He believed in the independence of the Judiciary and defended it fiercely and with all the eloquence at his command. In 1912 two of the trustees of the Maha Devala and the Kataragama Devale were dismissed by the District Committee administrating the Buddhist Temporalities Ordinance. The trustees filed action in the District Court of Kandy and the Government brought in legislation to amend the Buddhist Temporalities Ordinance which would have made it impossible for the plaintiffs to proceed with their action, for according to the Government it was a mischievous and useless litigation and an abuse of the processes of court.

He got the unofficials to act together and very soon, young as he was, the other unofficial members followed his lead and stood solidly behind him He extracted from the British Government the promise that it would respect the wishes of the unofficial members if they were unanimous in preference to the views of the official majority. The first phase of his activities as a legislator ended in 1892 when he accepted the post of Solicitor General though he came back to it for three short spells when he took his seat in the Executive Council as Acting Attorney General. By that time however he had attained the eminence of being the Senior Unofficial Member.

It was the time of the riots of 1915. Beginning as a purely parochial and insignificant incident in Kandy it took the familiar turn that such incidents now take. Rumour mongers stepped in and spread the rumour that the Dalada Maligawa had been sacked. Hooligans and toughs of every area took advantage of the situation. There was murder arson and looting all over the country. Fighting for dear life against the German hordes in the first World War the British officials panicked and saw in this purely communal affair an organised attempt to overthrow their government. Martial law was declared and hundreds of innocent persons particularly among the wealthy and powerful Singhalese were

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

arrested, court martialled and thrown into prisons. Many paid the supreme penalty.

Ramanathan threw himself with a frenzy to put a stop to the mischief. He went here, there, and everywhere, pleading for the return to reason, and sanity allaying fears and stopping the damage. In the Council he rose to great heights and pleaded with sustained eloquence and compelling reason for the end of martial law, the release of the prisoners, the reduction of community fines which had been imposed by special commissioners quite arbitrarily and for the punishment of the guilty officials. He made six impassioned speeches in the Council which he published in a book, which is unfortunately now rare, under the title of "Riots and the Martial Law in Ceylon". He braved the seas which were ridden with enemy action and submarines to proceed to England and acquaint the British public and Parliament of the true position. His campaign was successful and he was received by a grateful nation as no other National Hero was acclaimed either before or after.

He fought hard and long to see that the Railway was extended to Jaffna. Officials saw this as a useless project to take the railway through the arid and waste lands of the North Central and Northern Province and were unanimous in their opinion that it would not pay its way. Ramanathan persisted with dogged perseverance and ultimately succeeded in getting this great boon for the people of Jaffna. What was thought to be a non profitable extension, the line to the moon as some called it, is today the most profitable as also the most neglected of all the lines in the entire Railway.

In an impassioned speech at the prize day at Ananda College in 1904 he exclaimed "If Sinhalese lips will not speak the Sinhalese language who else is there to speak it! He exhorted the audience that it was their "duty to cultivate the study of the Sinhalese language to the best of your power and to speak it ignoring the English language on all occasions where English has no business." Believing firmly in the immense superiority of the religions and spiritual values of Hindu and Buddhist traditions and culture over the materialism of the West, he fought incessantly in and outside Council for the increasing establishment of more and more schools in the national languages.

His knowledge of Christianity was acclaimed in America and England where he went on lecture tours. He wrote a commentary of St. Mathew and St. John and his book on Western Pictures for Eastern Students is an account of his American lecture tour. He knew the teachings of Islam and made a close study of the life and works of Buddha. But his crowning achievement and his priceless gift to the Hindus of Sri Lanka is the Ponnampala Vaneshvarar temple in Colombo. Built out of pure granite stone by expert architects and temple workmen from India on Agamic principles, it is one of the noblest examples of Hindu Architecture and Sculpture.

Sir Ponnampalam Ramanathan was fortunate in his wife, the devoted and gracious Lady Ramanathan. Highly talented, of great culture and refinement, she took a passionate interest in the Hindu religion, culture, traditions. To familiarise herself with the people and the country she visited the home

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of every student of Ramanathan College in-order to study their homelife, back-ground and conditions of work. Many years ago when I was a little boy six years old, I remember her coming to our house in the remote village of Karukampanai as my elder sister was then a student of Ramanathan College. On the 30-11-1930 his immortal soul departed his mortal remains, which were interned in the Samadhi in your instituition.

I am happy to have had of this opportunity of paying my humble tribute to this national figure with all international reputation for his memory is well worth preserving, well worth cherishing, well worth handing down to our children and our children's children as precious heir-loom.

✷

## JAFFNA RAILWAY

*"It is not a wild scheme; it is a very practicable scheme. It is a scheme that will do the greatest good to Ceylon......*

*I shall never cease to agitate until the railway to Jaffna is an accomplished fact."*

**— Ramanathan**

✷

*"If Sinhalese lips will not speak the Sinhalese language who else is there to speak it?.. How is a nation to be lifted out of error reformed and advanced into plains of higher knowledge except by its own language?"*

**— Sir Pon. Ramanathan**

✷

*"If Public Servants appeal to the Legislative Council on a question of pay or promotion or any other grievance, I do not think they could be considered to be guilty of a breach of discipline."*

**— Ramanathan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE FIRST PRIZE GIVING REPORT — 1915

*[We feel honoured to reproduce the speech made by His Excellency the Governor of Ceylon SIR ROBERT CHALMERS, and the Vote of Thanks rendered by Sir Ponnambalam Ramanathan at the First Prize-giving Function of Ramanathan College, held on 2nd March 1915 in the College Hall.* — Editor*]*

His Excellency the Governor, having distributed the foregoing Prizes, rose amid cheers and said,—

Ladies and Gentlemen,

When I first arrived in this Colony on the 18th October, 1913, I remember well that in the Legislative Council Chamber an address was read to me in silvery tones—an address of welcome coupled with admonitions—and that address was read by the founder of this College, Mr. Ramanathan. Since that first public meeting of Ramanathan, I have had various opportunities of long conversations with Mr. Ramanathan, as with Mr. Kanagasabai and every other member of the Legislative Council, not exclusively on public affairs in the ordinary sense, but also in the way of interchange of views on all things that they and I and other members of the Council take interest in. Restricting myself for the moment to one of the things Mr. Ramanathan is always most anxious to talk about — education. Now, I happen to take a lively interest in education, more particularly in its higher aspects; and conversations that I have had with Mr. Ramanathan made me seek for an opportunity to come up to Jaffna, and take the opportunity of returning the compliment that he paid to me on the 18th October, 1913—by visiting the College in which he is so much interested, and by administering an address to him in return. But let not Mr. Ramanathan be alarmed, as I was (in the strictest confidence I say it), when I arrived in the Colony and had to face music on quite unknown instruments. (Laughter)

As I say Mr. Ramanathan has frequently told me of his general views on education and of the peculiar interest which he takes in this particular application of the principles he holds dear. I am always interested—deeply interested in the serious efforts of any man who has at heart the carrying out of any work which appeals to his heart, be he who he may be, — be his work cast on these lines, or on those. If you come to think of it, what you have to do first of all in approaching the work of anyone, is to try and understand what that man or woman really means. What is this aim? What are the principles which guide them? First put yourself in their place; put yourself under their conditions; observe, and then see what you think. That is the beginning of wisdom in all these matters. It is appreciation and not depreciation. (Applause).

Well, what does Mr. Ramanathan aim at, at this particular moment, in the ideas and principles that he adheres to? First and foremost, you will realise, on entering the corridors, that this is a School for Girls; that is the simple primary fact that you observe I dare say, if you cross-examined Mr. Ramanathan, as in other days he cross-examined others at the Bar, we should elicit from him that he had other views beyond, and extensions of his views.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

But as a very practical man, Mr. Ramanathan engaged on one thing at a time, and it is a Girls' School which is opened now. I am acquainted, as many of you are, with some Thamil proverbs on the subject of the education of women. Those proverbs are not favourable to the higher education of the Women. Nevertheless, I think if I were asked what, on the whole, in the intellectual and moral sphere has been the greatest gain that has come to the East from the West — it would be just this realm; that of the recognition of the need for higher education for women. It is not the Eastern idea of women, it is not the natural and immediate product of Eastern thought, life and criticism. The East has always had its own traditions; it has large ideals of culture and education for men. But the enlarged civilization to which I suggest the West has added so much, the civilization which is awaiting us, is at your doors today, and will be brought still nearer to morrow; that civilization, I say, requires the education of women no less than of men. (Applause)

I remember hearing in a different context a very homely illustrations of the need for the joint progress of both sexes, and that very simple and homely illustration came from a carriage with two pairs of wheels, the little ones running round fast and the big ones more slowly, and yet because of their joint action the whole carriage runs at one uniform pace. So it should be with education. You cannot neglect in the education of women the essentials of the educational life and conditions and ideals of the men of whom they are the natural partners in life. (Applause) I may be expressing Mr. Ramanathan's view in this.

There is another aspect which I do not hesitate to touch upon in this connection. I should say that Mr. Ramanathan's work is associated primarily with the education of women. There is a special feature of it. further that observation and that appreciation, which I suggest to you is desirable, must recognize and see. This is a Hindu College. It is an institution which, while seeking to instruct, as far as may be, in the ideals, the methods and the examples of the west, yet bases itself essentially on the development and on the fulfilment of what is national to the people who come the college.

I am quite certain and say very frankly and clearly, no people which ignores its own past and which does not seek to realise itself can hope to have any future at all. (Hear, Hear) But it should not stand on the lines of the past only; it should grow from the roots of its past and still be itself, though its growth will be enhanced and enriched by absorbing into self what it sees and feels to be the best from elsewhere

We hope, as everyone hopes, to see edueation in Ceylon advanced towards still higher ideals, and so to give the freest scope for the healthy and organic development of the best of which each individual is capabble in self-realization. (Loud Applause)

Mr. P. Ramanathan said:—

Ladies and Gentlemen,

I see by the clock that we have about four more minutes to conclude the hour which His Excellency has marked out for us, and my pleasant duty now is to propose to you to accord a vote of heart-felt thanks to his Excellency for so graciously coming

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to this College and spending sixty long minutes amongst us. The pregnant speech which he has delivered really deprives me of the power of speaking freely. My heart is so full and so deeply appreciative of the observations made by him, that I do not think that I ought to add any words on this occasion, and so divert your attention from his words.

We who are very near him have the privilege of knowing him quite well, not only from the speeches that he has delivered on public platforms, but also from conversations and observations of his doings. Permit me to relate an incident which occured not many months ago on the road from Colombo to Mount Lavinia. It brought home to us all, at the time, the spirit of self-effacement and broad sympathy which adorns his Excellency. One day when he and Lady Chalmers were driving near Mount Lavinia, they witnessed a marriage procession; they got down from their motor car, went up to the bride and bridegroom, who were Sinhalese villagers, and offered their congratulations to the happy couple who wondered who they were. (Applause) Incidents like this go deep into the hearts of every one. We know him to be most unassuming and kind-hearted, and to be ever ready to uplift the people. Time is flying I beg that you will accord to His Excellency your best thanks by standing up in a body and tendering them to him with acclaim. (Loud Applause, the whole audience standing up).

Then His Excellency the Governor replied,

Mr. Ramanathan, Ladies and Gentleman, — I, am very much obliged to you for the very kind reception given to me. I am grateful to the Founder and the President of this college for giving me the opportunity to see this beautiful College. What a striking picture it was to go along the corridor and see the girls moving in their pretty attire, and to hear the exquisite music-one of the prettiest scenes that I have ever seen! (Applause).

⁕

*Politics or the art of good government of the people is one of the noblest of human arts and an instrument of self-culture into the bargain*".

— **Sir P. Ramanathan**

⁕

"*If the country is really in peril we should all vote for Ramanathan*".

— **Sir James Peris**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIR P. RAMANATHAN'S SELECT SPEECHES IN COUNCIL — EXCERPTS

**Compiled by Mrs. S. K. Sundaresan**

*On the importance of having Select English Books on Ethics and Science translated into the Vernaculars of the Island.*

On the third of December, 1879, the Hon Mr. J. P. Obeyesekera, the Sinhalese Representative, drew the attention of the Government to the necessity there was for providing the vernacular schools of the island with a suitable series of Sinhalese books, and asked whether, if any, and if so, what steps had been taken to meet that want, in consequence of the report, dated the 2nd February, 1871, made by the Committee on the Subject of Vernacular Education, to the Government.

In seconding this motion Mr. Ramanathan said :—

The Hon. the Sinhalese member has pointed out that the subject of providing vernacular schools with Sinhalese books has not received that attention from the Government which it called for, and has pathetically appealed to His Excellency not to allow the literature of his race to die out. I certainly think that Sinhalese schools should be furnished with a proper set of Elementary books, but that alone is not sufficient. For what is the Sinhalese youth to do after he has read the reading books of standards 1, 2, 3 and 4? At present the great ambition of the Sinhalese youth, who has picked up a smattering of English in the Anglo-Vernacular schools is to assume the external phases of Western Civilization only, without caring to aspire to those really sound elements of it which make that civilization valuable. When the Sinhalese youth comes to know a little English, his mind becomes unsettled. He discards the plough, the honourable and useful calling of his ancestors, idles away his time or becomes a petition-drawer or clerk on a miserable pittance. This is not as it should be......

What the Sinhalese and Tamil youth lack most is character. It is the duty of the Government to develop it. The youth of the country ought to be made to think on sound lines, without prejudice, wayward inclination or caprice. I know of no book that can effect this object better than Smiles "Self-help", the like of which does not exist in Tamil or Sinhalese prose.

*Speech on the proposed revised code of education for 1881, and the grant-in-aid-system.*

Mr. Ramanathan said :

...I have always taken a deep interest in the cause of education...... The Pansala education of the Sinhalese districts was a copy of the Pathasala system indigenous to India with which we have been made familiar by Sir George Campbell. In the Tamil districts there was a corresponding institution in the School of the hereditary village teacher. The education imparted in these institutions was by no means high or liberal. It was elementary and adapted to the necessities of village life....

The Sinhalese and Tamil peoples of this country always set store by educaion of this kind. It is mentioned of king Vijayabahu III, who reigned in 1240, that he established a school **in every village** and charged the priests who

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

superintended them to take nothing from the pupils, promising that he would himself reward them for their trouble. Such was the policy of enlightened Sinhalese Sovereigns, the policy of bringing free education to the very doors to the people. The Dutch pursued the same policy.

*On the Religious intolerance of certain Christian Missionary Managers grant-in-Aid Schools in the Northern Province of Ceylon.*
(11th February 1884)

Mr. Ramanathan said:

I rise, Sir, to call the attention of this council to the memorial I had the honour to present a fortnight ago from certain Hindu inhabitants of the Jaffna Peninsula, complaining of religious intolerance on the part of certain Christian missionary managers of grant in-aid schools.

The specific nature of the grievances complained of appears in the memorial itself and that is that children who are obliged to go to these missionary schools are forced by the missionaries, under pain of fines and expulsion, to read Bible whether they liked it or not which in my estimation is an excellent book, and to rub off those sectarian marks of devotion to religion which Hindus are enjoined by their ancient spiritual teachers to put on their forehead. It is needless now to go into the reasons of these practices. They are matters of faith, about the validity of which this Council will not enquire or judge.

I desire to approach the subject of the complaints made in the memorial with a due sense of the great work done by the missionaries on the field of generel education. I am not at all antagonistic to their labours amongst us. I have always endeavoured to be tolerant in the widest sense of the word in matters of religious faith and religious enthusiasm. My opinions are well-known to all communities, and Christian missionaries have always courted my help in the solution of educational questions.

In the year 1880 their leaders came to me in a body and asked me to present their grievances to this Council, and I gladly did my best for them. I have no fear of being misunderstood. Your Excellency's words that it is your intention to maintain perfect neutrality between the different creeds in Ceylon, have been recently quoted with approval by His Lordship the Bishop of Colombo.

I beg in the first place to call your attention to the fact that there are no government schools, either English or Anglo-Vernacular, in the Northern Province of Ceylon, and that English education is imparted almost exclusively by the different Christian missionary bodies who have located themselves there. It appears that religious intolerance on the part of some of the managers has varied with varying times and circumstances, and that it has been steadily growing ever since the champion reformer of Hindus in the Northern Province died in 1879......

H E. The Governor: Who did you say?

Mr. Ramanathan: The Hindu reformer named Arumuga Navalar. Hindu boys who, for want of their own English schools, resort to the missionary schools, have learnt to make mental reservations and are getting skilled in the art of dodging. The holy ashes put on at home during worship are carefully rubbed



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

off as they approach the Christian school and they affect the methods of Christian boys while at school. I know of many cases in which even baptized boys and teachers, when they cease to be connected with such schools, appear in their true colours, with broad stripes of consecrated ashes and rosaries, to the great merriment of the people and the deep chagrin of the missionaries. There is a great deal too much of hypocrisy in Jaffna in the matter of religion, owing to the fact that the love of the missionaries for proselytes is as boundless as the love of the Jaffnese to obtain some knowledge of English at any cost. I cannot help thinking, Sir, that the policy pursued by some of the Christian managers of grant-in-aid schools is a ruinous mistake. It stands condemned by the Roman Catholic Bishop, the Right Rev. Bonjean, who has had several years of experience in the Northern Province.........

If the Government are unwilling to have a conscience clause, though I cannot conceive for what reason they should be unwilling, they should at all events give the inhabitants of the Northern Province the same advantages which are given to the inhabitants of other provinces. In the Western Province there are 26 English and Anglo-vernacular Government Schools; in the central province there are 11; in the Southern Province 10; but there are no such schools in the Nothern Province. I feel, Sir, that I have only to state my case to enlist the sympathy of hon. members around this table, and I will not dwell any longer upon the subject.

*

*He (Ramanathan) taught us that man does not live by bread alone that man's life upon this planet find's its true meaning and fulfilment not in self-love but in self-denial and service... ..*

— **M. Vythilingam**

*

*"When the great men of Ceylon were vying with one another to secure gubernatorial smiles, Ramanathan's thunders were directed against gubernatorial misdeeds. The high water-mark of his services to Ceylon was the heroic role he played in connection with the riots of 1915."*

— **Handy Perinbanayagam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி கமலாதேவி அருள் தியாகராசா

திருமதி S. S. குமாரசுவாமி, *B. A.*

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

"வையத்துள் வாழ்வு" —நாம் நமது முற்பிறப்பில் செய்த நன்மை தீமைகளை இப்பிறப்பில் அனுபவிக்கும் பொருட்டே இறைவன் எமக்கு இந்த உலகையும் வாழ்வு நியதியையும் தந்துள்ளான். உலக வாழ்விலிருந்து தப்பி ஓடிவிட முடியாது. வாழ்ந்தே யாகவேண்டும். அதுபோல மரணத்திலிருந்து தப்பி ஓடிவிடமுடியாது. அதனை வரும்போது ஏற்றேயாகவேண்டும். ஆனால் இவ்வையத்தில் நாம் மறுபிறவிக்கு நல்வித்தினைத் தேடிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு எமக்கு உண்டு. இவ் வையத்துள் வாழ்வதெப்படி? அதனை எமது தர்மசாத்திர நூல்கள் சமய அனுட்டான விதிகள் கூறியுள்ளன. அவ்வாறே வாழ்ந்து காட்டிய பெருமை திருமதி கமலாதேவி அருள் தியாகராசாவிற்கு உண்டு.

இவர் 1927ஆம் ஆண்டு மார்கழி மாதம் 9ஆம் திகதி பிறந்தார். நல்ல தமிழ் அறிவும் மதப்பற்றும் உள்ள குடும்பத்தில் பிறந்த இவருக்கு தமிழிலும் சமயத்திலும் ஊறித்திளைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது அவர் முன்பு செய்த நற்பயனேயாகும். இளமையிலேயே நல்ல தமிழ் அறிவு பெற்ற இவர் 1943ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரிக்கு Prep. S. S. C. வகுப்பில் சேர்ந்தார். இங்கும் அவர் மனப் பக்குவம் அடையும் நல்ல சூழ்நிலையே காணப்பட்டது. 1947ஆம் ஆண்டில் இவர் இலண்டன் இன்டர் பரீட்சையை எழுதினர்.—ஆர்வமும் பேருக்கமும் அயரா உழைப்பும் இவர்பால் உண்டு. நிறைந்த அவதானமும் கல்வியில் மேம்பாடும் இவர் செய்தவம் ஆகும். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்துசமயம் ஆகிய பாடங்களில் இவருக்குத் தனிப்பட்ட பற்று இருந்தது. 1952ஆம் ஆண்டு இவர் B. A. தமிழ் (ஆர்னேஸ்) பரீட்சையில் சிறப்புச் சித்தி எய்தியது வியப்பொன்றில்லை. 1947ஆம் ஆண்டிலிருந்தே இவர் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்தார்.

அன்பும், பண்பும், அடக்கமும் இவரது சிறந்த அணிகலன்கள். எந்த ஒரு பிரச்சனையையும் ஆறுதலாகச் சிந்தித்து உடன் பதிலளியாது ஒரு சிறு புன்முறுவல் உதிர்த்து நன்கு யோசித்துப் பின்கூறும் நல்ல பண்பு இவரிடம் இருந்தது. எவர் எத்தகைய ஐயப்பாடுகளைக் கேட்டாலும் அதற்குத் தகுந்த பதிலளிப்பார். இவரது ஆறுதலான சுபாவம் குறும்பு மாணவர்களிடையே சிறு குட்டித்தனம் செய்யத் தூண்டிடும். அப்போது அவர் அன்பாகக் கடிந்து மாணவரை நெறிப்படுத்துவார். தமிழில் மாணவர் சித்திபெற்ருல் மட்டும் போதுமென நினையாது தனக்குக் கொடுக்கப்பட்ட பாடங்கள் அனைத்திலுமே மாணவர் வெற்றிபெறப் பாடுபட்டார். சமய ஆசாரப்படி தாமும் வாழ்ந்துகாட்டி மாணவரையும் அவ்வழிக்கு நெறிப்படுத்தினர். இவ்வேளையில்தான் அவரது பூர்வ புண்ணியம் 1957இல் அவரைப்போலவே 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' விரும்பும் சமய ஆசார சீலரும் தமிழ் விற்பன்னருமான திரு. அருள் தியாகராசா (காலஞ்சென்ற இலங்கைவானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி) அவர்கள் அவருக்கு வாழ்க்கைத் துணைவராக வந்தார். அவரது வருகையின் பின்னர் சைவசமய ஆசாரமும் பக்தியும் அவர்பால் மேம்பட்டு வளர்ந்தது. விரதம், கோயில் வழிபாடு, யாத்திரை, நல்லறம், விருந்தோம்பல் ஆகிய சீரிய பண்புகள் அவர்பால் வளர்ந்தன. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்பதற்கமையவும் நல்ல குடும்பப் பெண்ணாக விளங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் ஆசிரியராக, வீட்டில் இல்லத்தரசியாக இவர்காலம் நற்சேவையிலே களிப்புடன் கழிந்தது. இனிய நண்பர்கள், சுற்றம் சூழ வாழ்க்கையில் கடியவேண்டியன கடிந்து ஏற்புடையன வற்றை ஏற்று மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். 'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' என்பர். 1979ஆம் ஆண்டு தைமாதம் 17ஆம் திகதி திரு. அருள் தியாகராசா இறைவனடி சேர்ந்தார். அன்றுமுதல் இவரும் நிலையற்ற வாழ்வில் நிலைகொள்ளாது தன் கணவர் சென்ற வழியே விழிவைத்து இருந்தார். அவர்கள் இல்லறத்தின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் இவரை நீண்ட காலம் தனித்து வாழ விடவில்லை. வானுலகிலும் ஒன்றிவாழ விழைந்த தம்பதிகள் பிரிந்து வாழவில்லை. 12-6-80 கமலாதேவி பற்றற்ற வாழ்வினை விட்டு நிரந்தரமான விடுபேற்றை அடைந்தார். ஜீவாத்மா பரமாத்மாவோடு இணைந்துவிட்டது. ஒரு நல்ல சைவப்பழம் நழுவிவிட்டது. இராமநாதன் கல்லூரியிலேயே படித்துப் பட்டம் பெற்று இக்கல்லூரியிலேயே தனது முழுக் காலத்தையும் சேவையில் ஈடுபடுத்தி மறைந்தார். இவரது இனிய சுபாவம், நல்லொழுக்கம், சீரியபண்பு — இந்நினைவுகள் எம்மைவிட்டு இலகுவில் அகலமாட்டா. என்றோ ஒருநாள் நாம் எல்லோரும் அந்தப் பொதுவெளியில் சந்திப்போம்—அதுவரை 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து' வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவரைப்பற்றி, அவர் புகழ் பற்றிப் பேசுவோமாக. அவர் ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக,

ஓம் திரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனுத்
ம்ருத்யோர் முக்ஷியமாமிருதாத்

ஓம் சுபம்—சாந்தி—சாந்தி—சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உள்ளுவோம்

## திருமதி N. P. பிள்ளையவர்கள்

அதிபர் 1944 — 1956

மறைவு : 13-2-1979

பாரத நாடு எமக்களித்த பெருநிதியம்.

தக்கதோர் அதிபரென்று லேடி இராமநாதன் அம்மையாரால் தேர்ந்தெடுக்கப் பட்டு, 13 ஆண்டுகாலம் கல்லூரியைச் செம்மை நெறியில் வழிநடாத்திய இவர்தம் நினைவாகக் கல்லூரிப் பழைய மாணவிகள் ஒரு புலமைப் பரிசில் திட்டத்தை உரு வாக்கியுள்ளனர். பல்லாயிரம் மாணவிகளின் உள்ளத்தில் அவர் ஏற்றிவைத்த அறி வொளி நாட்டின் பலபாகங்களிலும் இன்று ஒளிபெருக்கிக்கொண்டிருக்கக் காண்கி ேறாம். இராமநாதன் கல்லூரியின் வரலாற்றில் இவர் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்.

## திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன் அவர்கள்

ஆசிரியை 1949 — 1969

உப அதிபர் 1969

மறைவு 3-11–1978

இருபத்தொரு வருடங்கள் தாம் கற்ற கல்லூரிக்கு அரும்பணி ஆற்றி ஆங்கில மொழியின் மாண்பினை மாணவிகள் மனங்கொள அறிவுறுத்தியவர். இவர் நினைவாக இவருடைய வாழ்க்கைத் துணைவராம் திரு. பரமேஸ்வரன் அவர்கள் ஒரு நினைவுப் பரிசிலுக்கான நிதியை மனமுவந்தளித்தார். ஆங்கில மொழியில் திறனுடைய மாணவி கட்கு ஆண்டுதோறும் இப்பரிசில் வழங்கப்பட்டுவரும், இவர்தம் நினைவை என்றும் போற்றுவோம்.

## திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் அவர்கள்

ஆசிரியை 1952—1964

மறைவு 25–2–1979

கவின்கலையாகிய இசையினைப் பயின்று பன்னிரண்டு ஆண்டுகள் கல்லூரியில் இன் னெலி பெருக்கிய இவருடைய நினைவாக இவர்தம் கணவனார் திரு. P. சச்சிதானந்தன் அவர்கள் உதவிய நிதியினைக்கொண்டு இசையில்வல்ல மாணவிகட்கு, ஆண்டுதோறும் பரிசில் அளிக்கும் திட்டம், சென்ற ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரு கின்றது. இவரது நினைவு கல்லூரியில் நீங்காது நிலைத்துநிற்கும்.

250144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவித்தவர் திருமதி அ. சண்முகராசா

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற நன்மொழிக்கு இலக்கியமாக இராமநாதன் கல்லூரியிலே ஆசிரியப் பணி புரிந்தவர் திருமதி அ. சண்முகராஜா அவர்கள். கல்வித்துறையில் 30 வருடங்கள் சிறந்த சேவை ஆற்றினர். அவரின் பண்பையும், அளப்பரிய பணியையும் இன்று நாம் பாராட்டும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அம்மாவைப் போற்றுவதென்றால் பிள்ளைகள் எல்லோருக்கும் மகிழ்ச்சிதானே.

திருமதி அ. சண்முகராஜா அவர்கள் அன்பையூட்டி ஆதரவைக்காட்டி, பாலருக்குப் படிப்பித்தார். அவர் தந்த எண்ணும் எழுத்துமே என்னையும் எழுதவைக்கிறது. இன்னும் பலரை உயர்தர வகுப்புப் படிக்கவைத்ததும், உயர்நிலை அடையச் செய்ததும் ஆசிரியர் தந்த சிறந்த ஆரம்பக்கல்வியே.

இவரைச் சைவம் போற்றும் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி என்று சொல்வதிலும், இராமநாதன் கல்லூரியில் பலவருடங்கள் பலரும் போற்றிய சைவப் பழம் என்பதே சிறப்புடைத்து. கல்லூரியின் சமய வளர்ச்சிக்கு இவர் உறுதுணையாக இருந்தார். ஆரம்ப வகுப்பிலிருந்து ஆசிரிய பயிற்சிவரை இங்கேயே கற்றூர். இவரது தந்தை திரு. சோமசுந்தரம் அவர்களும் இராமநாதன் கல்லூரியில் சமய சங்கீதக் கலைகளை வளர்த்தார். தந்தை வழியில் நின்று எமது ஆசிரியரும் அரும்பணியாற்றினர்.

வெண்ணீறணிந்து புன்னகை தவழும் இவருடைய மலர்ந்த முகத்தைப் பார்த்ததும் அழுகின்ற குழந்தைகூடச் சிரிக்கும். இவர் பாலரொடு பாலராகத் தானுமிருந்து மழலை மொழி பேசி மகிழ்வார். அன்னைபோல் அன்பும் ஆதரவும் காட்டுவார். கல்வியை ஊட்டுவது மட்டுமன்றிச் சிறு குழந்தைகளுக்கு அன்பையும் ஊட்டி அணைத்துக் கொள்வார். பாலர்களுக்குப் பாடசாலை செல்வதென்றால் அழுகை வரும். ஆனல் நாம் அன்புடன் அழைக்கும் அமுதவல்லி அக்காவின் கலகலப்பான பேச்சாலும் கதையாலும் கவரப்பட்டுப் பாடசாலைக்குத் தவருது எல்லோரும் வந்து விடுவோம். பாடசாலை விடுவதற்கு மணியொலி கேட்ட பின்பும் சிறுவர்கள் ஆசிரியரைச் சுற்றி நிற்பர் என்றால் இவரது அன்பு எத்தகையது என்று கூறவும் வேண்டுமா!

கல்லூரியில் நடைபெறும் எந்த விழாவாயினும் விருந்தினரை வரவேற்கக் கையில் மாலை ஏந்திய பாலர்களுடன் இவரது மலர்ந்த முகத்தையும் வாசலிலே காணலாம். இன்முகம் காட்டி விருந்தினரை வரவேற்பதில் தனிச்சிறப்பு உடையவர். இன்று நாம் பத்தாம் தரத்தை அடைந்துவிட்டோம். ஆனலும் இவர் எம்மை எங்கு கண்டாலும் மகிழ்ச்சியோடு சுகசெய்திகேட்டுச் செல்வார். இவர் தமது சேவைக்காலம் முடிந்து ஓய்வு பெற்றூராயினும் கல்லூரியில் நடைபெறும் விழாக்களில் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். கல்லூரியின் நலன் விரும்பி ஆற்றிய அரும்பணிகளுக்கு நாம் என்றும் கடமைப்பாடுடையோம். அமுதமொழி தந்த அன்னையார் நீண்ட ஆயுளும் நிறைந்த ஆரோக்கியமும் எல்லா நன்மையும்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குமாரசாமி—கல்யாணி
க. பொ. த. வகுப்பு: 10
1ஆம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி தில்லிமலர் பசுபதி அவர்கள்

இந்து மகளிருக்கென்றே தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஒன்று சிறப்பாக அமைந்திருந்தது. அப்பெருமை இலங்கையில் இராமநாதன் கல்லூரிக்கே உரியது. 1945ஆம் ஆண்டு வரை இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிறப்பாக நடைபெற்றது. இந்து மகளிர் பலர் பண்பில் சிறந்த, அறிவில் சிறந்த நல்லாசிரியர்களாகப் பயிற்சி பெற்றனர். அவர்களில் திருமதி தில்லிமலர் பசுபதி அவர்களை எமது ஆசிரியராகப் பெற்றுப் பெரும்பயன் அடைந்தோம். ஆசிரியர் அவர்களுக்குப் பாராட்டுரையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையை எண்ணிப் பெருமையடைகிறோம்.

இவர் உடுவில் மகளிர் கல்லூரியில் பத்தாம் வகுப்புவரை கற்றார். இராமநாதன் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற் பயின்றார். தமது சிறந்த சேவையையும் இங்கேயே செய்து ஓய்வுபெற்றுள்ளார். ஆரம்பவகுப்பு மாணவருக்குத் தமிழ், சமயம், கணிதம் என்பவற்றைச் சிறப்பாகக் கற்பித்தார். அவரிடம் ஆறும், ஏழாம் வகுப்புகளில் கற்ற செந்தமிழ் பத்தாம் வகுப்பிலும் சிறந்த பயன் தந்தது. இனிமையாகவும், ஆறுதலாகவும் பாடங்களைக் கற்பிக்கும் பொழுது நாம் மிகுந்த கவனத்துடனும், ஆர்வத்துடனும் கற்றோம். தாயுள்ளம் பெற்ற ஆசிரியர் தமது வகுப்புப் பிள்ளைகள் அனைவருமே ஒற்றுமையாகவும், அன்பாகவும் என்றும் இருக்கவேண்டும் என்று விரும்புவார். யாராவது கோபமாய் இருப்பதைக் கண்டுவிட்டால் அன்புடன் அழைத்து ஆதரவாக விசாரித்து அறிவுரைகள் கூறி நேயத்தை ஆக்கிவிடுவார். அவர் கூறிய அறிவுரைகள் இன்னும் எம்மனத்தில் பசுமையாய் அமைந்துள்ளன. வகுப்பறையில் கற்பிக்கும் பொழுது கண்டிப்பு இருக்கும். ஆனால் அவர் உள்ளத்தில் கனிவு இருந்தது. அதனால் அவரிடம் இருந்து கடுஞ்சொல்லைக் கேட்டு மாணவர் கலங்குவது இல்லை.

கடமையே கடவுள்வழிபாடு என்னும் கொள்கையை உடையவர். படிப்பிற் குறைந்த மாணவர்களிடம் மிகக் கவனம் எடுத்து முன்னேற்றம் அடையச் செய்வார். கல்லூரியின் வளர்ச்சிக்கு இவர் செய்த சேவைகள் மிகப்பல. இவர் தமது சேவையிலிருந்து ஓய்வுபெற்றதால் நாம் நல்லதோர் ஆசிரியரைப் பிரிந்தவரானோம். ஆயினும் கல்லூரிக்கு அண்மையில் வதியும் எமது ஆசிரியர் இடையிடையே கல்லூரிக்கு வருவதும், எம்மைக் காணும்போதெல்லாம் கலந்துரையாடுவதும் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எமது அன்புக்கும், மதிப்புக்கும் உரிய எமது ஆசிரியர் நிறைந்த சுகமும் நீண்ட ஆயுளும் நன்மைகள் பலவும் பெற்று என்றும் இன்பமாய் வாழ முழுமனதோடும் பிரார்த்திக்கின்றோம்.

சிவசக்தி இராஜரட்னம்<br>
விஞ்ஞானம்<br>
முதலாம் வருடம்<br>
க. பொ. த, உயர்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத சம்பவம்

''நல்ல நினைவுகளை மனதில் பதித்து வை
தீயவற்றை அன்றே மறந்து விடு''

என்று கூறுவார்கள். அப்படியே எனது மனதிலும் மறக்கமுடியாமல் என்றும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து நிற்கும் நிகழ்ச்சி என்ன தெரியுமா? சொல்லுகிறேன். கேளுங்கள்! ஒருநாள் எனது நடன ஆசிரியை என்னை அழைத்து, ''ஒரு நடன நிகழ்ச்சியில் நீர் பங்கெடுக்க வேண்டும். ஆனபடியால் நான் சொல்லித்தரும் கௌத்துவத்தைச் சிரத்தையோடு பழகிக் கொள்ளும்.'' என்றார். நான் எங்கோ பறந்து செல்வது போல இருந்தது. நானா? நான் ஆடப் போகிறேனா? நினைக்க நினைக்கத் தித்திப்பாக இருந்தது. அந்த நாள் எப்போது? நான் எப்படி இருப்பேன்? நான் என்ன மாதிரி ஆடப்போகிறேன்? இதையே நினைத்து அந்த நிகழ்ச்சியை எதிர்பார்த்திருந்தேன்.

அந்த நாள் வந்தது. நேரம் வந்தது நடன ஆசிரியை எனக்கு ஒப்பனை செய்தார். உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. நேரம் அணுகி விட்டது. மண்டபத்தில் சனத்திரள் பெரிதாக இருந்தது. மேடை விளக்குகள் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தன. மெதுவாக எட்டிப் பார்த்தேன். மேலெல்லாம் ஒரு கூதல் ஓடிய உணர்வு, பயம் ஒருபுறம், ஆவல் ஒருபுறம், என்னை ஒருதரம் கண்ணாடியில் பார்த்தேன் சில அபிநயங்களைச் செய்து பார்த்தேன். மேடையில் தீபம் ஏற்றியாயிற்று. கடவுள் வணக்கம் பாடியாயிற்று. ஆரம்பப் பேச்சு முடிவுற்றது. மிருதங்க வித்வான் திரு. இராமநாதன் அவர்கள் தட்டிக் கொடுத்தார். சுருதி மீட்டப்பட்டது. வயலின் வித்வான் செல்வி தனதேவி சுப்பையா அவர்கள் ஆரம்ப ராக ஓசையை வில்லால் எழுப்பினர். பாடகி திருமதி சரஸ்வதி பாக்கியராசா சுதிமீட்டிக்கொண்டார். ஒலிபெருக்கியில் ''அடுத்த நிகழ்ச்சி கௌத்துவம். செல்வி ஆனந்தபைரவி குமாரசாமி வழங்குகிறார்.'' என்று கேட்டதும், கைகள் குளிர்ந்தன. கால் சற்று நடுங்கியது. நடன ஆசிரியை திருமதி சாந்தினி சிவநேசன் தாளத்தில் ஆயத்தம் காட்டினார். நான் என்னை ஆயத்தப்படுத்தினேன். தாளம் தட்டப்பட்டது. பாடல் ஆரம்பித்தது. நான் மேடையில் பிரவேசித்தேன். மிருதங்கத்தின் தட்டும் என் கால் சலங்கையும் இணைந்து பேசியது. எனக்கு முன்னால் இருந்த ஜனத்திரள் கண்களில் படவில்லை. எப்படி ஆடினேன் என்றே தெரியவில்லை. இசையோடு அசைவு இணைய, தாளத்தோடு சதங்கை கொஞ்ச பரவசமாக ஆனந்தமாக ஆடினேன். சபையோரது கரகோஷம் என்னைச் சுயநினைவுக்கு அழைத்தது. ஆடல் முடிந்து விட்டது. உளம் நிறைந்த மகிழ்ச்சியோடு திரைக்குள் வந்து விட்டேன். இது எனது முதல் மேடை அனுபவம், இனிக்கும் இந்நிகழ்ச்சி என் உள்ளத்தில் என்றும் பசுமரத்து ஆணிபோல நிலைத்து நிற்கிறது.

ஆனந்தபைரவி—குமாரசாமி
VII I

---

# திருமதி புஷ்பராணி திடவீரசிங்கம் அவர்கள்

திருமதி புஷ்பராணி திடவீரசிங்கம் அவர்கட்குப் பாராட்டுரை தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சி தருகிறது.

இவர் இந்தியாவிலுள்ள புனித சிலுவை கல்லூரியிலே பயின்று, 1956ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை ஏற்றார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றவர். கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளாக இவர் எமது கல்லூரிக்கு ஆற்றிய சேவை அளப்பரியதாகும். இவர் மாணவரினதும், ஆசிரியரினதும் அன்பிற்கும், மதிப்புக்கும் உரியவராக இருந்தார். 1979இல் எமது கல்லூரியை விட்டு வெளிநாடு சென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Mrs. T. Chellaiah**
Supervisor, Lower School



Mr. V. Dharmalingam, M. P. for Manipay distributes the Govt. Free books & Mr. S. Sivasubramaniam, E. O. is beside him.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Grades 1 — 5 Students with the Principal

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகக் கடமை ஏற்றது முதல் கல்லூரியை விட்டுச் செல்லும்வரை அவர் ஆற்றிய சிறந்த பணி எல்லோராலும் போற்றத்தக்கது. எல்லோருடனும் அன்பாகப் பழகுவார், மென்மையாகப் பேசுவார். அமைதிக்கு ஒரு வடிவம் உண்டென்றால் அவ் வடிவம் திருமதி திடவீரசிங்கம் அவர்கள்தான். அவர் கடும் வார்த்தை பேசி நாம் கேட்டறியோம். ஆனால் அன்பான கண்டிப்பின் மூலம் மாணவருக்கு அறிவுரை கூறு வார். அவ்வுரையும் மாணவருக்கு இன்சொல்லாகவே இருக்கும். மாணவர் விரும்பிக் கற்க விஞ்ஞானக் கல்வியைக் கற்பித்தார். நாம் பரீட்சையில் திறமைச்சித்தி பெற வேண்டும் என்று ஊக்கம் கொடுப்பார். அவர் கற்பித்தவை என்றும் பசுமையாய் எம் மனதில் உள்ளன. கடமையே கடவுள் வழிபாடெனக் கருதும் சிறந்த ஆசிரியர் கல்லூரிக்காக வெளிவேலைகளிலும் முழுமனதுடன் ஈடுபட்டு வந்தார். கண்ணகி இல்லத்தின் தலைவியாக இருந்தார். இவரது ஊக்கம் கண்ணகி இல்லத்தின் மாணவர் கட்குப் பெரிதும் ஆக்கம் அளித்தது. அதனால் பலமுறை போட்டிகளில் முதலிடம் பெற்றனர்.

திருமதி திடவீரசிங்கம் அவர்கள் இராமநாதன் கல்லூரிக்கு ஆற்றிய சேவையை என்றும் மறக்க முடியாது. அவர் சென்றதால் ஒரு சிறந்த ஆசிரியையை இழந்து விட்டோம். அவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் அவரது நினைவு எம்மிடையே என்றும் நீங்காது. அவரை மீண்டும் காண எமதுள்ளம் ஆசைப்படுகின்றது. அவர் சென்ற இடத்தில் எல்லா நன்மைகளும் பெற்று இன்பமாய் வாழ முழுமனதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவர் எமக்குச் செய்துள்ள சேவைக்கு அவரைப் பணிவன்புடன் வாழ்த்துகின்றோம்.

சிரோன்மணி — கனகசபாபதி
க. பொ. த. (உயர்தரம்)
2ஆம் வருடம் — வர்த்தகம்

---

## காலை இனிது

காகம் வைகறையில் கரைகின்றது.
மேகம் மெல்ல மெல்ல வெளுக்கின்றது.
சேவல் சொக்க நாதா எனச் சொல்கின்றது.
செங்கதிரோன் செம்பொற் கிரணங்களை விரிக்கின்றான்.
பறவை காலையில் பள்ளிஎழுச்சி பாடுகின்றது.
பங்கஜம் பரிதிக்குப் பட்டுக்குடை விரிக்கின்றது.
மயில்கள் மகிழ்ச்சியோடு ஆடுகின்றன.
குயில்கள் இனிய குரலாற் கூவுகின்றன.
வண்டுகள் மலரை வட்டமிடுகின்றன.
மதுகரம் மதுவைக் குடித்து மயங்குகின்றது.
காலையில் நாங்களும் கண் விழிக்கின்றோம்.
கடவுளை நினைந்து கைதொழுகின்றோம்.
காலைக் கடனைக் கருத்துடன் செய்கிறோம்.
பலகலை கற்கப் பள்ளிக்குச் செல்கின்றோம்.
காலை நேரம் இனிது இனிது.

க. லோசனா
வகுப்பு VI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MEMORIES OF OUR PRINCIPAL DURING MY SCHOOL DAYS

Sweet are the memories of childhood. Sweeter than those are the memories of school days and sweetest is my memory of the days when I was a student of this college. Mrs. R. Arunasalam was the principal when I joined this college in 1975. The very first day I was very much taken up by her splendid and admirable qualities. She had won the esteem and respect of both teachers and students by her calm and friendly disposition.

Within the short space of time she had been in this college as a principal, she had done great services which could not be assessed. Though I was a student of this College for a few years, I cannot forget her smiling face, an understanding mentality and extreme piety. She appeared to me as an embodiment of goddess, Saraswathy herself. The New Hall and the Agricultural Laboratory which were put up during her time make one understand her outstanding service to this College. She also replenished the College library by getting down an addition of one thousand five hundred and thirty two new books.

She took a keen interest in the religious activities of this College, thus establishing the wishes of our revered Founder Sir P. Ramanathan. She propagated his ideals as regards Hindu Philosophy and culture. She was always ready to contribute her mite for the betterment of the college.

We all feel sorrry that we are going to miss a true, trustworthy, simple, amiable and loving Principal I am happy that I was given an opportunity to express my sincere feelings towards her. It is my sincere wish that the Almighty would bless her abundantly with health and happiness.

**K. Kamaladevi**
**Student**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தந்தை

அன்பின் உருவமென அருளின் தெய்வமென
இன்பக் கடலெனவே இருந்திட்டார் என்தந்தை.

நான்கு கால்களிலே நான்தவழ்ந்து வருகையிலே
தானெனக்கு முன்வந்து தாங்கி எழுந்திடுவார்,

செல்வச் சிறப்புடனே சீராய் வளர்த்திட்டார்
அல்லல்கள் ஏதும்இன்றி அன்பைப் பொழிந்துநின்றார்.

கல்வியில் சிறந்திடவும் கருத்தினில் இறைபக்தி
நல்லதாய் வளர்த்திடவும் நல்லவித்தை போட்டுவைத்தார்,

விழியில் அருவிகண்டால் வேதனையால் துடிப்பார்
பழியென ஒன்றுவந்தால் பார்த்துச் சகித்திருக்கார்.

எந்தை சிறப்பதனை சிறுஇன்பக் கவியினிலே
சந்தம் பொழிந்துவர நான் சற்றே நவின்றுதந்தேன்.

தி. சாந்தகுமாரி
க. பொ. த. உயர்தரம்
கலைப்பிரிவு

---

## இன்பமாய் வாழலாம்

அன்பினைக் காட்டுவாய் பாப்பா—நீ ஆலயம் செல்லுவாய் பாப்பா
இன்பமாய் இருந்திடு பாப்பா—நீ ஈசனைப் போற்றுவாய் பாப்பா

உண்மையே பேசுவாய் பாப்பா—நீ ஊருடன் சேர்ந்துவாழ் பாப்பா
எல்லோரும் நண்பர்கள் பாப்பா—நீ ஏமாறக் கூடாது பாப்பா

ஐயன்சொல் கேட்டிடு பாப்பா—நீ செய்வன திருந்தச்செய் பாப்பா
ஒற்றுமை யாயிரு பாப்பா—நீ ஓதாமல் இருக்காதே பாப்பா

ஒளவைசொல் கேட்டிடு பாப்பா—நீ ஒளவியம் பேசாதே பாப்பா
இவ்விதம் வாழ்ந்திடின் பாப்பா—நீ இன்பமாய் வாழலாம் பாப்பா.

சியாமளா சுப்பிரமணியம்
வகுப்பு 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கதை

நான் இராமநாதன் கல்லூரியிற் பிறந்தேன். இங்கேதான் வளர்ந்தேன். இங்குதான் வாழ்ந்து வருகின்றேன். எவராவது என்னைப்பற்றி அறியமுடிய வில்லை. என் வரலாற்றைச் சொல்லாமலும் என்னால் இருக்க முற்படவில்லை. என் கதையைச் சொல்லத்தான் போகின்றேன். விரும்பியவர்கள் பொறுமை யுடன் கேளுங்கள். எனக்கு இப்போது வயது ஐம்பது. சிறுவயதில் ஒல்லியாக நெட்டையாக நின்றேன். திடீரென என்னுடல் பருத்தது. கைககள் பல விரிந்தன. என் தலையலங்காரம் குடைவடிவமாயிற்று. பசுமையாய் இருந்தேன். பார்க்க அழகாய் இருந்தேன். என்னிடம் வருவோர்க்குக் குளிர்மையைக் கொடுத்தேன். நான் யாரென்று சொல்லவில்லையே; வளி வீசும்போது அசைந்தாடும் காற்றாடியாய் இருக் கிறேன். மக்கள் என்னை 'மஞ்சாடி' என்று அழைக்கின்றனர். இன்னும் சில வருடங் கள் வாழ்ந்தேனானால் மேகத்தைத் தொட்டு நிற்பேன். அப்போது 'மஞ்சாடி' என்பது (மஞ்சு—மேகம்) மிகப்பொருத்தமாகிவிடும்.

இராமநாதன் கல்லூரி முன்றலில் வாழும் என்னிடம் எத்தனை ஆயிரம் பிள்ளைகள் வந்து செல்கின்றனர். அவர்கள் சொன்ன கதைகள் எழுத்தில் அடங்கா. தாங்கள் பேசுவது எனக்கு விளங்காது என எண்ணிக்கொள்வர். ஒருநாள் ஒருத்தி "இன்று கணிதபாடம் பரீட்சை என்றாள். உடன் நின்றவர்கள் "படிக்கவில்லை" என்றனர். "பின்னேரம்தானே கணிதம், பேசாமல் மத்தியானம் வீட்டிற்குச் செல்வோம்" என்றாள் மற்றொருத்தி. அத்துடன் அவர்கள் மகாநாடு கலைந்தது. குழந்தைகளின் குறுக்குவழியை எண்ணி வருந்தினேன். மற்றொருநாள் ஆங்கில ஆசிரியர் வராத செய்தியை மாணவி ஒருத்தி கூறியதுதான் தாமதம், எல்லோரும் கைகொட்டி மகிழ்ந் தனர். ஆங்கிலத்தின் அவசியத்தை உணராத குழந்தைகளின் அறியாமையை எண்ணி வருந்தினேன். "மாங்காய்க்குக் கல்லெறிந்தோம், வகுப்பு ஆசிரியர் நல்ல மங்களம் தந்தார்" என்று கூறியது மாணவர் கூட்டம் ஒன்று. "அதனால்தான் இன்று மத்தியானம் அதிபரின் ஆபீஸ் வாசலில் நின்றீர்களா?" என்றாள் குறும்புக் காரக் குமுதினி. "ஆமாம், அதிபர் தண்டிப்பார் என்றுதான் பயத்துடன் சென்றோம்; அவர் தண்டனை தரவில்லை, கண்டிப்போடு அறிவுரை கூறினார். கனிவுள்ளம் படைத்த அதிபரை மனதில் வாழ்த்தியபடி வந்தோம்" என்றனர். அதிபரின் நற் குணத்தை நானும் வாழ்த்தினேன்.

சிலவேளைகளில் சிறுவர்கள் எனது அண்டையில் ஓடோடி வந்து குனிந்து குனிந்து பொறுக்குவார்கள். குழந்தைகளின் கைநிறைய, மனம் குளிர நானும் சிவப்பு மணி களைச் சிந்திவிடுவேன். இவ்விதம் மகிழ்ச்சியோடு வாழ்ந்த எனக்குத் திடீரெனப் பேரிடி விழுந்தது. இறைவன் அருளால் செத்துப் பிழைத்தேன். அன்று சித்திரை விடுமுறையில் ஒருநாள், ஆசிரியர்கள், பிள்ளைகள் நடமாட்டமின்றிப் பாடசாலை வெறிச்சோடிக் கிடந்தது. கோடரியோடு ஒருவன் வந்தான். மேலும், கீழும் பார்த் தான். ஒருமுறை என்னைச் சுற்றிவந்தான். அடுத்த கணம் அங்கமங்கமாக என்னை வெட்டி வீழ்த்தத் தொடங்கினான், துடித்தேன், துவண்டேன், கதறிக் கதறி அழு தேன். அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. அவன் கல்நெஞ்சுக்காரனோ, காது கேட்காச் செவிடனோ நான் அறியேன். என் வாழ்வு முடிவுற்றது என்று ஏங்கினேன். ஏனோ அங்கங்களை வெட்டியதோடு சென்றுவிட்டான். எனக்குக் கொடுமை செய் தவன் அன்னியனல்லன். கல்லூரிக் காவலாளிதான். என் குறையைக்கூறக் கால் இருந்தால் நடந்திருப்பேன். வாயிருந்தால் சொல்லி இருப்பேன். நின்ற இடத்தில் மௌனியானேன். கண்ணீர் வடித்து வடித்துக் காய்ந்துபோனேன். எனக்கு இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை கருணை காட்டினுள். அவ்வாரத்தில் பெருமழை பெய்தது. என் உடல் நோவுக்குப் பெருமழை மருந்தாகியது. எதிர்பாராதவிதம் அதிபரும் அங்கே வந்தார். நான் இருக்குமிடத்தை உற்றுப்பார்த்தார். அவரது கண்ணின் கனிந்த பார்வை ஆறுதல் தந்தது. அவ்விடத்தில் கல்லூரிக் காவலன் அழைக்கப்பட்டான். நான் வெட்டுண்டு கிடைப்பதைப்பற்றி விசாரித்தார். அவன் ''இலையும் சருகும் கொட்டிக் குப்பையாகிறது. அதனுற்தான் வெட்டினேன்'' என்ருன். எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. அதிபர் ''நிழல்தரும் மரங்களை வெட்டலாமா? அதிலும் இந்த மஞ்சாடிமரம் எவ்வளவு குளிர்மையாகக் குழந்தைகளுக்கு நிழல் கொடுக்கின்றது. இனிமேல் இப்படிச் செய்யாதே'' என்று கூறினுர். அவனும் தலை அசைத்துவிட்டுச் சென்ருன். அதிபரின் அருங்குணத்தைப் போற்றி நானும் இரண்டொரு மாதத்தில் வளர்ந்து முன்போலாகிவிட்டேன், இன்றும் நான் வாழ் கின்றேன் என்ருல், என் கதையைக் கூறுகிறேன் என்ருல், அது அதிபர் அளித்த வாழ்வே யாகும். நான் மட்டுமா வாழ்கிறேன்! திருமதி அருணுசலம் அவர்களின் அன்பினுல் ஆதரவினுல் எத்தனையோபேர் வாழ்கின்ருர்கள். குழந்தைகளானுலும் சரி, பெரியவர் கள் ஆனுலும் சரி அவர்களுடன் அன்பாகக் கதைத்து அவர்கள் உள்ளத்தில் ஒரு தனி யிடம் பிடித்துவிடுவார். இராமநாதன் கல்லூரியில் மாணவியாய் இருந்தார். ஆசிரிய ராகப் பணியாற்றினுர். அதிபராகக் கல்லூரியைச் சிறப்பாக நடத்திவருகின்ருர். அண் மையில் ஓய்வுபெறப் போகின்ருர் என்று அறிகின்றேன். எமது அன்புக்கும் மதிப்புக் கும் உரியவர், பிரிந்து செல்லினும், அதிபரின் அன்பு எல்லோரிடத்தும் நிறைந்திருக் கும். அவர் என்றும் இன்புற்று வாழ வாழ்த்துகின்றேன். என் கதையை இதுவரை கேட்ட உங்கள் பொறுமையையும் பாராட்டுகின்றேன்.

வான்மதி சண்முகநாதன்
வகுப்பு 10
2ஆம் வருடம்

---

# வாழிய எங்கள் அதிபர்

நாதனும் இராம நாதன் நச்சியே நமக்க ளித்த
போதனு பீட மென்றும் பொலிவுற விளங்கா நின்ற
சாதனை பலபு ரிந்து தனிப்பெருந் தலைவி யாகிப்
போதனை தந்தீ ரம்மா பொற்புடன் பல்லாண் டாக.

எங்களின் அதி பராகி எமக்கெலாம் அறிவு தந்த
மங்கையர்க் கரசி யன்னுய் மகிழ்ந்துநீ வாழி யென்றும்
நங்கையர் திலக மன்னுய் நலம்பல பெற்று நாளும்
இங்குநீ வாழ வென்றே வாழ்த்துதும் வாழி வாழி.

பொன்னையா—தமிழரசி
கலைப்பிரிவு (2ஆம் வருடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமை

அன்பும் பண்பும் பாசமும்
    தண்மையும் தாய்மையும் தந்திடும்
பெண்ணின் பெருமையை
    நாலே வார்த்தையில் சுலபமாய்ச் சொல்லிடுவார்

பத்துமாதம் சுமந்தவளை
    விழித்திருந்து வளர்த்தவளை
'பெற்றுள் பிள்ளைகளை' என
    நாலே வார்த்தையில் சுலபமாய்ச் சொல்லிடுவார்

கல்வி பெற வைத்தவளை
    வாழ வைத்த தெய்வத்தை
'படித்தாள் மணந்தாள்' என
    நாலே வார்த்தையில் சுலபமாய்ச் சொல்லிடுவார்

பேசுதற்கு நல்லதொரு
    கரு கிடைத்ததென்று
பெண்ணின் பெருமைபற்றி மேடையேறி
    நாலே வார்த்தையில் சுலபமாய்ச் சொல்லிடுவார்

விண் முட்டக் குரலெழுப்பி
    பெண் பெருமை பேசிநிதம்
வீண்காலம் கழிக்கும் வீணரே
    என்றுதான் நீர் செயல்வீரர் ஆவீரோ?

ஜெகதீஸ்வரி—சுப்பையா
12A[4] கலை-வர்த்தகம்

---

# எனது செல்லப் பிராணி

எனது செல்லப் பிராணி நாய்.
அதன் பெயர் யோன்.
அது வெள்ளை நிறமானது.
நான் அதற்கு நல்ல உணவு கொடுப்பேன்.
அது என்னுடன் விளையாடும்.
அது நன்றி உள்ளது.

அ. அஜந்தா
பாலர் வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

1. முன்னது குத்தும் பின்னது கட்டும்
மூன்று எழுத்து ஊராம் அது என்ன?

2. முன்னது வெள்ளை பின்னது கறுப்பு
நாலு எழுத்து ஊராம் அது என்ன?

3. முன்னது பறக்கும் பின்னது மரமாம்
ஐந்து எழுத்து ஊராம் அது என்ன?

4. முன்னது இசைக்கும் பின்னது குத்தும்
ஆறு எழுத்து ஊராம் அது என்ன?

5. முன்னது வெளிச்சம் பின்னது வளையும்
ஐந்து எழுத்து ஊராம் அது என்ன?

விடை:

| | | |
|---|---|---|
| 1. வேலணை | = | வேல்+அணை (கட்டு) |
| 2. சங்கானை | = | சங்கு+ஆனை |
| 3. கிளிநொச்சி | = | கிளி+நொச்சி |
| 4. யாழ்ப்பாணம் | = | யாழ்+பாணம் (அம்பு) |
| 5. உடுவில் | = | உடு+வில் =(உடு=வெள்ளி) |

குலேந்திரன்—சுதாஜினி
வகுப்பு 5

---

# பிறந்த பொன்னாடு

குமாரசுவாமிப்புலவர் என்று சொல்லுமுன் சுன்னாகம் என்பது நினைவுவரும். படித்த பெரியார்கள் வாழ்ந்த, வாழ்கின்ற ஊர் சுன்னாகம். அந்த ஊர்தான் எனது சொந்த ஊர்.

''கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்'' என்பது பெரியோர் வாக்கு. எனது ஊரிலே பல ஆலயங்கள் உண்டு. கதிரமலைச் சிவன் கோயில் புகழ் பெற்ற பெரிய கோயில்.

இராமநாதன் கல்லூரி இவ்வூரிலுள்ள சிறந்த மகளிர் கல்லூரி. இன்னும் பல பாடசாலைகள் உள. நான் வாழும் ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்பும் சிறப்பும் நிறைந்து விளங்குகிறது. இங்குள்ள பெரிய சந்தையைத் தாய்ச்சந்தை என்று கூறுவர். இச் சந்தையின் அருகில் பேருந்து நிலையம், நகர் காவலர் நிலையம், மக்கள் வங்கி என்பன உண்டு. சந்தியிலிருந்து கிழக்கே செல்லும் தெருப் பாதையில் தபாற்கந்தோரும் புகையிரத நிலையமும் இருக்கின்றன.

மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் எல்லாவித வசதிகளும் ஒருங்கே அமைந்த ஊர் சுன்னகம் என்பதை நினைக்க எனக்கு மிக மகிழ்ச்சி உண்டாகிறது. இந்த ஊரில் நான் பிறந்ததை நினைத்துப் பெருமைப் படுகிறேன். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே."

இ. கெங்காதேவி
வகுப்பு IV

# இராமநாதன் கல்லூரி

நான் மகிழ்ச்சியுடன் மகளிர் கல்லூரி ஒன்றில் படிக்கின்றேன். அதுதான் இராமநாதன் கல்லூரி. இக்கல்லூரி சேர் பொன். இராமநாதன் அவர்களால் கட்டப்பட்டது. இந்து மகளிர் கற்பதற்கென்று 1913ஆம் ஆண்டு இதனைக் கட்டினார்.


இங்கு பாலர் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்பு வரை மாணவர் படிக்கின்றனர். எமது கல்லூரி அதிபராக திருமதி இ. அருணசலம் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இக்கல்லூரியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றனர்.

இங்கு நடராசப் பெருமான் கோயில் இருக்கிறது, காலையும் மாலையும் பூசை நடைபெறும். சேர் பொன். இராமநாதனின் சமாதியும் இருக்கிறது. பெரிய விளையாட்டு மைதானம் உண்டு, ஒவ்வொரு வருடமும் விளையாட்டுப் போட்டி நடைபெறும். நவராத்திரி விழா கொண்டாடப்படும். இன்னும் பல சமய விழாக்கள் நடைபெறும். கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும்.

இராமநாதன் கல்லூரியில் படித்த பெண்கள் பலர் ஆசிரியராகவும் இருக்கின்றனர். எனது அம்மாவும் இராமநாதன் கல்லூரியிலே கல்வி கற்றுச் சிறப்படைந்தார். அவர் வைத்திய கலாநிதியாக இருக்கின்றார். இலங்கையில் சிறந்த மகளிர் கல்லூரி ஒன்றில் படிப்பதை எண்ணி நான் பெருமையடைகின்றேன்.

பங்கயச்செல்வி கணேஸ்வரன்
(2ஆம் வகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Grades 6 — 8 Students with Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Grades 9 & 10 Students with the Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் சமய வாழ்வும்

எமது சமயம் இந்து சமயம். உலகம் தோன்றிய நாள்முதலாய் இருந்து வருகின்ற சமயம். ஆக்கியழித் துலகை நீக்கி மறைத்தருளி ஐந்தொழில் புரிந்திடும் அம்பலவாணனைப் பணிகின்ற அருள்நெறி. எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் செய்து காட்டிய தொன்மைச் சமயம். அத்தகைய சிறந்த இந்து சமயத்தவர் என்று நாம் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். பெருமைப்பட்டால் மாத்திரம் போதாது, நாமும் இந்து சமய வாழ்வு வாழ வேண்டும்.

இந்து சமயம் என்பது எவன் இவ்வுலகில் தானும் வையகமும் இன்புற்று இனிது வாழ விரும்புகிறானோ அவனுக்கு வழிகாட்டும் நன்னெறி. அதுவே தெய்வ நெறி. அப்படியானால் இந்து சமயத்தவர் அனைவரும் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்கின்றனரா? இல்லையென்றால் தொன்மைச் சிறப்புமிக்க இந்துசமயம் பொய்யானதொன்றா? இமையோர் அரசனான இறைவனை ஏத்தும் இந்துசமயம் பொய்யாக இருக்கமுடியாது. ஏனெனில் எத்தனையோ ஞானிகள் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என வாழ்ந்திருக்கின்றார்கள்! நாவுக்கரசருக்கு நஞ்சு கூட அமிர்தமானதே! எங்ஙனம்?

நமது பழம் பெருஞ் சமயத்தின் ஆணி வேர்களான ஞானிகள் ஆரும் பெறாத அறிவு பெற்று வாழ்ந்தனர்; நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப் புலர்வதன் முன் அலகிட்டனர், ஓசையொலியானவனை, வாசமலரானவனை, பேசப்பெரிதும் இனியானை, தேச விளக்கெலாமானவனை, கையுந்தலைமிசை புனை அஞ்சலியெனக் குவித்து வணங்கினர்; பண்ணின் இசையாய் நின்றானைப் பாடினர்; கோவால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனியைப் பாடி விளையாடினர்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினர், விண்ணும் முழுதானனிடம் முழுவதையும் கொடுத்தனர்; போதொடு நீர் சுமந்தேந்திப் புகுவாரவர் பின் புகுந்தனர்; கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்காகப் பெற்றனர்; நாதன் நாமம் நமச்சிவாயவே என்ற உறுதிப் பாட்டுடன் இறை நாமத்திலிருந்தனர். குருவைப் பணிந்தனர். அன்றைய அந்தணர்கள் செந்தண்மை பூண்டொழுகினார்கள். பிரமத்தை அணுகி நின்று பிராமணர் என்று பெயர் பெற்றனர். அவர்களின் இன்றைய நிலையும் கோவில் நிலையும் சிந்தனைக்குரியது.

கோவில் கட்டி வழிபடும் நாங்கள் என்ன விதிப்படி கோவிலை அமைத்துள்ளோம். 'நெஞ்சமே கோவில்', 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்', 'காயமே கோவில்' என்றெல்லாம் ஞானிகள் கூறியுள்ளனர். படைப்பின் சிகரமான மனித உருவிலேயே ஆன்மா ஒடுங்கும் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் நம் உள்ளத்திலே இருக்க முடியாதா? அங்கு காண்பதே சுலபம். கோவிலிலே மூலஸ்தானத்தில் இறைவன் வீற்றிருப்பார். அவரை மறைத்து ஒரு திரை போடப்பட்டிருக்கும். அதனை மாயையாகிய திரை எனக்கூறுவார்கள். அதை நீக்கிய பின் உள்ளே ஜோதியாக இறைவனைக் காணலாம்; நாதமாக இறைவனைக் கேட்கலாம்; மந்திரமாக அநுபவிக்கலாம்; பின் தீர்த்தமாக இறைவனைச் சுவைக்கலாம்.

கோவிலிலிருந்து வருவோரிடம் என்ன கொண்டு வருகிறீர்கள்? எனக் கேட்டால் கடலை, சாப்பு, பூ, பிரசாதம், விளையாட்டுப் பொருட்கள், திருநீறு என்று எத்தனையோ விடை வரும். ஆனால் மிகவும் முக்கியமான ஒருவனைத் தவறவிட்டு விடுவார்கள். அவன் தான் எம்மைப் படைத்த இறைவன். அவனை அழைத்து வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலிலே சிறிது நேரம் சும்மா இருந்து செல்லவேண்டும் எனப் பெரியோர் கூறுவர். சும்மா இருத்தல் என்ருல் என்ன? அங்கு நடந்தவையெல்லாவற்றையும் உள்ளே அழகாகக் கண்டு ஆனந்திப்பதுதான் நாம் எல்லோரும் அவற்றை நம்முள்ளே கண்டு ஆனந்திக்கின்ருேமா? நம்முள்ளிருக்கும் மாயைத் திரையை நீக்க வல்லார் யார்?

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

என்று அப்பர் சுவாமிகள் அழகாக அருளியுள்ளார். அதன்பொருள் விறகிலே தீ மறைத்திருப்பதைப் போலவும் பாலிலே நெய் மறைந்திருப்பதைப் போலவும் நம் உள்ளத்தே சோதிப்பிரகாசஞன இறைவன் மறைந்துள்ளான். நாம் உறவென்னும் கோல்நட்டு உணர்வாகிய கயிற்றினல் கடையும்போது அந்தச் சோதிப்பிரகாசன் வெளிப்படுவான். எங்கள் உள்ளக் கமலத்தை உறவு என்னும் மத்தினுலும் உணர்வு என்னும் கயிற்றினுலும் கடைவதற்கு உதவுபவரே குரு.

நமது சைவசித்தாந்தங்கள் எல்லாம் இறைவனே குரு வடிவாக வந்து ஆன்மாக்களை ஆட்கொள்வான் எனக் கூறுகின்றன. மாணிக்கவாசகர் குருந்தமர நீழலிலே குருவருளால் நம்முள்ளிருக்கும் கற்பனை கடந்த சோதியைக் கண்டார். இராமபிரானின் அருளால் அநுமன் அவனைக் கண்டான். கிருஷ்ண பரமாத்மாவின் கிருபையினுல் அருச்சுனன் கண்டான். நமக்கு யார் காட்டப் போகிருர்கள்? எங்களுக்கு அந்தப் பாக்கியம் இல்லை என்று நாம் அங்கலாய்த்துக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இறைவனுகிய கற்பனை கடந்த சோதி, கருணையே உருவமாகி, அற்புதக் கோலம் நீடி நம்மிடம் வருவான். வரும்போது நாம் அவனை அடையாளங் கண்டு அவன் காலை இறுகப் பற்றினேமானுல் அதுவே பெறுதற்கரிய பேருகும்.

ராதா—கந்தசாமி
வகுப்பு—10

---

# MY DOG

My mother gave me an alsation puppy on my sixth birthday. Its name is Tommy. He was very small then. I gave him a cup of milk. Now I give him rice, fish and meat.

He is grey in colour. He sleeps under my bed. He runs-after me. He never bites anyone. He lies in front of our house He watches the house. I love my Tommy.

Sutbamathy S.
Grade IV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MYSELF

I am Sivaganga. My father's name is Sivapragasapillai. He is a retired sports-officer. My mother is a teacher in my school. I have four brothers and two sisters. I have a grandmother too. I live at Uduvil. I am twelve years old. I am dark and fat. I am a Tamil Hindu girl. I am studying in grade six. I walk to school every-day. My pet is a dog. His name is Puppy. My hobbies are dancing and collecting stamps. I like playing games.

**Sivaganga S.**
Grade VI

## MY GRANDFATHER

My grandfather is a cheerful old man. He was born in Suthumalai. He was educated at Jaffna Hindu College. He retired as the Divisional Secretary of Health Services. He was a very good foot-ball player.

He is very fond of his grandchildren. He tells us stories and teaches us Nursery rhymes. He helps me to do my homework. When I read newspapers he listens to me.

We like sweets and chocolates. He buys a lot and shares them with us. In the evenings he comes out to the garden to play with us. He watches television with us. He is very kind and loving. We all like him very much.

**Sivakamavalli S.**
Grade VI

## MY VILLAGE

Kandarodai is my village. It is a big village. There are many people in my village. Most of the people are farmers. There are a lot of fields and gardens in my village. We have many schools, temples and shops. We have a dispensary and a sub post-office. Chunnakam, Inuvil, Uduvil and Manipay are our adjoining villages. We have bus service to most of the places. Chunnakam is our nearest town. I like my village very much.

**Sooriyalatha N.**
Grade VII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR PRINCIPAL

Mrs. R. Arunasalam. our principal has an association of 35 years as a teacher, deputy principal and principal at Ramanathan College. Throughout these long years she has served the school with devotion and immensely contributed to its advancement so much so that she has become inseparable from the institution and her name will ever be remembered by all of us. She is very much lovedy respected and held in high esteem not only by the teachers, students past and present but also by people in various walks of life.

"More things are wrought by prayer than this world dreams of." True to this saying we always see her every morning offering her prayer to Lord Nadarajah before she starts her round of duties in the school. This irresistible faith in the will of Providence has always given her the strength of character to pilot the school successfully in all its programmes and activities.

Ours is a school which has been founded by the great patriot Sir Ponnambalam Ramanathan to provide an education to Hindu girls in a truly Hindu atmosphere. True to this objective, Ramanathan College throughout the years has built up a tradition which is characteristic of the school—a tradition that has evolved a way of life to those who had gone out into the world. She herself is a shining example of the tradition. She always emphasises the fact that the students and teachers in the school should observe this tradition and themselves be the media to propagate it into the homes and the society around them.

Her contribution to the school are many and varied. Year by year students have entered the university for education, particularly in the fields of languages, humanities and fine arts. With the assistance of the well wishers of the school she has built an assembly hall which was a crying need in the school for a long time. The Home Science unit, the Agriculture unit, the Kindergarten block are other amenities which were introduced into the school during her period of office as Principal.

Her pleasing smile her soft and controlled speech her quiet and unassuming ways in which she deals with children and teachers and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

above all her motherly love and affection has endeared her to the hearts of all of us at Ramanathan College. We will ever remain grateful to her.

In the years of her retirement it is our prayer that Lord Iswara will be with her and her family and that she would live to enjoy the fruits of her honest labour for many more years to come.

**C. Rohini**
Grade XI Sc.

## OUR PRINCIPAL

The name of our principal is Mrs. R. Arunasalam. She is a very busy person. She comes to school early in the morning Our principal is a good and brave lady. She is very smart. She is honest and wise too. She advises us always to work hard. She is always kind

Our principal lives at Suthumalai. She comes to school by car. As soon as she comes she goes to the temple. Then she goes round the school on supervision.

Our principal wears beautiful sarees. She wears a pair of spectacles too. She likes to do hard work. I am always proud of our principal.

**Jeyanthini K.**
Grade 7A

## MY LIFE AT SCHOOL

My name is Ranjini. I am studying at Ramanathan College in Grade eight. I am a blind girl.

I came to school with my mother on the first day. I was taken to our principal and she welcomed me kindly. She sent me to my class. The pupils and teachers talked to me. I was very happy.

At school I study the same lessons as my classmates do. But my writing is different. It is called Braille. I touch the dots and read it. I cannot read the other books So I sit in front of the teachers table. I listen carefully and answer the questions. I write the answers and read it to teachers.

Our classmates and teachers help me in many ways. Our teachers help me by explaining the lessons. I cannot see and draw the pictures.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When they explain the pictures to me I imagine them. Our class mates help me to go to the library and science laboratory. They read aloud many books to me.

A teacher comes to help me twice or thrice a week. Her name is Miss A. Sinnathamby. She helps me to learn the lessons. She teaches me through the Braille.

Our teachers read the question papers and I write the answers. Miss Sinnathamby transcribes it by the sighted letters. Later the other teachers correct the answers. Sometimes I come first in my class. I won prizes in Tamil and English. My parents and teachers cheer me in many ways. My classmates and teachers like me.

**Ranjini V.**
**Grade VIII**

---

# எமக்கு இனியவர்

இராமநாதன் கல்லூரியில் இந்து கலாசாரத்தையும் சிறந்த தமிழ்ப் பண்பையும் கட்டிக்காத்துவரும் தலையாய பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் கல்லூரியில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலையான இடத்தைப் பிடித்துள்ளார் எமது அதிபர். இவர் அதிபராக அரும்பணியாற்றி, பத்துவருடங்கள் நிறைவு பெற்று விட்டன. திருமதி இராசநாயகம் அருணாசலம் அவர்கள் குமாரசாமி தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வியாகத் தோன்றினார். ஆரம்பத்தில் இருந்து உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்றார். தொடர்ந்து மேற்படிப்பை இந்தியாவில் கற்றுப் பட்டம் பெற்றார். ''கேடில் விழுச்செல்வம் கல்வி'' என்பதற்கமைய நன்கு கற்று தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மேம்பட்டவராய் விளங்கினார். அரசியல் சரித்திரம் ஆகிய பாடங்களிலும் மிகத் திறமை உடையவர்.

இயற்கையாகவே சைவமும், தமிழும் வளர்க்கும் ஆர்வம் உடையவர். சைவ நெறி தழைத்தோங்கவும், செந்தமிழ்ப் பண்பாடு செழித்து வளரவும் சேர் பொன். இராமநாதன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியில் ஆசிரிய சேவை ஏற்றார். மாணவிகள் மனம் சலிக்காத வகையில் அன்புடனும் ஆர்வத்துடனும் கல்வியைப் போதித்தார்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'' என்பதை மாணவர் எல்லோரும் உணர்ந்து அதனைப் போற்றும் வகையில் வழிநடத்தி வருகின்றார். இவர் 1945ஆம் ஆண்டில் இருந்து ஆசிரியராகப் பணியாற்றினார். 1966ஆம் ஆண்டில் இருந்து உப அதிபராகக் கல்லூரி நிர்வாகத்தில் கவனம் செலுத்தினார். இவரது திறமையும் அறிவாற்றலும் அதிபர் பதவியை 1969ஆம் ஆண்டில் ஏற்கச் செய்தன. அன்றுதொட்டு இன்றுவரை இக் கல்லூரியைச் சிறப்புற நிர்வகித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல அகில இலங்கையிலுமே இராமநாதன் கல்லூரிக்கு ஒரு நிலையான இடமும், அழியாத புகழும் உண்டு என்றால், அதற்கு எமது அதிபரின் தன்னலமற்ற சேவையும் தளராத திட சித்தமுமே காரணமாகும். இவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் எல்லாத்துறைகளிலும் கல்லூரி குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இசை, நடனம், உடற்பயிற்சி, விவசாயம், சமயம் ஆகிய துறைகளுக்கு வேண்டிய உதவிகள் அளித்து அவற்றை வளர்த்து வருகின்றார். இவரது சேவைக்காலத்தில் எமது கல்லூரியைச் சேர்ந்த கனிஷ்ட பிரிவு மாணவிகளும், சிரேஷ்ட பிரிவு மாணவிகளும் அகில இலங்கை ரீதியில் உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்றனர். அகில இலங்கை விவேகானந்த சபையால் நடத்தப்படும் சமயப் பரீட்சையிலும் முதலிடத்தை எமது கல்லூரி பெற்றது. எமது அதிபருடைய நிர்வாகத்தின்கீழ் ஆர்வத்துடன் படிக்கவரும் மாணவிகளின் தொகை பன்மடங்கு அதிகரித்து வருகின்றது.

ஒரு சிறந்த அதிபர் உள்ள கல்லூரியால்தான் திறமைமிக்க மாணவர்களை உருவாக்கமுடியும். இவரது உழைப்பும் ஊக்கமுமே பல மாணவிகளின் நல்வாழ்விற்கு வித்திட்டுள்ளது. பல மாணவிகள் உயர் கல்வி கற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர். இவ்வாறு எமது கல்லூரியில் பல அரிய சேவைகளை ஆற்றிய அதிபர் சமீபத்தில் ஓய்வு பெற இருக்கிறார். அதிபர் அவர்களைப் பாராட்டி எமது நன்றியைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமைப்படுகின்றோம்.

அன்புப் பொக்கிஷத்தை, பண்பின் இருப்பிடத்தை, அறிவின் ஒளிச்சுடரை, தன்னலமற்ற தாய்போன்றவரை என்றும் எமது உள்ளம் மறவாது. ''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று'' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கியமாய் விளங்கும் எமது இனிய அதிபரை நாம் என்றும் நினைந்து வாழ்வோம். அதிபர் அவர்களும் அவரது குடும்பத்தினரும் நீண்ட ஆயுளும் சிறந்த இன்பமும் பெற்றுவாழ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

க. சாந்தி
12-A3

---

# குறளில் காதல்

பெருங் கவிஞர்கள் மனித இயல்பினை உள்ளவாறு கண்டறியும் பேராற்றல் வாய்ந்தவர்கள் எனலாம். ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன் போல் இளங்கோ வைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' எனும் பாரதியின் வாக்கே வள்ளுவன் பெருங்கவிஞன் என்பதைப் புலப்படுத்தும். இவர் மனித இயல்பினை உள்ளவாறு கண்டறியும் பேராற்றலினாலேயே, மனித வாழ்வோடு பிரிக்க முடியாதபடி கலந்திருப்பதும், வாழ்க்கையை உயிர்த்துடிப்புடையதாக மாற்றுவதுமான காதலுக்குத் தம்முடைய குறளில் ஒரு தனி இடத்தையே ஒதுக்கியுள்ளார். காதல் மிகவும் சக்தி வாய்ந்தது. மனித வாழ்க்கையை அழகுபடுத்துவது. காதற் பூங்காவனம் இளமை உலகத்தையே புதுப்பிக்கின்றது. இந்த விந்தையான காதலின் போக்கைப் புலவர்களும், எழுத்தாளர்களும் படுத்திவைத்திருக்கும் பாடு கொஞ்சநஞ்சமல்ல. கவிதைகளுக்கும், கதைகளுக்கும் அடிநாதமாக அமைவதே காதலின் விசித்திர விளையாட்டுக்கள்தாம். ஆயினும் அது காலம் இடம் என்ற பேதமின்றி இன்றுவரை புதுமை குலையாமல் நிலைத்துநிற்கின்றது. ஆங்கிலக் கவிஞன் தன் நாட்டிற்கேற்ற போக்கில் காதற் கதையைப் புனைகின்றான். தமிழ்க் கவிஞன் தன் நாட்டுக் களவுக் காதலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவியம் ஆக்குகின்றான். இவ்வாறு காலமும் இடமும், காதலின் விசித்திரப் போக்கைப் பலவாகக் காட்டிநிற்கின்றன. இங்கே நம் தமிழ்நாட்டுக் களவுக் காதல் வள்ளுவர் குறளில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம்.

காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள். ஏனெனில் அது மலரும்போது அழகையோ செல்வத்தையோ பார்த்து மலர்வதில்லை. ஆனால் மலர்ந்தபின் அங்கே அழகையும் செல்வத்தையும் காணும். அன்பு இருந்தால் அங்கே அழகு தெரியும். ஒவ்வொரு காதலனுக்கும் அவனுடைய காதலி தேவதையாகவே தோற்றமளிப்பாள். இங்கே வள்ளுவன் காட்டும் காதலனும் தன் காதலியின் அழகுத் தோற்றத்தைக் கண்டு மதிமயங்கித் தடுமாறுகிறான்.

''அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.''

இவ்வாறு தடுமாறியவன் மேலும் கூர்ந்து நோக்குகிறான். அப்போது பார்த்த அவன் பார்வைக்கு அவள் எதிர்ப்பார்வை பார்த்தமை, அவள் தோற்றம் மட்டுமல்ல அதற்குத் துணையாக விழியில் இருந்து ஒரு சேனையே புறப்பட்டு வந்து தன்னைத் தாக்கியது போன்ற உணர்வை அடைகிறான்.

''நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.''

அவ்வாறு அவள் பார்வையினால் தான் அடைந்த வேதனையை அவனுக்கு இன்ன தென்று கூறத் தெரியவில்லை. ''இதயமெலாம் நொறுங்குவது போன்று இருக்கின்றதே, இதுதான் மரணவேதனையோ?'' என்று எண்ணுகின்றான். உடனே அவ்வாறான வேதனையைத் தந்த அவள் கண்களை இயமனுக்கு ஒப்பிடுகின்றான்;

''பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையாள் பேரமர்க் கட்டு.''

சிறிது நேரம் இந்த இன்பதுன்பப் போராட்டத்தில் சிக்கி இருந்தவன் காதலியின் நிலையை அறிவதற்காக மெல்ல அவளை நோக்குகிறான். இங்குதான் குறிப்பறிதல் என்னும் அதிகாரம் ஆரம்பமாகின்றது: தகையணங்குறுதலில் தானுற்ற நிலையினைக் காதலிக்கு உணர்த்தமுன் அவள்நிலை என்ன என்பதைக் குறிப்பால் அறிய முற்படுகிறான். அங்கே அவள் நேரடியாக அவனை நோக்காமல் மறைமுகமாக நோக்குவதும் பின்பு மெல்லத் தலைகுனிந்து சிரிப்பதுமாக இருக்கிறாள். இதுவே அவளும் தன்மீது காதல் கொண்டுள்ளாள் என்பதை அவனுக்கு உணர்த்துகிறது.


''யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.''

இவளுடைய கண்கள் அவன் பார்க்காதபோது அவனைப் பார்க்கின்ற செயலானது அவனைப் பொறுத்தவரையில் காதல் வெற்றியில் பாதியைக் கடந்துவிட்ட உணர்வை ஏற்படுத்துகின்றது. எத்தனையோ வாக்குறுதிகளும் சத்தியங்களும் ஏற்படுத்தாத நம்பிக்கையை இச்சிறு செயல் அவனிடத்தில் ஏற்படுத்திவிடுகிறது.


'கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.''

ச. கௌரி பிரியதர்சினி
12A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Principal with Hostel Students



Principal with Advanced Level Students

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் மன்றம்

போஷகர்: திருமதி இ. அருணுசலம்
பொறுப்பாசிரியர்கள்: திருமதி ஞா. சோமசுந்தரம்
,, க. அருள் தியாகராசா
,, ச. அப்பாத்துரை
,, பு. சண்முகலிங்கம்

## நிர்வாகக்குழு

தலைவர்: செல்வி நித்திலா முத்துக்குமாரசாமி
உபதலைவர்: ,, கேதீஸ்வரி சிவராமலிங்கம்
இணைச் செயலாளர்: ,, சுவர்ணலதா சோமசுந்தரம்
,, சாந்தமலர் நாகலிங்கம்
பொருளாளர்: ,, சிவஜோதி திருச்செல்வம்

இராமநாதன் கல்லூரியில் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகள் ஆரம்பமானதை அடுத்து உதயமான உயர்தர வகுப்புமாணவர் மன்றம் இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றது. நல்லறிஞர் உரைகளைக் கேட்கவும், நல்ல பேச்சாளர்களை உருவாக்கவும், மாணவர்கள் தம்முட் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இம் மன்றம் வாய்ப்பினை அளிக்கின்றது. 1975ஆம் ஆண்டு தொடக்கம் எம்மன்றம் ஆண்டுதோறும் இராப் போசன விருந்தையும் நடாத்தி வருகிறது. இவ்வாண்டு நடைபெற்ற இராப்போசன விருந்தில் சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அவர்களும், எம் கல்லூரிப் பழைய மாணவியாகிய அவர்தம் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். எம்மன்றம் பயன்தரு முறையிற் செயற்பட ஆலோசனை வழங்கும் பொறுப்பாசிரியர்கட்கும், எமக்குச் சகலவிதத்திலும் ஊக்கமும் உதவியும் அளித்து வரும் அதிபர் அவர்கட்கும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையோம்.

பல வருடங்களாக எமது மன்றப் பொறுப்பாசிரியர்களுள் ஒருவராக விளங்கிய திருமதி க. அருள் தியாகராசா அவர்களின் மறைவு குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

சுவர்ணலதா சோமசுந்தரம்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியியல் மன்றம்

தலைவர்: செல்வி அ. ஸ்ரீகாந்தலட்சுமி

உப தலைவர்: செல்வி பா. பாலசுசிலேன்மணி

செயலாளர்: செல்வி அ. சற்குணராணி

உப செயலாளர்: செல்வி த. தேவிப்பிரசாதம்

தனாதிகாரி: செல்வி வே. சிவயோகேஸ்வரி

வழமைபோல் எம் மன்றம் தன் வழக்கமான பணிகளுடன் வேறும் பல புதுப்பணிகளை ஆற்றியுள்ளமையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

சில பேச்சாளர்களை வருவித்துப் புவியியல் தொடர்பான விடயங்களில் அறிவூட்டப்பட்டன. புவியியல் பாடத்தில் ஆர்வத்தைப் பெருக்கவும், அறிவை வளர்க்கவும், பல கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டன. சரித்திர, புவியியல், சமய, பண்பாட்டு இடங்களாகிய அநுரதபுரி, தலைமன்னார் கப்பற் துறைமுகம், திருக்கேதீஸ்வரம், துணுக்காய், கிளிநொச்சி விவசாயப்பண்ணை, இரணைமடு, யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் வட கடற்கரைப் பிரதேசங்கள், நயினாதீவு, யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் கைத்தொழிற்பேட்டை நகர் ஆகிய இடங்களுக்குப் பல்வேறு வகுப்புப் புவியியல் மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இத்தகைய சுற்றுலாக்கட்கு எமது போஷகரும் கல்லூரி அதிபருமாகிய திருமதி இ. அருணாசலம் அவர்கள் தமது பூரண ஒத்துழைப்பையும், உதவியையும் அளித்தார். அதற்கு எமது நன்றி.

எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது புவியியல் ஆசிரியைகளான திருமதி யோ. இராஜரத்தினம், திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளை அவர்களுக்கும் எமது மன்றத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றி.

செல்வி அ. சற்குணராணி
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GAMES & ATHLETICS REPORT

It gives me great pleasure in presenting the report of Games and Athletics for the period under review (1975—1980). In 1975 the annual sports meet was held as a "Home Meet",. Though it was a Home Meet, it was organised and carried out according to A. A. Arules. Our students showed great promise in Athletic at the Athletic Meets held annually from 1976 to 1979. At the P. T. competitions held in 1976, our under 13 squad won the first place. The first place at the same event was won by our under 17 squad as well.

Our Junior Squads showed its best at the 1977 all Island P. T. competition by winning the first place and also the best performance shield. The next year too. our P. T. squads fared very well. The under 17 squad won the first place, at the District level and at the circuit level P. T. competition. Our under 13 squad won the first place at the circuit level P. T. competition.

Our under 13 squad deserves special mention for its success even in 1979. We won the first place at the circuit level and at the District level P. T. competitions. At the all Island P. T. competition held in Colombo our under 13 squad won the 2nd place. In 1980 our under 17 squad was placed first at the circuit level P. T. competition.

Our students have done satisfactorily well at the athletic meet held in 1979 at the circuit level.

Our girls have shown great enthusiasm in Physical Training and have reaped the success due to their enthusiasm.

I take this opportunity to thank all the participants and the teachers for their cooperation in making my work a success.

**Teacher-in-charge**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி இல்லம்

பொறுப்பாசிரியை: திருமதி சிவயோகமலர் திருஞானசுந்தரம்
உதவியாசிரியை: திருமதி சாவித்திரி பரராசசிங்கம்
இல்லத்தலைவி: செல்வி நளினு மண்டலநாயகம்
உப தலைவி: செல்வி கௌரி—சிவபெருமான்

பச்சைப் பசேல் என மிளிரும் பசுமை நிறைந்த அருந்ததி இல்லத்தின் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது நான் பேருவகை அடைகின்றேன். இயற்கையின் எழிலிற் பொலிந்துநிற்கும் எமது இல்லம் தனது அலங்காரத்தில் முதலிடத்தைப் பெற்று முன்னணியில் நிற்கிறது.

சென்ற வருடம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் எமது இல்ல மாணவிகள் எமது இல்லத்துக்காகவும் போட்டிகளின் உயர்வுக்காகவும் போட்டிகளிற் பங்குபற்றித் தமது திறமைகளைக் காட்டியுள்ளனர். விளையாட்டுப் போட்டியின் இடைவேளையின்போது நடைபெறும் விநோத உடைப் போட்டியில் செல்வி மாலினி பரராசசிங்கம் கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ந்து முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவிகளின் உயர்வுக்காகவும் அயராது உழைத்து அரும்பாடுபட்டுத் தற்போது ஓய்வு பெற்றுச் செல்லும் பெருமைக்குரிய அதிபர் அவர்கள் தமது ஆசிரிய சேவைக்காலத்தில் அருந்ததி இல்லத்தில் இருந்து அயராது உழைத்தார் என்பதைப் பேருவகையுடன் கூறிப் பெருமையடைகிறேன்.

இறுதியாக இல்லவளர்ச்சியின் பொருட்டு அரும்பாடுபட்டு அல்லும் பகலும் உழைத்த ஆசிரியைகட்கும், விளையாட்டு வீராங்கனைகளுக்கும், இல்லத்தின் அங்கத்தவர்களுக்கும் எனது மனப்பூர்வமான உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

செல்வி நளினு மண்டலநாயகம்
இல்லத்தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீலாவதி இல்லம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியை: | திருமதி சு. விவேகானந்தன் |
| இல்ல ஆசிரியைகள்: | செல்வி இ. சின்னத்தம்பி |
| | திருமதி சி. குமாரசாமி |
| | திருமதி அ. சிவகுலசிங்கம் |
| | திருமதி சோ. கைலாசநாதன் |
| | திருமதி க. உலகேஸ்வரன் |
| இல்லத்தலைவி: | செல்வி கௌரி தம்பிரத்தினம் |
| உதவியாளர்: | செல்வி லோகேஸ்வரி சுப்பிரமணியம் |

சென்ற வருடம் எமது இல்லம், விளையாட்டுப் போட்டியில் மூன்றும் இடத்தைப் பெற்றுள்ளது. செல்வி குமுதா—சின்னத்துரை (மத்திய பிரிவு) செல்வி ஜெயந்தி—கந்தப்பிள்ளை (சிரேஷ்ட பிரிவு) ஆகிய இருவரும் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்று எமது இல்லத்திற்குப் பெருமையைத் தந்துள்ளனர். அணிவகுப்பிலும் விநோத உடைப் போட்டியிலும் எமது இல்லம் தவறாது பரிசு பெற்று வருகிறது, எமது இல்ல ஆசிரியர்கள் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தனர். இல்ல ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

செல்வி கௌரி தம்பிரத்தினம்
இல்லத்தலைவி

---

# தமயந்தி இல்லம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியை: | திருமதி சா. நாகநாதன் |
| இல்ல ஆசிரியைகள்: | திருமதி P. S. குமாரசாமி |
| | திருமதி வி. சிவசுப்பிரமணியம் |
| | திருமதி சா. சிதம்பரநாதன் |
| | திருமதி தே. பேரின்பநாயகம் |
| | திருமதி ஈ. பாலச்சந்திரன் |
| இல்லத்தலைவி: | செல்வி சித்திரா க. |
| உப தலைவி: | செல்வி மலர்மகள் இ. |

விளையாட்டுப் போட்டியில் சென்ற வருடம் எமது இல்லம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. செல்வி செல்வராணி செல்லத்துரை சிரேஷ்ட பிரிவில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்று இல்லத்துக்குப் புகழையீட்டியுள்ளார். அணிவகுப்பில் எமது இல்லம் முதலாம் இடத்தையும், விநோத உடைப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. மாணவர்கள் மிக உற்சாகத்துடன் இல்லப் போட்டிகளில் பங்குபற்றினர். இல்ல ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டிப் போட்டியைச் சிறப்புறச் செய்தார்கள். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

செல்வி சித்ரா க
இல்லத் தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி இல்லம்

பொறுப்பாசிரியை: திருமதி. பு. திடவீரசிங்கம்

இல்ல ஆசிரியைகள்: திருமதி. க. தியாகராசா
திருமதி. ந. ஆனந்தரத்தினம்
திருமதி. செ. கார்த்திகேசு
திருமதி. தை. தம்பிரத்தினம்
திருமதி. இ. முருகரத்தினம்
திருமதி. ப. பத்மநாதன்
திருமதி. செ குணநிதி
செல்வி ஜெ. நமசிவாயம்

இல்லத் தலைவி: செல்வி பவானி. குணரத்தினம்

உபதலைவி: செல்வி ஜெகதீஸ்வரி சிவராமலிங்கம்.

இவ்வருடம் நடைபெற்ற இல்லவிளையாட்டுப் போட்டியில் எமது இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது. இல்ல அலங்காரத்தில் எமது இல்லத்திற்கு இரண்டாம் இடம் கிடைத்தது, விநோத உடைப் போட்டியில் முதலாம் இடம் கிடைத்தது. கனிஷ்ட பிரிவில் செல்வி சுலோஜனா. விக்னேஸ்வரமூர்த்தி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்று எமது இல்லத்துக்குப் புகழை ஈட்டியுள்ளார். இல்ல மாணவர்கள் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு உற்சாகமூட்டிப் போட்டியைச் சிறப்பித்தார்கள். இல்ல ஆசிரியர்களும், மாணவர்களுக்கு உற்சாகமூட்டினார்கள். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

செல்வி பவானி குணரத்தினம்
இல்லத் தலைவி

---

## GUIDE REPORT

*Guide Captain:* **Mrs. S. Kalyanasundaresan**
*Lieutenant:* **Mrs. E. Balachandran**
*Patrol Leaders:* **C. Kalyani**
**K. Anusuya**
**K. Jeyaranee**
**S. Inpalatha**
**I. Gowri**
**K. Thayanithi**

The Fourth Jaffna Guide Company feels proud in submitting the report for the year under review. We have thirty six, smart and persevering guides in our company, and 21 of us are Second class Guides. True to the motto "Be Prepared" our guides are ever ready to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

render helping hands to the needy, We take pride in helping our school during the time of various school functions like the Sports Meet, Founder's Day and Prize Giving. Our guides have earned numerous proficiency badges. Since our school invites very often distinguished guests, we always have the privilege of forming Guard of Honour to them. Every year we celebrate our Founder Lord Baden Powell's Thinking Day by service and prayers.

Each guide has a record book where she enters every day what she does as a help to the needy, old and the sick. We always help in cleaning the premises of our College.

Our thanks are to Mrs. S. Kalyanasundaresan and Mrs. E. Balachandran for their help and advices. This year we hope to help the sick and the poor in our village with old clothes, and the small children with the toys we make and we are working hard towards this target

**A Guide**

---

# இராமநாதன் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபை

போஷகர் : திரு. R. N. சிவப்பிரகாசம்
உப போஷகர்கள் : திரு. S. விஸ்வலிங்கம்
திரு. எஸ். முத்துலிங்கம்
தலைவர் : திருமதி R. அருணசலம்
உப தலைவர் : திருமதி Y. இராஜரத்தினம்
செயலாளர்கள் : திருமதி S. கல்யாணசுந்தரேசன்
திரு. C. சிவப்பிரகாசபிள்ளை
பொருளாளர் : திருமதி G. சோமசுந்தரம்

1974ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நடைபெற்று முடிந்த சபையின் ஆக்க பூர்வமான திட்டங்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்ததையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்ரோம்.

பின்வரும் விடயங்கள் இனிதே நிறைவேற்றப்பட்டன.

1. புதிய மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு மின்னிணைப்பும் பொருத்தப்பட்டமை.
2. விவசாயப் பிரிவு விஸ்தரிப்பு ஒப்பேறியமை.
3. பாலர் வகுப்புக் கட்டடமும், திறப்பு விழாவும் நடைபெற்றமை.
4. பாடசாலை இலவச புத்தக விநியோகத்தில் பங்குகொண்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நலன் விரும்பிகள், பெற்ருேர் தினவிழா கொண்டாடியமை.

6. மலசலகூடங்கள் அமைத்தமை.

7. 1979ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா நூல்களுக்கான செலவுகள் கொடுத்துதவியமை.

8. கட்டடங்கள் வெள்ளையடிக்கப்பட்டமையும் திருத்தவேலைகள் செய்யப்பட்டமையும்

9. ஆசிரியை திருமதி அருள் தியாகராஜாவின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தமை

பின்வரும் விடயங்கள் சபையினுல் ஏகமனதாசத் தீர்மானிக்கப்பட்டுச் செயற்படவுள்ளன.

1. மனையியற் பிரிவுக் கட்டடம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

2. பாலர் பூங்கா,

3. புதிய மண்டபத்தின் முன்றலில் சேர் பொன். இராமநாதன் அவர்களின் சிலை நிறுவுதல்,

4. புதிய மண்டபத்திற்கு அதிபர் திருமதி R. அருணுசலம் பெயர் சூட்டல்,

5. அதிபர்கள், துணை அதிபர்கள் பெயர்ப்பட்டியல் வரிசைக் கிரமமாய் அமைத்துப் புதிய மண்டபத்தில் பதித்தல்.

6. கல்வித் திணைக்களத்தார் நடாத்திவரும் புத்தூக்க வகுப்புக்களுக்கு மேலதிக தளபாடங்களைக் கேட்டுப் பெறுதல்.

7. அதிபர் திருமதி இ. அருணுசலம் அவர்களின் சேவையைப் பாராட்டிச் சிறப்பான பிரியாவிடை வைபவம் நடத்தல்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட அதிபர். சபைப் போஷகர், உப போஷகர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் அனைவர்க்கும் எமது நன்றியைப் பணிவுடனும் அன்புடனும் தெரிவித்துக்கொள்கிருேம். எமது மானிப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு பெருந்தொகையான பணத்தை ஒதுக்கி, கட்டடங்கள் அமைக்கப் பெரிதும் உதவியிருக்கின்ருர். அன்னுர், கல்லூரிப் பல்துறை வளர்ச்சியிலும் கருத்தூன்றிக் கடமையாற்றுபவர். அவருக்கும் எங்கள் உள்ளங்கனிந்த நன்றி உரித்தாகுக. கலைநிகழ்ச்சிகள் மூலம் கட்டடநிதிகள் திரட்டமுயன்றபோது, பல்வேறு வகையில் உதவிய பழைய மாணவர், பெற்ருேர், நலன்விரும்பிகள் அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம். சிறப்பாக வர்த்தகப்பிரமுகர்கள் திரு. S. சின்னத்துரை சகோதரர், புன்னுலைக்கட்டுவன் திரு. S. இராசரத்தினம் அவர்களுக்கும் எமது நன்றி.

திருமதி S. கல்யாணசுந்தரேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாடசாலைகளில் பெற்றோர்களுடைய பங்கு"

திரு. ச. முத்துலிங்கம்
(உபபோசகரும் பெற்றாரும் — அபிவிருத்திச் சபை)

எந்தவொரு நாட்டினதும், நகரத்தினதும், கிராமத்தினதும் நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், சமய அனுட்டானம் அவ்வப்பகுதிப் பாடசாலைகளினது முன்னேற்றத்தில் தங்கியுள்ளது.

எனவே, பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இல்லத்திற்கு அணித்தாகவுள்ள கிராமங்களிலோ, அல்லது தலைநகரிலோ உள்ள பாடசாலைகளில் தங்கள் பங்கை முழு மனத்தோடும் ஆர்வத்தோடும் செயற்படுத்த வேண்டும். பாடசாலைகளில் எமது பிள்ளைகளின் முன்னேற்றங்கள், ஒழுக்கங்கள் எந்த அளவில் இருக்கிறது என்பதை ஆசிரியர்கள் வாயிலாகக் கேட்டறிவது முதற்கடமை.

கேட்டதிலிருந்து தமது பிள்ளைகளின் குறைகளை ஆசிரியரின் புத்திமதிக்கேற்ப திருத்துவதற்கு ஆவன செய்யவேண்டும். சென்ற பல ஆண்டுகளுக்கு முன் எமது சமுதாயத்திலே இந்நிலை இருந்துவந்தது. அக்காலங்களில் குருவின் காணிக்கை பெற்றோர்களாலேயே கொடுக்கப்பட்டு வந்தது. அந்நிலை மாற்றப்பட்டு பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கணக்கிட்டு ஆசிரியர்களுக்குச் சன்மானம் வழங்கப்பட்டுவந்தது.

"தந்தை மகற்காற்றும் உதவி" என்னும் வள்ளுவன் சொல்லுக்கு நாம் மதிப்பளித்து பாடசாலையில் நடக்கும் எந்த ஒரு கருமங்களிலும் கைகொடுத்து உதவுவோமேயானால், எமது பிள்ளைகளின் அன்பு, அறிவு, ஆற்றல், ஒழுக்கம் தானாகவே உயரும்.

உயருகின்ற நேரத்தில் நாவலர் போல், விபுலானந்தர்போல், வித்துவான் கணேசஐயர் போல் அறிவு உள்ளவர்களாகவும், ஏன் எங்கள் பாடசாலை அதிபர் திருமதி அருணாசலம் போல் பண்புள்ளவர்களாகவும் முடியும். எனவே,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்னும் பெருந்தகையின் வாக்கை நினைவுபடுத்தி பாடசாலை அபிவிருத்திச் சபைகள் தமது கடமைகளைச் செய்யவேண்டுமெனக் கேட்டு இம்மலரை வெளியிடும் மலர்க்குழுவை மனமார வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J/RAMANATHAN COLLEGE—CHUNNAKAM

## STAFF—1980

Mrs. R. Arunasalam, B. A. (Madras) Post Graduate Trained, Teacher Counsellor's Cert.
**Principal Grade I**

Mrs. Y. Rajaratnam, B. A. (Madras) Dip-in-Ed. (Cey,) Tamil Trained Teacher's Cert.
**Deputy Principal**

Mrs. G. Somasundaram, B. A. Hons (Cey.) Dip-in-Ed. (Cey.)
Sectional Head (Languages)
Mrs. N. Anandaratnam, B. A. Hons (Cey.)
Mrs. S. Appadurai, B. A. (Annamalai)
Sectional Head (Social studies)
Mrs. C. Karthigesu, B. A. (Madras)
Mrs. B. Shanmugalingam, B. A. Hons. (London)
Mrs. V. Sivasubramaniam, B. A. (Annamalai)
Mrs. K. Sundaralingam, B. A. (Madras)
Mrs. S. Pararajasingam, B. A. (Madras)
Mrs. P. S. Cumarasamy, B. A. (Lond.)
Mrs. A. Sivapiragasapillai, M. A. (Madras) Dip-in-Ed. (Ceylon)
Mrs. P. Pararajasingam, B. Sc. (Madras)
Sectional Head (Technical Studies)
Miss Y. Kanagaratnam. B. A. (Ceylon) Dip-in-Ed. (Merit) (Cey.) Teacher Counsellor's [Certificate
**Special Post Gr. II**
Mrs. S. K. Sundaresan, B. Sc. (Madras), Dip-in-Ed. (Merit) (Cey.) [Teacher Counsellor's Cert.
**Special Post Gr. II**
Mrs. S. S. Kumarasamy, B. A. (Ceylon) Dip-in-Hindu Civil. (Jaffna) [Teacher Counsellor's Cert.
**Special Post Gr. II**
Mr. V. Ehamparanathan, B. Sc. (Madras)
Mr. S. Ramathilagam, B. Sc. (Ceylon) Dip-in-Ed. (Ceylon)
Mr. S Amirthaligam, B. Sc. (Lond.)
Sectional Head (Science)
Mr. A. Kalyanasundaresan, B. A. (Madras), Dip-in-Ed. in Drama (Cey.)
Mrs. S. Kailasanathan, B. Sc. (Madras) Dip-in-Ed. (Ceylon)
Miss B. Rajadurai, B. A. (Madras)
Mrs. S. Sithamparanathan, B. Sc. (Madras)
Mrs. S. Naganathan, B. Sc. (Madras)
Mrs. S. Vivekanandan, B. A. (London)
Mrs. P. Thamotherampillai, B. Sc. (H. Sc.) (Madras)
Mrs. S. Yogalingam, B. Sc. (Ceylon)
Miss M. Kanapathipillai, B. Sc. (Ceylon)
Mrs. K. Shanmmgalingam, Sp. Trained Science (Palaly)
Mrs. A. O. Kanagasingam, Sp. Trained English (Palaly) First Class
Mrs. R. Vinayagamoorthy, Sp. Trained English (Palaly) First Class
Mrs. R. Ganeshalingam, Sp. Trained English (Palaly) First Class
Mrs. T. Jeyasinghe, Sp. Trained Maths (Palaly) First Class

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250144



The Principal with the Staff and non Teaching Staff

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs. P. Pathmanathan, Sp. Trained Commerce (Palaly) First Class
Mrs. K. Ulageswaran, Sp. Trained Science (Palaly) First Class
Mrs. D. Perinpanayakam. Sp. Trained Science (Palaly) First Class
Miss S. Swaminathan, Sp. Trained Home Science (Palaly)
Mrs. M. Thilagaratnam, Inter Arts (London)
Miss T. Arumugam, G. C. E. A/L (Lond)
Mrs. P. Kumarasamy, Physical Trained
Mrs. T. Thambiratnam, Dip-in-Art
Miss Y. Chelliahpillai, Sangeetha Booshanam (Annamalai)
Mrs. P. Erambamoorthy, Dip-in-Agriculture (Palaly)
Mrs. S. Gunanithy, Dip-in-Agriculture (Palaly)
Mrs. T. Chelliah, Tamil Trained Teacher's Certificate (First Class)
Supervisor Lower School
Miss L. Sinnathamby, Tamil Trained Teacher's Certificate (First Class)
Mrs. S. Sinnathurai, Tamil Trained Teacher's Certificate (First Class)
Mrs. S. Thuraisingam, Tamil Trained Teacher's Certificate (First Class)
Mrs. S. Thirugnanasundaram, Tamil Trained Teacher's Certificate (First Class)
Mrs. R. Murugaratnam, Industrial School Certificate (First Class)
Miss M. Velupillai, Tamil Trained Teacher's Certificate (First Class)
Mrs. E. Balachandran, B. Sc. (Madras)
Mrs. S. Sivanesan, Special Trained Dance (Palaly), Dip-in-Dance
Mrs. R. Sivanandan, Special Trained (Music)
Mrs. A. Sivakulasingam, English Teacher's Certificate (First Class)
Mrs. A. Kanagaratnam, Tamil Trained Teacher's Certificate, (First Class)
Mrs. S. Pararajasingam, Tamil Trained Teacher's certificate (Nallur) (First Class)
Mrs. S. Rajanathan, Tamil Trained Teacher's Certificate (First Class)

**Facilities Fees**

Miss S. Sivasamboo, Diploma in Pre-School Education
Miss. K. Sivapragasam, G. C. E. A/L
Miss N. Pararajasingam, Dip-in-Dance (Madras)
Mrs. K. Sinnathamby, B. A.

**Non-Teaching Staff**

Mrs. P. Shanmugasundaram, Clerk
Mr. S. Kanagaratnam, Clerk
Mrs. P. Arulnanthy, Clerk
Mr. V. Gopalasingam Lab Asst.
Miss R. Ratnam, Lab Asst.
Mr. M. Subramaniam
Mrs. R. Leelawathy
Mr. K. Ratnasingam
Mr. K. Thambiah

**Hostel Staff**

Miss K. Namasivayam
Miss M. Kandiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Our Thanks:**

*Our grateful thanks are due to the,*

1. *Hon. Minister Mr. Ranil Wickramasinghe, Minister of Education,*
2. *Hon. Leader of the opposition: Mr. A. Amirthalingam,*
3. *Hon. Minister of Justice : Mr. Nissanka Wijayaratne,*
4. *M. P. for Manipay : Mr. V. Tharmalingam,*
5. *Secretary & Director General of Education: Mr. Eric De Silva,*
6. *Deputy Director General of Education: Mr. George Mendis,*
7. *Director of Education N. R. : Mr. T. Manickavasagar,*
8. *Additional Director of Education, Jaffna: Mr. K. Sivanathan,*
9. *M. P. for Chavakachcheri: Mr. V. N. Navaratnam,*
10. *Vice-Chancellor–Jaffna University: Mr. S. Vithiyanandan,* and
11. *C. E. O. Manipay Circuit: Mr. S. Thananchayan,* for

their valuable Messages.

**We also thank,**

1. *The educationists for their contributions.*
2. *The members of the Staff, Students and non-teaching staff for their cooperation in bringing out this Number.*
3. *The schools and institutions that sent us their Magazines.*
4. *The members of the S. D. S., old girls and well wishers for patronising the College Magazine.*
5. *The Thirumakal Press — the publishers, staff and workers for their efficient service.*

Our acknowledgement will be incomplete without a special word of Thanks to Mr. T. Manickavasagar, Director of Education, Jaffna (at present in the Ministry of Education).

*Accept my thoughts for thanks, I have no words* —Moses

**Mrs. R. Arunasalam,**
*Principal*

**A. Kalyanasundaresan,**
*Member in Charge of Messages*
*& Special articles—Magazine Committee*

UNIVERSITY OF JAFFNA CEYLON
RECEIVED
1986 -9- 3
PERIODICALS
DIVISION
LIBRARY
University of Jaffna
250144
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at the Thirumakal Press, Chunnakam and published by the Principal
Ramanathan College, Chunnakam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org